SANITARY FITTINGS



பர்ன் வெண்ணிற சலவைக்கல் சானிடரி பிட்டிங்குகள். இதைப்போன்ற மற்ற போர்ஸிலின் அல்லது களிமண் தயாரிப்புகளைக் காட்டிலும் உறுதியுள்ளவைகளாதலால் நீடித்த காலம் ஆரோக்கியமாய் உழைக்கும்.

அழகான அமைப்பு, அற்புத தோற்றம். இவை சுலபமாக உடையாது, வெடிக்காது. சுலபமாக சுத்தம் செய்யலாம்.

இந்தியாவில், இந்திய ஊழியர்களைக்கொண்டு, இந்திய மூலதனத்தைக் கொண்டு தயாரிக்கப்படுவது. மிதமான விலை. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சாமான்களின் ரகத்திற்கு இணையானது.

விவரமான புத்தகம் கேட்போருக்கு இலவசமாக அனுப்பப்படும்.

BURN & CO., LTD.

ESTABLISHED 1781

12, MISSION ROW, CALCUTTA.

WORKS AT RANIGANJ AND JUBBULPORE

SAVE FOR VICTORY
BRITISH WAR SAVINGS MOVEMENT
ASK YOUR BANK

பர்ன் & கம்பெனி லிமிடெட்,

ஸ்தாபிதம் : 1781

12, மிஷன்ரோ, கல்கத்தா.

தொழிற்சாலை : - ராணிகஞ்சு & ஜபல்பூர்.

சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள்:—

பம்பாய் கம்பெனி லிமிடெட், த. பெ. நெ. 109, மதராஸ்.

3 காரணங்கள்

501

நாங்கள் 501 ஸ்பெஷல் உபயோகிப்பது ஏன்?

501 ஸ்பெஷல் அழுக்கு பூராவையும் க்ஷணத்தில் போக்குகிறது. துணிகளைத் தனி வெண்மையாக்குகிறது.

501 ஸ்பெஷலில் துணிகளுக்கு ஹானிகரமான வஸ்துவொன்றுமில்லை. அதன் அபரிமிதமான நுரை மெல்லிய ஆடைகளுக்கு ஒரு கெடுதியும் செய்யாது.

501 ஸ்பெஷல் க்ஷணப்பொழுதில் ஏராளமான நுரையளிப்பதால் வீட்டில் துணிமணிகள் வெளுப்பதை எளிதாக்குகிறது.

மிருகக் கொழுப் பற்றது.

501 ஸ்பெஷலைத்தவிர 501 வாஷிங்ஸோப்பு ஒன்றும் உள்ளது. அதன் விலை இன்னும் குறைவு. நம் வீட்டில் எல்லா அவசியங்களுக்கும் தகுந்த ஸோப்பு. கியூபுகளாகவும், நீளக் கட்டிகளாகவும், வில்லைகளாகவும் சீவல்களாகவும் எல்லாப் பெரிய கடைகளிலும் கிடைக்கும். 501 ஸ்பெஷல் வில்லைகளாக 3 சைஸ்களில் பெட்டிகளில் பாக் செய்து விற்கப் படுகிறது.



டாம்கோ விற்பனை இலாகா :
1, வாரன் ரோட், மீமன்பேட், மைலாப்பூர், மதராஸ்.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட், டாடாபுரம் & பம்பாய்.

ரூ. 10,000 மதிப்புள்ள கடியாரங்கள் இலவசம்

எமது உண்மையான மருந்து **"ஜோஹர் - இ - ஹேசன்"** அனாவசியமான ரோமத்தை விலக்கிவிடும். அதன் உபயோகத்தால் ஆயுள் பூராவும் ரோமம் வளராது சருமம் மிருதுவாகவும், அழகாகவும், பட்டுப் போன்றும் இருக்கும். விலை பாட்டில் ரூ. 1/15. மூன்று பாட்டில் ரூ. 5/-

இந்த ஆயிலை பிரபலப்படுத்துவதற்கு அழகிய மியூட் கைகடியாரம், ஒரு தோலா லண்டன் நியூ கோல்ட், ஒவ்வொரு பட்டியுடன் இலவசமாகக் கொடுக்கப்படும். 3 பாட்டில்கள் சேர்ந்தாற்போல் வாங்கினால் நான்கு கைகடியாரம், 4 தோலா லண்டன் நியூ கோல்ட் தபால் சார்ஜ் இலவசமாகவும் கொடுக்கப்படும். கடியாரம் அழுத்தமாகவும், அழகாகவுமிருக்கும். 10 வருஷ உத்திரவாதம் அளிக்கப்படும்.

குறிப்பு:—சாமான் திருப்தியில்லாவிடில் பூரா விலை வாபஸ்.

LONDON COMMERCIAL Co.,
P. B. 165, (S. M. M.) LAHORE (India)

(EAB)

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

சூதகம் நின்றிருந்தால்

3 நாட்டுகள் என்னும் மாத்திரைகளை 3 நாளைக்கு உபயோகித்தால் ஒழுங்கு பட்டுவிடும். ஒவ்வொரு ஆர்டருடன் உத்தரவாதம் அனுப்பப்படும். விலை ரூ. 5/8. பத்து ஷிலிங்.

Dr. S. H. KHAN, (S. M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

சுதேசமித்திரன்

Vol. 13 No. 47 20-12-'42 **வாரப்பதிப்பு** Price 2 Annas.

மூன்று தலைமுறைகள்

தாய் தன் மகளுக்கு
வுட்வார்ட் வைத்தியனின்
கிரைப் வாட்டர் என்னும்
மருந்துத் திராவகம்
எப்படி குழந்தைக்கு சுகம்
தருகிறதென்று சொல்லுகிருள்.

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON, ENGLAND

சென்றவார நிகழ்ச்சிகள்

"பாகிஸ்தான் பலிக்காது"

"பாகிஸ்தானைப்பற்றி நீங்கள் கனவு காண்கிறீர்களே! அது ஒருக்காலும் பலிக்காது. ஹிந்துஸ்தானத்தில் தனியாக ஓர் முஸ்லிம் ராஜயத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்று நீங்கள் கனவு காண்பதாக நான் அறிகிறேன். ஹிந்துக்களின் பூமியையும் அவர்களது முன்னோர்களின் சம்பிரதாயங்களையும் முஸ்லிம்கள் கைப்பற்றினல் அது முஸ்லிம்கள் தங்களுக்குத் தேடிக் கொண்ட மகத்தான இழுக்காகும். இஸ்லாம் ஒற்றுமையை உபதேசிக்கிறது. ஒன்ருகவிருந்து மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்பதும் இஸ்லாத்தின் கட்டளை" என்று வங்காளத்திலிருந்து மத்திய சட்டசபைக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட ஜனுப் சிகந்தர் அலி சௌத்ரி ஜனுப் ஜின்னுவுக்குக் கடிதமெழுதியிருக்கிருர். அவர் சட்டசபையில் லீக் கட்சியிலிருந்த அங்கத்தினர் பதவியை ராஜிநாமாச் செய்து விட்டார்.

* * * *

காந்திஜி காட்டும் வழி

கல்கத்தா சர்வ கலாசாலையில் கமலா பிரசங்கம் செய்த ஸர் ராதாகிருஷ்ணன் "தற்காலயுத்தமும் காந்திஜியின் கொள்கையான அஹிம்ஸையும்" என்ற விஷயமாகப் பேசினுர். அவர் காந்திஜியைப்பற்றி பிரஸ்தாபித்தபோது இந்த அநாகரீக உலகில் இருட்டிலிருந்து ஒரு ஒளியைக் காட்டவல்லவர் காந்திஜியே என்றும் இன்றில்லாவிட்டாலும் ஒரு நாள் இவ்வுலகம் அவரை வணங்கி அவரது வழியைப் பின்பற்றுமென்றும் குறிப்பிட்டார். 'ஹிந்துக்கள் மனத்தில் துவேஷமும் வெறுப்பும் கூடாதென்றே சொல்லுகிருர்கள். ஹிம்ஸை என்பதற்கும் தண்டனை என்பதற்கும் வித்தியாசமிருக்கிறது; துறவிகள்கூட சில சமயங்களில் பலாத்காரத்தில் இறங்க வேண்டியிருக்கிறது. நாம் கூடிய வரை குறைந்த பட்சம் பலாத்காரத்தை உபயோகிக்கவே முயல வேண்டும். தர்மப்படி யுத்தம் நடந்த காலத்தில் நமது முறைகள் பரிசுத்தமாக விருந்திருக்கலாம். ஆனுல் இப்போது விஷவாயுவும் நோய்க்கிருமிகளும் யுத்தத்தில் உபயோகிக்கப் படுகையில் விரோதிகள் விஷயத்தில் துவேஷத்துடன் தான் போராட வேண்டியிருக்கிறது. இந்த யுத்தத்தில் சம்பந்தப்பட்டிருப்பவர்கள் அனைவரும் தங்கள் கட்சி நியாயமானதென சொல்லி ஆண்டவன் அருளை எதிர் பார்க்கிருர்கள்.

சர்வதேச சங்கத்தின் நோக்கம் தவறி விட்டது. சர்வதேச சங்கத்தின் நோக்கம் நிறைவேறியிருந்தால் உலக ஸ்தாபனம் ஒன்றை ஸ்தாபித்திருக்கலாம். ஆனுல் பலாத்காரத்தால் அது பெற்ற உரிமைகளை விட்டுக் கொடுக்க மனம் கொள்ளவில்லை.

"அநீதிக்கு இணங்குவதைவிட அதனுல் ஏற்படக்கூடிய கஷ்டத்தைத் தாங்கிவிடலாம்· பலாத்காரத்தை அஹிம்ஸா மூலம் நாம் சமாளிக்கலாம் என்பதே காந்திஜீயின் கருத்து. பிறரைக் கொல்லாமல் நாம் சாக முற்பட வேண்டும். ரத்தம் சிந்த வேண்டிய அவசிய மேற்பட்டால் நமது ரத்தத்தையே சிந்துவோம் என்று அவர் சொல்லுகிருர்.

காந்திஜீ இன்று சுதந்தர புருஷராகவில்லை: அவரது உடலை நீங்கள் வாட்டலாம். ஆனுல் அவர் மனத்தே அந்தர்யாமியாகவுள்ள அன்பையும் சத்திய ஒளியையும் அணைக்க ஒருவராலும் முடியாது.

* * * *

டிரைவரின்றி ஒரு மைல் ஓடிய டிராம்!

கல்கத்தாவில் சென்ற வாரம் ஆர்ப்பாட்டக்காரர்களின் அட்டஹாசம் மிகவும் மும்முரமாயிருந்தது. அவர்கள் புரிந்த செயல்கள் பல. இதுவும் அவற்றில் ஒன்று:—டிராம் வண்டிகள் பேரில் கற்கள் முதலியன வீசப்பட்டன. இதனுல் வண்டிகள் சிலவற்றிற்குச் சேதம் ஏற்பட்டது.

ஸியல்டா ஸ்டேஷன் அருகே ஒரு டிராம்வண்டிமீது பட்டாசு எறியப்பட்டது. ஆர்ப்பாட்டக்காரில் ஒருவர் வண்டியிலிருந்து இறங்கிக் கொண்டிருந்த டிரைவரிடமிருந்த வண்டியின் சாவியைப் பிடுங்கி, வண்டியில் ஏறி அதை 'ஸ்டார்ட்' பண்ணிவிட்டு கீழே குதித்தார். அந்த வண்டி டிரைவரேயில்லாமல் சுமார் ஒரு மைல் தூரம் ஓடி அப்பால் ஹாரிஸன் ரஸ்தாவும், காலேஜ் தெருவும் சேருமிடத்தில் நின்று கொண்டிருந்த ஒரு டிராம் வண்டிமீது மோதி, அதற்குச் சேதம் உண்டாக்கியது. இவ் விபத்தில் ஒரு ரிக்ஷாவும் அகப்பட்டுக்கொண்டது. ரிக்ஷாவிலிருந்த பிரயாணிகளுக்குச் சொற்ப காயம்.

* * * *

கட்சிப் பற்றற்றவர் மகாநாடு

இந்திய அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதெப்படி? இப்பிரச்னைக்குப் பரிகாரம் காணும் பொருட்டு அலஹாபாத்தில் கட்சிப் பற்றற்ற தலைவர்களின் மகாநாடு நடந்தது. ஸர் தேஜ் பஹதூர் ஸாப்ரு தலைமை வகித்தார். கூட்டமும் அவர் வீட்டில்தான் அழைப்பின் பேரில் சென்னையிலிருந்து ராஜாஜியும், டாக்டர் பி. சுப்பராயனும் போயிருந்தார்கள். இன்னும் சில தலைவர்களும் சென்றிருந்தார்கள். இரண்டு நாட்கள் விவாதம் நடந்தது. நெருக்கடியைத் தீர்க்க சர்க்கார் முன்வந்து முயற்சி செய்ய வில்லை. உருவான முறையில் இந்த நிலைமையைச் சமாளிப்பது பற்றி தலைவர்கள் கருத்துகளைத் தெரிவித்தார்கள். விவாதத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்கள் தங்கள் தங்கள் ஸ்தாபனங்களைக் கலந்து கொண்டு மகாநாடு தெரிவித்த பரிகாரத்தைப்பற்றி அபிப்ராயம் அறிவார்கள். ஸர் ஸாப்ரு இவ்விஷயமாக மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வார்.

மகாநாட்டு நிரந்தரக்கமிட்டி நிலைமையை விளக்கி ஓர் அறிக்கை விடுத்தது. இன்னும் 2 மாதங்களில் ஏதாவது நடக்கலாமென்று ராஜாஜி நம்பிக்கை தெரிவித்திருக்கிருர். பொறுத்துப் பார்க்கலாம்.

* * * *

இந்தியாவுக்கிருந்த அபாயம்

தென்னிந்திய ராணுவப்படைகள் ஒத்திகை சம்பந்தமாகச் சில நாட்களுக்கு முன்பு சென்னைக்கு விஜயம் செய்திருந்த ஜெனரல் வேவல் (இந்திய ஸேனுதிபதி) பத்திரிகைப் பிரதிநிதிகளுக்கு மூன்று பேட்டிகள் அளித்தார்.



சிறைப்பட்ட நாஸி ஜெனரல்

ஆப்பிரிக்காவில் நாஸிப் படையின் தலைவராயிருந்த ரிட்டர் வான் தோமா சிறைபிடிக்கப்பட்டார். அவர் பிரிட்டிஷ் ஜெனரல் மாண்ட் கோமரியுடன் சம்பாஷிக்கிருர்.

இந்தியாவுக்கு இலங்கைப் பிரதிநிதி

ஸர் பாரன் ஜயதிலகா இந்தியாவில் இலங்கைப் பிரதிநிதியாக இந்திய சர்க்காரால் நியமிக்கப்பட்டுள்ளார். —பி. பி. பி.

பல கேள்விகளுக்கும் அவர் பதில் தந்தார். இந்தியாவுக்கு சில மாதங்களுக்கு முன்னிருந்த அவ்வளவு அபாயம் இப்போது இல்லை என்றும், ஏனினும் நாம் உஷாராகவே இருக்க வேண்டுமென்றும், ஜப்பானியரை வெற்றிகரமாகத் தாக்கிப் போராட ராணுவத்தினருக்கும் மக்களுக்குமிடையே அதிக ஒத்துழைப்பு இருக்க வேண்டியது அவசியமென்றும், இந்தியாவைச் சுற்றி எதிரி ஸப்மரீன் நடமாட்டம் இருக்கின்றதாயினும் சேதம் அதிகமில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

* * * *

மாஜி நாபா ராஜா காலமானுர்

நாபா சமஸ்தானத்தின் மாஜி ராஜா வானவி குருசரண் சென்றவாரத்தில் கொடைக்கானலில் காலமானுர். இவர் விசேஷமாகச் சுற்றுப்பிரயாணங்கள் செய்திருக்கிருர். வைஸ்ராய் நிர்வாக சபையில் அங்கத்தினராகவும் இருந்திருக்கிருர்.

* * * *

ஐரோப்பியச் செய்திகள்

சாமான்யப் பேர்வழிகளல்ல! உஷார்!!

ஜப்பானியர்கள் சாமான்யப் பேர் வழிகளல்ல. அவர்கள் திறமையற்றவர்களென்று நினைக்காதீர்கள். அவர்களை எனக்கு ரொம்ப நன்ருகத் தெரியும். நாஸிகளைப் போல அவர்களில்லை. என்ன நேர்ந்தாலும் சரி; அவர்கள் கடைசி வரையில் போராடியே தீருவார்கள். சீனுவில் ஜப்பானின் முயற்சி பலிக்கவில்லை. வாஸ்தவம்தான். ஆனுல் இது கண்டு, அவர்கள் அதைரியம் அடையவில்லை. அவர்கள் வரவு செலவுத் திட்டத்தில் 40-சத வீதமே ஒரு யுத்தத்தால் தற்காப்புக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. 60-சத வீதமும் பெரிய யுத்தத்துக்காக ராணுவம், தொழில் சாதனங்கள் இவற்றிற்காகச் செலவு செய்ய ஒதுக்கப்பட்

அமைச்சூர் படக்காரர் ஆண்டு விழா

சென்னை அமெச்சூர் புகைப்படக்காரர் சங்கத்தின் 10-வது ஆண்டு விழாவும், அ. இ. புகைப் பட ஸலூன் 5-வது ஆண்டு விழாவும் சென்ற வாரம் சென்னையில் நடந்தது. விஜய நகரம் மகாராணி படக் காட்சியொன்றைத் திறந்து வைத்தார். ஜஸ்டிஸ் குன்னிராமன் தலைமை வகித்தார்.

★

காட்சியில் சிறந்த படங்களில் ஒன்று!

★

—நாகராஜராவ்

★



டிருக்கிறது என்று டோக்கியோவில் முன்பு அமெரிக்கத் தூதராயிருந்த மிஸ்டர் ஜோஸப் க்ரூ அமெரிக்கரை எச்சரித்துள்ளார்.

* * * *

ஜப்பானில் ஆள் பஞ்சம்

ஜப்பானில் ஆள் பஞ்சம் ரொம்ப அதிகமாகிவிட்டது. இப்போது அங்குள்ள நிலைமை பற்றித் தகவல் கிடைத்திருக்கிறது. ஸ்திரீகளின் தொகை மிகவும் ஜாஸ்தியாகவிருக்கிறதென்றும் ஒரு ஆள் இருந்தால் 15 ஸ்திரீகள் இருக்கிறார்களென்றும் தெரிவிக்கப்படுகிறது. 1939-ம் வருஷத்தில் எடுத்த ஜன கணிதிப்படி. புருஷர்கள் தொகையும் ஸ்திரீகள் தொகையும் சரி சமமாகவிருந்ததாம். யுத்தம் காரணமாக ஆடவர்கள் போர் முனைக்குப் போய்விட்டனர். எனவே ஆட்கள் பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. இதைச் சமாளிக்கச் சர்க்கார் முன் வந்திருக்கிறார்கள். ஜன சங்கியைப் பெருக்க ஏழைத் தம்பதிகளுக்கு வேண்டிய உதவி செய்ய சர்க்கார் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

* * * *

ஆஸ்திரேலியாவுக்கு ஆபத்து!

'ஜப்பானியரது தாக்கும் தளங்கள் இன்றும் பலம் குன்றாமல்தானிருக்கின்றன. அவற்றால் போக்குவரத்துகளுக்கு மட்டுமின்றி ஆஸ்திரேலியாவுக்கே ஆபத்தேற்படக்கூடும். பூயின், ரபூல், காவிங் என்ற எதிரி தளங்கள் ஒவ்வொன்றும் ஆஸ்திரேலியாவுக்கு ஆபத்தை உண்டாக்கும்படி அமைந்திருக்கின்றன. ஜப்பானியருடைய மகத்தான பலத்தை நாம் மறந்து விடக்கூடாது. 'யுத்தத்தையே நோக்கமாகக் கொண்டிருக்கும் சர்வாதிகார நாடான ஜப்பானின் பலத்தையும் நாம் மறப்பதற்கில்லை. ஜப்பானியர் ஆக்கிரமித்துக்கொண்டுள்ள பகுதிகள் பல. அவற்றிலிருந்து அவர்களை விரட்டுவதென்பது கஷ்டமான காரியம்." என்று ஆஸ்திரேலிய மந்திரி ஈவாட் எச்சரித்து ரேடியோப் பிரசங்கமொன்றில் கூறினார்.

நாஸி ராணுவத் தலைவர் ராஜிநாமா?

ஜெர்மன் ராணுவக் கோஷ்டியின் தலைவர் கர்னல் ஜெனரல் கார்த் ராஜிநாமாச் செய்துவிட்டாராம். இவர் வான்பாக்கின் அத்யந்த நண்பர். ராஜிநாமாச் செய்யாவிட்டாலும் ராணுவத் தலைமையிலிருந்து அவர் விடுபட்டாரென நம்பப்படுகிறதாக ஸ்டாக்ஹோம் செய்தி ஒன்று தெரிவித்தது.

* * * *

டுனிஸியா போர் நிலைமை

டுனிஸியாப் போரில் சுணக்கம் காண்கிறது. அச்சுப் படைகளிடம் போதிய டாங்கிகள் இல்லாததே காரணம். மத்திய டுனிஸீயாவில் பிரஞ்சுப் படை முக்கியமான ஒரு ஸ்தலத்தைப் பிடித்திருக்கிறது. அது ஸிடி பௌஸித் என்ற விடத்துக்கு மேற்கே இருக்கிறதெனப்படுகிறது.

* * * *

ரோமலின் ஓட்டம்

எல் அகிலாவிலில் உறுதியாக நிலையங்களை அமைத்துக் கொண்டிருந்தார் ரோமல். அவர் இப்போது அவ்விடங்களிலிருந்து துரத்தப்பட்டு விட்டாரென்றும் மேற்குத் திக்கில் அவர் பின் வாங்குவதாயும் அறிவிக்கப்படுகிறது. அவர் எவ்வளவு தூரம் பின் வாங்கியிருக்கிறார் என்பது தெரியவில்லை.

* * * *

இந்தியாவுக்கு யு. எஸ். தூதர்

இந்திய சர்க்காரில் ஜனாதிபதி ரூஸ்வெல்டின் ஸ்தானீகராக விருக்க வில்லியம் பிலிப்ஸ் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்தியாவில் மிஸ்டர் பிலிப்ஸ் விசேஷமாக சுற்றுப் பிரயாணம் செய்யப்போகிறாராம். இந்தியப் பிரச்னைகளைப்பற்றி நிஷ்பட்சபாதமான மனத்துடன் அவர் இந்தியா வருகிறாராம். இவர் இதற்குமுன் இந்தியாவில் சில தினங்கள் தான் தங்கியிருந்தார். தமக்குக் கிடைத்த பதவியில் அவர் விசேஷ உற்சாகம்கொண்டிருக்கிறார். இந்தியாவில் கவனிக்க வேண்டிய வேலைகளைப் பற்றி அவர் மேலெழுந்த வாரியாகப் பரிசீலனை செய்திருக்கிறார்.

* * * *

எல்லா நாடுகளுக்கு சுயாட்சி வேண்டும்

'மேல் நாடென்றும், கீழ் நாடென்றும் பாகுபாடே கூடாது. அட்லாண்டிக், பஸிபிக் என்ற வேற்றுமையும் பாராட்டக்கூடாது. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் எல்லா நாட்டு ஜனங்களுக்கும் சுயவாட்சி இருக்கும்படி செய்ய வேண்டும். ஏகாதிபத்திய ஆதிக்கத்தை நாங்கள் எதிர்க்கிறோம்." என்று அமெரிக்காவிலுள்ள பிரபல தலைவர்களும், பொருளாதார ஆசிரியர்களும் நூலாசிரியர்களும், ஸ்திரீகளும் ஆக மொத்தம் 75-பேர் ஜனாதிபதி ரூஸ்வெல்டுக்கும் அமெரிக்க காங்கிரஸுக்கும் ஓர் திட்டம் அனுப்பியிருக்கிறார்கள். நியாயமாகவும், நிரந்தரமாகவும் சமாதானம் நிலைபெறுவதற்கு அடிப்படையாகவுள்ள பொருளாதாரத் தத்துவங்கள் அத்திட்டத்தில் அடங்கியிருக்கின்றன. எல்லா நேசநாடுகளும் அத்திட்டத்தை அனுஷ்டிக்க வேண்டுமென்பதற்காக அவர்கள் அதை அனுப்பியிருக்கின்றனர்.

* * * *

பியூன பிடிபட்டது

நேசதேசத்தினர் ஜப்பானியரிடமிருந்த பியூனவைப் பிடித்து விட்டார்கள். சிலதினங்களுக்கு முன்புதான் கோனவை ஜப்பானியரிடமிருந்து நேசப்படைகள் கைப்பற்றியது. இப்போது பியூனவையும் பிடித்து விட்டார்கள். நியுகினியின் கிழக்கரையிலுள்ள மேற்படி இடத்தைக் காக்க கடைசி கட்டத்தில் எதிரிகள் உதவிப், படையனுப்ப முயற்சித்தனர். ஆனால் பயனேதுமில்லை.

* * * * *

பிரிட்டன் மீது நாஸி படையெடுப்பு

சென்ற அக்டோபர், நவம்பர் மாதங்களில் நாஸிகள் பிரிட்டன்மீது படையெடுப்பர் என்று எதிர்பார்க்கப்பட்டது. எப்படியும் அடுத்த வருஷம் ஏப்ரல், மே மாதங்களில் அவ்வபாயம் ஏற்படக்கூடும். உள் நாட்டுப் பாதுகாப்புக்காக அதிகப்படி டாங்குகளை உற்பத்தி செய்ய வேண்டிய பிரச்னை எழுந்தது. இந்த விஷயத்தில் பர்ட்சைகளையெல்லாம் செய்து கொண்டிருந்தால் குறைந்தது 6 மாத காலமாவது ஆகியிருக்கும். நாஸிகள் ரஷ்யா மீது படை யெடுத்ததும் பிரிட்டன் மீது படை யெடுக்கப்படலாம் என்றிருந்த அபாயம் மட்டுப்பட்டது. அச் சமயத்தில் பிரிட்டனில் உற்பத்தியான டாங்குகள் திருத்தி யமைக்கப்பட்டன. இப்போது சுமார் ஆயிரத்திலிருந்து இரண்டாயிரம் டாங்குகள் வரை துருப்புகளிடமிருக்கின்றன. இவை மிகவும் சிறந்த சாதனமெனக் கூறப்படுகிறது. என பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சில் காமன்ஸ் சபைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

* * * *

ரஷ்யாவில் யுத்த நிலைமை

ரஷ்யாவில் ஸ்டாலின்கிராடில் அகப்பட்டுக்கொண்டுள்ள தங்களது படைகளை மீட்க ஜெர்மனியர் ரஷ்யரை பலமாகத் தாக்கி வருகின்றனர். ரஷ்யர் இத்தாக்குதல்களை எல்லாம் குலைத்து ஜெர்மனியருக்குப் பெருநஷ்டம் விளைவித்திருக்கின்றனர். ரஷெவுக்கு மேற்கிலும் வெலுகிலுகியிலும் ஜெர்மனியர் ரிசர்வ் படைகளைக் கொண்டு வந்து தாக்கியும் எந்த விடத்தையும் பிடிக்க முடியவில்லை. பெரு நஷ்டமே யடைகின்றனர். ஜெர்மனியர் பின்வாங்குவதாக பிரவ்டா யுத்த நிருபர் எழுதுகிறார். ரஷ்யர் ரஷெவுக்கு மேற்கே 2 ஊரைப் பிடித்தனர். வொர்டியாக்கி பிரதேசத்திற்குக்கிழக்கே 2-வது ஜெர்மன் அரண் வரிசையை சோவியத் பீரங்கிப் படை தகர்த்தது. கோடெலினி கோலோவுக்கருகில் ரஷ்யரை ஜெர்மனியர் பலமாகத் தாக்கி பின் வாங்கும்படி செய்தனர்.

சீவக சிந்தாமணி-26.

விசயமாதேவியார் துறவு

★

—வ. வேணுகோபாலன் எழுதியது—

மணவியர் எண்மருடன் மனம் மகிழ்ந்து வாழ்ந்திருந்தான் சீவகன். குடிமக்கள் குறைவின்றி அரசன் ஆணைக்கு அடங்கி வாழ்ந்தனர். நாள்தோறும் பல தருமங்களைச் செய்து வந்தமையால் தருமக் கடவுள் என்று சீவகன் புகழ பெற்றான். இரவலர்க்கு இல்லை என்று கூறாமல் தியாகமுரசு முழங்கப் பொன்னை அளித்து புகழுற்றான். எல்லாவற்றிற்கும் மேலாக அருகதேவனுக்குப் பெருங்கோயில் ஒன்றை எழுப்பிக்க வேண்டும் என்று எண்ணினான்.

அரண்மனையின் புறத்தில் உள்ள அசோகவனத்தின் நடுவில் அருகதேவனுக்கு அழகு மிக்க கோயிலை எடுப்பித்தான். கோயிலுக்கு நிலங்கள் பலவற்றைத் தருமமாக விட்டான். திருவிழா முதலியவற்றைச் செய்து சிறப்பித்தான்.

சீவகன் தாயாகிய விசயமாதேவியார், தனக்குத் துன்பம் வந்த காலத்துத் துணை செய்தவர்க்குநன்றி பாராட்டிச் சிறப்பிக்க எண்ணினாள். தாபதப்பள்ளியிலிருந்து தனக்கு உதவியாக உடன் வந்த தவமகளிர்க்கு பழம், கிழங்கு, காய் முதலியவற்றை அளித்து உபசரித்தாள், தவமகளிர், பொருளாசை இல்லாதவர் என்பதை உணர்ந்து அருகனுக்குச் செய்த பூசனையின் பயனை அம்மகளிர்க்கு நீர் பெய்து கொடுத்தாள். மயானத்திலிருந்து தன்னைக் காத்துத் தாபதப்பள்ளியில் சேர்த்த தெய்வத்திற்கு அம்மயானத்தில் கோயில் கட்டுவித்துப் பூசனை நடக்குமாறு நிலங்களையும் கொடுப்பித்தாள் சுடுகாட்டில் மெள்ளப்பறந்து மெள்ள வீழ்ந்த மயிற்பொறியைத் தான் எப்பொழுதும் கண்களால் பார்த்திருக்குமாறு தன் மாளிகையில் அதன் வடிவத்தை எழுதுவித்தாள். சீவகன் பிறந்த இடத்தைச் சுடுகாடாகக் கிடவாதபடி அழித்துப் புதுப்பித்துச் சாலையாக்கினாள். அந்தச் சாலையில் சீவகனுக்கும் அவன் தோழருக்குமாகஐந்நூற்றைந்து பிள்ளைகளுக்கு நாள்தோறும் அன்னம் அளித்து வரச் செய்தாள். விசயை கட்டளையிட்ட தருமங்களையெல்லாம் நந்தகோனாகிய கோவிந்தன் குறைவறச் செய்து வந்தான்.

கந்துக்கடன் மனைவியாகிய சுநந்தை விசயையைக் காண்பதற்கு அவள் மாளிகைக்குச் சென்றாள். விசயையைக்கண்டு வணங்கி நின்றாள். விசயை அன்புடன் அவளைத் தழுவி உபசரித்து அனுப்பினாள். பின்னர் சீவகன் மனைவியர் எண்மரும் அடைந்து விசயையின் பாதத்தை வணங்கினர். "நங்கையரே, உலகாளும் சிறுவரைப் பெற்று மகிழ்ந்துஇறைவனை அறிவீராக. நீங்கள் எண்மரும், யான் கண்ட கனவில் ஒரு முடியில் எட்டுப் பூமாலைகளாய்த் தோன்றினீர். நீங்கள் எவ்விடத்தும் என்னைப் பிரியாமல் தங்குவீராக" என்று கூறித் தழுவி உபசரித்தாள். பின்னர் சீவகனை வருமாறு அழைத்தாள். சீவகன் விரைந்து வந்து விசயையின் பாதத்தை வணங்கி, அங்கிருந்த ஆதனத்தில் அமர்ந்தான்.

"சீவக, உன் தந்தைக்கு வந்த துன்பத்தைப் பிறர் கூற நீ அறிந்தாயாயினும் யான் சொல்லவும் கேட்பாயாக" என்று நடந்தவாறு மொழிந்தாள். அதைக்கேட்டுச் சீவகன் மனம் பொருமிப்பின் ஆறுதலுற்றான். மீண்டும் சீவகனை நோக்கி, "குமர, காமத்தால் உண்டாகும் தீமையை உணர்ந்து அதனைக் காப்பாற்றிக்கொள். இனி யான் துறத்தற்குப் போவேன்" என்று கூறினாள்.

அதைக் கேட்டதும் சீவகன் மயங்கி வீழ்ந்தான். உடனிருந்த மகளிர் பனி நீர் முதலியவற்றைத் தெளித்து மூர்ச்சை தெளிவித்தனர். சீவகன் சோர்வுடன் எழுந்து வணங்கி, "தாயே, முன்பு, தாங்கள் எனக்குக் கூறியது என்ன? அதை இப்பொழுது கூற வேண்டும்" என்றான்.

"சீவக, நாம், வாழ்வோம் என்னும் ஆசையினுள் அழுந்துகின்றோம். அத்தன்மையையுடைய நாம், வாழ்நாளின் முடிவு, இவ்வளவு என்பதை அறியோம். யமன், உயிரை உண்ணும்போது, 'ஐயோ, இப்பிறப்பினைத் தப்புதற்குத் தவம் செய்திலமே' என்று வருந்துவதல்லது, வீணாகக் கழிந்த வாழ்நாட்களை மீட்கவல்லார் இல்லை. செய்தற்குரிய காலத்தில் தவத்தைச் செய்யாமல் உறவினரிடத்து அன்பு வைத்தல் குற்றம். காற்றால் அடிக்கப்பட்ட மேகக் கூட்டம் போல், தீவினையால் தாக்கப்பட்டு உறவினர் வெவ்வேறாய்ப் போய்த் தங்குவர். சேர்ந்து தங்கார். ஆதலால், நீயும் என்னிடத்து அன்பை நீக்குவாயாக" என்றாள் விசயை. சீவகன் அதற்கு மறுமொழி கூறாமல் வருந்தி இருந்தான். மேலும், பொதுவான தரும வார்த்தைகள் பலவற்றை விசயைக் கூறலானாள்.

"குமர, மகளிரைச் சேர்ந்து, இளமையாகிய கள்ளைப் பருகி முதுமை அடைவதன்முன் தவமும் தானமும்செய்ய வேண்டும். உயிரைச்சோறாகவும் உணர்வை நெய்யாகவும் கூட்டி, வன்மையைத் துவையலாகச் சேர்த்து உயிரை உண்ணுகின்ற யமன் உடம்பை அழிப்பதற்குமுன் தானமும் தவமும் செய்து நற்குணத்தை அடைய வேண்டும். உயிராகிய அச்சையுடைய உடம்பாகிய தேருக்கு நாம், பாகர் போன்றவர்கள். உடம்பாகிய தேர் பழுதடைந்தால், புதியதொரு உயிராகிய அச்சைச் சொருகி அத்தேரைச் செலுத்த முடியாது. ஆதலால் அது செல்லும் அளவும் செலுத்திப் பின்னர் இழந்தவர் பலர். அவ்வாறல்லாமல், நடுவிலும் தீவினையால் உண்டாகும் துன்பமாகிய நீரையுடைய ஆற்றில் அந்தத் தேர் அழுந்திவிடும். உயிராகிய அச்சு முறிவதற்குமுன் உடம்பாகிய தேரால் பெறுதற்குரிய சீலத்தைப் பெற வேண்டும். பிறந்தவர்களெல்லாம் ஆசை மிக்கவராய்ப் புகழை விரும்பாதவராய், இரவலர்க்குக் கொடுக்காதவராய் தருமத்தின் தன்மையை அறியாதவராயின் அந்த ஆசை பயனற்றது. ஆதலால் ஆசையை அகற்றுங்கள், இனிய உணவை நாள்தோறும் உண்டவர்கள், தீவினையால், பின்னர் இரந்து உண்பார். அத்தன்மையை நாம் காண்கிறோமாதலால் செல்வத்தை விரும்புதல் கூடாது. தவம் செய்தல் வேண்டும். அரசன் தேவியாய் இருந்தவள்: தீவினையால் பிச்சை வாங்கி உண்ணும் நிலையை அடைவாள். ஆதலால் செல்வத்தை விரும்ப வேண்டா. தருமத்தையே விரும்புங்கள். வருந்துகின்ற இடையில் கிழிந்த ஆடையை ஒருபுறம் உடுத்து ஒரு புறத்தை ஒரு கையால் மறைத்து மேலே நோக்கி, ஒரு கையால் இலையை உருவி அதனை இடுவதற்கு மண்கலம் இல்லாமையால் 'ஐயோ, வினையே, என் செய்தாய்' என்று கூறி வருந்தும் மங்கையரைக் காண்கின்றோம். ஆதலால் செல்வத்தை விரும்பாதீர். அழகுள்ளமகளிர் விரும்பும்படிக் காமன்போல் நடந்தவர்கள் முதுமை எய்தி இருமலுடன், தண்டை ஊன்றி நிற்பர்: ஆதலால் இளமை நிலையாது" என்று கூறி முடித்தாள்.

விசயையின் அறவுரையைக் கேட்ட சுநந்தை மகிழ்ந்து, "ஐயனே, தேவி கருதியது நன்மையாயினும் ஆக, தீமையாயினும் ஆக அதனை யானும் செய்யத் துணிந்தேன்." என்று சீவகனிடம் கூறினாள். அம்மொழியைக் கேட்டுச் சீவகன் மனம் கலங்கினான். எரி தவழ்ந்த வெண்ணெய்க் குன்று போல் உள்ளம் உருகினான். மறுத்துக் கூற இயலாமல் வருந்தியிருந்தான்.

விசயமா தேவியும், சுநந்தையும் துறத்தற்குத் துணிந்து இரண்டு சிவிகைகளில் ஏறிக் கொண்டனர். அவர்களுடன் துறப்பதற்குத் துணிந்த ஆயிரம் மகளிரும் தத்தம் சிவிகைகளில் ஏறிச் சென்றனர். சீவகனும் அவன் மனைவியரும் அதைக் கண்டு கண்ணீர் சொரிந்து அழுதனர். விசயையின் துறவிற்கு ஆற்றாது நகர மக்கள் யாவரும் வருந்திப் புலம்பினர். பம்மை என்னும் தபசி தாபத மகளிருக்குத் தருமோபதேசம் செய்யும் பள்ளியை விசயை முதலியவர் அடைந்தனர். அங்கே சென்றதும் சிவிகைகளிருந்து யாவரும் இறங்கிப் பம்மையை அடி வணங்கினர்.

"அடிகளே, எம்மைப் பிறவிக் கடலிலிருந்து கரையேற்ற வேண்டும்" என்று விசயை கூறினாள். அதைக் கேட்ட பம்மை, விசயையின் மேன்மைத் தன்மைக்குத் துறவு பூணுதல் தகாது என்று மனமிரங்கினாள்.

"நங்காய், தாமரை யிடத்துத் தீயைப் போல் தவம் மிகக்

மன்னர்பிரான் ஏதோ முக்கிய விஷயமாகப் போனில் பேசுகிறார்.

கொடியது. ஆதலால் அதை உன்னால் மேற் கொள்ளுதல் முடியாது. ஐம்பொறியையும் வெல்ல வேண்டும்' அவாவற்ற இடத்தில் தானமாகிய விதையை விதைத்து அது முளைக்கும்படி எப்பொழுதும் சீலமாகிய நீரைப் பெய்ய வேண்டும். அவ்வாறு பெய்தால் அஃது உத்தரகுருவில் முளைத்துப் புகழை ஈன்று தேவரின்பத்தை அளிக்கும்" என்று பம்மை மொழிந்தாள்.

"அடிகளே, தருமோபதேசத்தைப் பின்பு கேட்போம், இப்போது எமக்கு உறுதியாகத் துறவைத் தந்தருள வேண்டும்" என்றாள் விசயை.

பம்மை அதற்கு உடன்பட்டு அருகிலிருந்த தவமகளிரைத் துறவுக்கு ஆவனவற்றைச் செய்யும்படி ஏவினாள். உடனே அவர்கள் வேண்டியவற்றைச் செய்தனர். விசயை முதலிய யாவரும் தம்மீது அணிந்திருந்த ஆபரணங்களைக் கழற்றி எறிந்தனர். மயிர் உகுத்தற்கிருந்த மயிர் கூட்டத்தைப் போன்று விளங்கினர் அவர்கள். பம்மையின் ஏவலால், அங்கிருந்த தவமகளிர், விசயை முதலியவரது தலை மயிரைப் பறித்தனர். மயிரை உகுத்த. மயில்கள்போல் மகிழ்வுடன் இருந்தனர். விருப்பு வெறுப்பின்றி அருகனை நினைந்து அமர்ந்திருந்தனர். அவர்கள் யாவருக்கும் பம்மை தருமோபதேசம் செய்து கொண்டிருந்தாள்.

சீவகன் தன் மனைவியருடன் அங்கே சென்று விசையின் பாதத்தில் பூக்களைத் தூவி வணங்கி வாழ்த்தினான்.

"தாயே, பாலப்பருவத்தில் உங்களைப் பார்த்து மகிழ்ந்திருப்பதற்கு யான் தவம் செய்யவில்லை. இனியாயினும் எப்போதும் யான் கண்களால் பார்த்திருக்குமாறு இவ்விடமே தாங்கள் இருத்தல் வேண்டும்" என்று சீவகன் வேண்டினான். சீவகன்வார்த்தைகளுக்குச் செவி கொடாமலும் மறுமொழி கூறாமலும் இருந்தாள் விசயை. அத்தன்மையைக் கண்ட பம்மை சீவகனை நோக்கி, "அரசே, 'நீயும் எங்களால் அன்பு செய்யப்படுபவன் அல்லை. நாங்களும் உனக்கு உறவினரல்லோம்' என்று தான் விசயை மறு சொல்லாமல் இருக்கின்றாள்" என்று கூறினாள். பம்மை கூறியதைக் கேட்ட மன்னனும் மனைவியரும் மனம் வருந்தி அழுதனர்.

"அடிகளே, யான் தேவிக்கு உறவுடையேன் அல்லேனாயினும் அவர் துறவைக் கண்டிருக்கும் விருப்பம் உடையேன்" என்று சீவகன் கூறினான். சீவகன் மொழிந்ததைக் கேட்டுத் தவமகளிரெல்லாம் மனம் இரங்கினர். உடனே விசயையை நோக்கி, "தேவி மறுமொழி கொடுத்தலால் குற்றம் இல்லை. அரசனுடன் பேசுங்கள்" என்றனர். அதற்கு விசயையும் மனமிரங்கி "குமர, நீ விரும்பியதையே யாமும் விரும்பினோம்" என்று கூறினாள். விசயை அன்போடு கூறியதற்குச் சீவகனும் அவன் மனைவியரும் மகிழ்ந்தனர். அப்போது சீவகன் சுநந்தையின் தன்மைக்கு மனம் ஆற்றாமல், "சுநந்தையே. தேவீ என்னிடத்து ஒன்றும் வருத்தமுறவில்லை. ஆதலால் துறந்தனள். என்னை வருந்தி வளர்த்தமையால் நீயே எனக்குத்தாய். இதற்குமுன் நீ எனக்குத் துன்பம் செய்யவில்லையாயினும் இப்போது சுடுதுயர் செய்தாய் மிகவும் நீ கொடியை" என்று கூறினான். சீவகனுக்குள்ள அன்பைக்கண்டு சுநந்தை மனம் இளகியது. உடனே சீவகனைப் பார்த்து, "குமர, கணவனை இழந்த பின்பும் புதல்வனுடைய அரசை உவந்து வாழ்ந்திருந்தாள்' என்று இதற்குமுன் உலகம் கூறிய பழிமொழி நிகழ்ந்தேபோக தேவி, இன்று துறக்கவும், யான் உன் அரசை உவந்து இருப்பேனாயின் எனக்குப் பிறக்கும் பழி என்றுதான் போவது? இதை நீயே அறிவாய் ஆதலால் அரண்மனை சென்று வாழ்ந்து உலகத்தை இனிது காத்துவா" என்று கூறினாள். சீவகன் சிறிது ஆறுதல் பெற்றான்.

பின்னர் விசயை நந்தட்டனை நோக்கி "குமர, உன்னை யான் துறந்திலேன். நீ வருந்தி மனம் வெறுக்க வேண்டாம்; சீவகனுடன் இன்புற்றிரு" என்று கூறினாள். அதற்கு மகிழ்ந்து, நந்தட்டன் விசயையை வணங்கினான்.

சீவகன் தாயர் இருவரையும் வணங்கி வாழ்த்தினான். 'அவர்களைக் குறைவில்லாமல் காத்து வருதற்குப் பல தவமகளிரை உடனிருக்கச் செய்து விட்டு நந்தட்டனுடன் அரண்மனைக்குச் சென்றான். மனைவியர் எண்மருந் தேவியார் இருவரையும் வணங்கி, ஆசிபெற்றுச் சிவிகைகளில் ஏறி அரண்மனையை அடைந்தனர்.

தவப்பள்ளியில், பம்மை கூறும் அறவுரைகளைக் கேட்டு விசயை முதலியவர், தவம் செய்திருந்தனர்.

அடுத்த வாரம்:—
நீர் விளையாட்டு.

விக்டோரியா டிபோ.
மைலாப்பூர், மதராஸ்.

மதனமஞ்சரி
மாத்திரைகள்

மலச்சிக்கல், ஸ்வப்பனஸ்கலிதம், பலஹீனம், தாதுகேடுகள் முதலியவற்றை நீக்கி, இரத்த புஷ்டியும், தாதுவிருத்தியுமுண்டாகும். விலை ரூ. 1/.

மதன மஞ்சரி பார்மஸி,
184, சைனுபஜார் ரோடு, மதராஸ்.
புரசவாக்கம் : எஸ். டி. பல்டானே.
ஊரிகம் : டி. ஜான்ஸன் & பிரதர்ஸ்

தொண்டை கர கரப்பு,
சுவாசகாசம்
இவற்றை
ஒழியுங்கள்.

சுவாசகாசம் முதலிய வியாதிகளால் கஷ்டப்பட்டால் பெப்ஸ் உடனே நிவர்த்தியளிக்கும். பிரபலமான தேவதாரு காட்டின் சுகந்த சத்துக்கள் பூராவும் இக் கைக்கடக்கமான கிருமிநாச சுவாச மாத்திரைகள் மூலம் கிடைக்கின்றது.

பெப்ஸ் வாயில் கரைந்தவுடன் மருந்து பூர்வமான ஆவி, சுவாசப்பைக்குச் சென்று; மார்சளியை முதலிய உபத்திரவத்தைப் போக்கி தொண்டைக்குச் சமனமூட்டி, தொத்து வியாதியை எதிர்க்கும் சக்தியைக் கொடுக்கின்றது. எல்லா மருந்து வியாபாரிகளும் பெப்ஸ் ரூ. 1 வீதம் விற்கின்றனர். ஏஜண்டு:—மெஸர்ஸ் தாதா அண்டு கம்பெனி, பி. டி., மதராஸ்.

எப்பொழுதும் பெப்ஸ் உட்கொள்க.

PEPS

கிருமிநாச சுவாச மாத்திரைகள்.

ரூ. 10,000. பெறுமான கடியாரங்கள் இலவசம்.

கலா டெல் (ரிஜிஸ்டர்ட்) உபயோகித்தால் பல கேசங்களும் கறுப்பாக மாறி, பிறகு எப்பொழுதுமே கறுப்பாக இருந்துவரும். எமது ஸ்வாமியால் அறிவிக்கப்பட்டது. மூளைக்குச் சிறந்த டானிக் கண் பார்வையை, சீர்படுத்தி, மண்டையை குளிர்ச்சியாக வைத்திருக்கும். பாட்டில் விலை ரூ. 1-15-0. மூன்று பாட்டில்கள் ரூ. 5/-

இந்த ஆயிலை பிரபலப்படுத்துவதற்கு அழகிய மியூட் கைகடியாரம், ஒரு தோலா லண்டன் நியூ கோல்ட் ஒவ்வொரு புட்டியுடன் இலவசமாகக் கொடுக்கப்படும். 3 பாட்டில்கள் சேர்ந்தாற்போல் வாங்கினால் நான்கு கை கடியாரம், 4 தோலா லண்டன் நியூ கோல்ட் தபால் சார்ஜ் இலவசமாகவும் கொடுக்கப்படும். கடியாரம் அழுத்தமாகவும் அழகாகவுமிருக்கும். 10 வருஷ உத்திரவாதம் அளிக்கப்படும். குறிப்பு: சாமான் திருப்தியில்லாவிடில் பூரா விலை வாபஸ்.

LONDON COMMERCIAL Co.,
P. B. 165, (S. M. M.) LAHORE (India)
(EAB)

வெற்றி

மஹாகவி தாகூர்

எழுதியது

பாரத நாடு புகழ் பூத்து பிரகாசிக்கும் காலம். பாரததேவி பாக்யத்துடன் தன் ஒளியை, பாரத மக்கள் மகிழ்ந்திருக்கும் பொருட்டு நிலவி நின்ற சமயம். பிம்பிஸாரன் இந்திய மக்களின் பூரண நம்பிக்கைக்கும், பேரன்புக்கும் பாத்திரமாகி செங்கோல் செலுத்தி வந்தான். பிம்பிஸாரன் ஒரு பெரிய கலைப்பித்தன். இலக்கியமோ, கலையோ ஆதரவு பெற வேண்டுமானாலும், சரி அனுபவிக்கப்பட வேண்டுமானாலும் சரி மக்கள் அவனிடம்தான் சென்றனர். அப்படிபட்ட ராஜகவியினிடத்தில் கவி வாணிதாஸன் பூரண அன்பைப்பெற்றதில் ஆச்சரியமில்லை.

வாணி தாஸன் பிறவியிலேயே ஒரு கவி. கேவலம் வயிறு வளர்ப்பதன் நிமித்தம் அவன் கவி பயிலவில்லை. அவன் கவியில், தன்னுடைய மனது, உயிர், ஆத்மா எல்லாவற்றையும் அடைகலமாகபுகுத்திவிட்டான்.

அவன் முதல் முதல் அரசனுடையபுகழ்பாடி அவனுடைய அன்பைப் பெற வேண்டுமென கவி புகன்றபோது அவனுடைய கண்கள் ராஜ குடும்ப ஸ்திரீகளுக்கென்று தனியாகக் கட்டியிருந்த மேலமாடியைத் தற்செயலாக நாடின. மெல்லிய திரைக்குப் பின் ஓர் அழகிய உருவம் தென்பட்டது. பளிங்குச் சுவர் ஒன்றின் முன் லாவண்யமான ஒரு ஸ்திரீயின் முகம், சர்வ லக்ஷணங்களும் அமையப்பெற்றதாய், அதிதெய்வத ஸ்வரூபத்தையுடையதாய் விளங்கியது. அம்முகத்தைக் காணவும் வாணி தாஸனுக்கு மெய் சிலிர்த்தது. அவ்வெழிலை பருகிக் கொண்டே மிகவும் அழகாகக் கவியைப் பாடி முடித்தான். அரசன் சந்தோஷமடைந்தான், அன்று முதல் வாணிதாஸன் ஆஸ்தான கவியாக அமர்த்தப்பட்டான்.

"ராஜா"
மொழிபெயர்ப்பு

அன்று முதல் புதியகவி அரங்கேற்றும் சமயத்தில் எல்லாம், திரைக்குப் பின்னால் தோன்றிய அவ்வெழில் முகத்தின் சௌந்தர்யத்தை பருகிக்கொண்டேதான் பாடுவான். அம் முகம் அரசகுமாரி சித்ரகலாவினுடையது என்று வாணிதாஸனுக்குத் தெரியாது. அவன் அவளை அதற்கு முன் பார்த்ததே கிடையாது. யார் என்றும் தெரியாது. ஆனால் அவன் அம் முகத்தையே தன் குருவாகக் கொண்டு கவி பாடி வந்தான்.

அவனுடைய கவிகளில் ராதா கிருஷ்ண கோபிகா லீலைகளைப் பற்றியே தான் திரும்ப திரும்ப பாடப்பட்டிருந்தன. என்றும் இளமையுடன் கூடிய அந்த "தீராத விளையாட்டுப் பிள்ளை" யின் லீலைகள் தான் அவன் ஹ்ருதயத்தில் பிரதிபலித்தன, காதலன் கோபாலன்; காதலி ராதை. அமுது பொங்கித் ததும்பும் கீதத்தில், மந்திரத்தால் கட்டுண்ட கோபிகைகள்: இவர்களே அவனுடைய கவிகளின் பாத்திரங்கள். திரும்பத் திரும்பப் பாடியதால் ஒருவரும் அதனால் சலிப்படையவில்லை. உணர்ச்சி லோகத்திலிருந்து உண்டாகிய அந்த ஹ்ருதய கீதத்தையே தான் ஜனங்கள் கேட்க விரும்பினர். அக் கவிகளை கேட்பதே ஒரு இனிமை. சொல்ல முடியாத ஒரு ஆனந்தம். அந்த தெய்வகாதலர்களை ரஸிப்பதே ஒரு அழகு

இப்படியாகவே நாட்களும் ஆனந்தமாகச் சென்றன. தினந்தோரும் வாணிதாஸன் வருவதும், உப்பரிகையின் எழில் முகத்தை ஸ்தோத்தரித்துக் கொண்டு பாடுவதும், அரசன் குதூகலத்துடன் கேட்பதும், கேட்போர் அவனைப் புகழ்வதுமாகக் காலம் சென்று கொண்டிருந்தது. அப்பொழுது தென் நாட்டிலிருந்து சேகரன் என்ற ஒரு கவி ஒவ்வொரு ஆஸ்தானத்திற்கும் சென்று ஆங்காங்குள்ள ஆஸ்தான கவிகளை தன் திறமையினால் வென்று வெற்றி மாலை சூடிக்கொண்டு பிம்பிஸாரனுடைய தேசத்திற்கும் வந்தான். சேகரனுக்கும், வாணிதாஸனுக்கும் போட்டி நடக்க ஒரு நாள் குறிப்பிடப்பட்டது.

அந்நாளும் உதயமாகிவிட்டது. ஜனங்கள் திரள் திரளாக சபையில் கூடிவிட்டனர். அரசனும் இரு கவிகள் பின்தொடர வந்து சேர்ந்தான். வாணிதாஸனுக்கு இதுவரையில் போட்டி என்றால் என்னவென்று தெரியாது. எதிரியின் ஆஜானுபாகுவையும், வளைந்த நாசியையும், விசாலமான நேத்திரங்களையும் கண்டு பயந்து விட்டான். மனதிலோ சாந்தியில்லை. அரசனும் போட்டி ஆரம்பிக்க சைகை காட்டி விட்டான். பேரிகை முழங்கப்பட்டது, சேகரனும் எழுந்து விட்டான். சண்டமாருதம்!

சபை முழுதும் ஒரே, நிசப்தம் பரவியிருந்தது. சேகரன் பிம்பிஸாரனின் புகழைப் பாட ஆரம்பித்தான். கம்பீர த்வனியுடன் அவனுடைய வாயிலிருந்து அக்ஷரங்கள் உதிர ஆரம்பித்தன. கடற்கரையில் உக்ரமாக மோதும் சமுத்ர ராஜனின் அலைகள் போல் அவனுடைய கவிகள் ஜனங்களின் மனதில் தாக்கின. அர்த்தமும், பாவமும், உபமானமும் உபமேயமும் நிறைந்த அவனுடைய வார்த்தைகள் கேட்போர் மனதைக் கவர்ந்து விட்டன. அவன் உட்கார்ந்த பிறகு, புயலுக்குப் பின் ஏற்பட்ட அமைதி போல் இருந்தது.

அரசன் வாணிதாஸனை நோக்கினான். ஆஸ்தான கவியும் அவ்வுன்னத உப்பரிகையின் மேல் தன் கண்களைத் திருப்பி "ஹே தேவீ, ஹே ஜகன்மோஹனாகாரமே! என்றும் குறைவுபடாத உனது அருள் இன்றும் எனக்கு பரிபூரண வெற்றியை அருளட்டும். அந்த வெற்றியையே உனக்கு பாமாலையாகச் சூடுகிறேன்" என்று ஸ்தோத்தரித்துக் கொண்டான். அவன் மெதுவாக ஆரம்பித்தான். அவனுடைய குரல் மெள்ள மெள்ள ஆகாயத்தை நோக்கிப்பரவியது. ஒரு ஆர்வத்துடன், நடுக்கத்துடன் அவன் பாடிய பாட்டுக்களில் பரமாத்மாவினுடைய என்றும் அழியா இளமையும் கருணையும் பிரதிபலித்தன. ஜனங்கள் கள்ளைக் குடித்து மயங்கியவர் போல் அந்த ஆனந்தக் கதையைக் கேட்டனர். அவர்கள் கண்களில் கண்ணீர் பரவியது. அவன் பாடிய பாட்டுக்களின் அலைகள் சுவர்களில் மோதி "வெற்றி, வெற்றி" என்று கதறியது போல் இருந்தது.

சேகரன் திரும்பவும் எழுந்தான். அவன் எங்கு முடித்தானோ அங்கிருந்து தொடங்கி

(14-ம் பக்கம் பார்க்க)

அழுக்கிலிருந்து அபாயம் எங்கும் இருக்கிறது!

ஆரோக்ய ஸோப்பான
லைப்பாயினால் தம்மைத் தாமே பாது
காத்துக் கொள்ள குழந்தைகளுக்குப் போதியுங்கள்

குழந்தைகளும் அழுக்கும் பிரிக்கமுடியாதவைகளாக இருப்பதைப் போல தெரிகிறது. அப்படியில்லையா? அவர்கள் பூனை விளையாட்டோ, அல்லது தாவிக் குதித்தோ, அல்லது வெறுமனே புத்தகத்தை வைத்துக் கொண்டு சூழ உட்கார்ந்து கொண்டிருந்தாலும், எப்படியோ அவர்களுடைய கைகளும் முழங்கால்களும், முகங்களும் அழுக்கை இழுத்துக் கொள்கின்றன!

இந்த அழுக்கில் அபாயமிருக்கிறது. அழுக்கிலுள்ள கிருமிகள் தொத்து வியாதியைப் பரவச் செய்யவும், நோய்க்குக் காரணமாகவும் இருக்கின்றன என்பதை உங்கள் டாக்டர் சொல்லுவார். அதனால்தான் லைப்பாய் முறை அவ்வளவு முக்கியம்.

முறை தவறாமல் லைப்பாயினால் சுத்தி செய்து கொள்வது அழுக்கிலுள்ள கிருமிகளிலிருந்து தடுத்துக் கொள்ளலாம். எப்படியெனில் லைப்பாய் கிருமி நாசன சக்திவாய்ந்தது. ஆரோக்யத்தைப் பாதுகாக்க வல்ல வஸ்துவைப் பிரத்யேகமாய்க் கொண்டுள்ளது. விவேகமுள்ள தாயார் தனது குழந்தைகளுக்கு லைப்பாய் முறையைப் போதிக்கிறாளாகையால் அழுக்கு அபாயத்தைப்பற்றி ஒருபோதும் சஞ்சலப் படவேண்டிய அவஸ்யமில்லை.

ஒரு நல்ல ஸோப்பைக் காட்டிலும்
சிறந்தது லைப்பாய்
அது ஒரு நல்ல வழக்கம்

L. 36-169 TM. LEVER BROTHERS (INDIA) LIMITED

சேகரன் சூழ்ச்சி

ரா. வேங்கடராமன் எழுதியது

★

"காதலுக்குக் கண் உண்டா? கத்தரிக்காய்க்கு மூக்கு உண்டா?" என்று ஆவேசத்துடன் பிதற்றினுன் சந்திரன்.

"அதோடு, 'எனக்குச் சுய மூளையுண்டா?' என்று இன்னுமொரு கேள்வியையும் சேர்த்துக் கொண்டு மூன்று கேள்விகளாகக் கேள்" என்று சொல்லிச் சிரித்தான் சந்திரன்.

முதலில் பேசியது சந்திரன் சந்திர சேகரன். இரண்டாவது பேசியது ராமச்சந்திரன். ஆகையால் இங்கே கொஞ்சம் குழப்பிக் கொள்ளக்கூடாது.

அதெல்லாமில்லை; மேலே சொல்லுங்களென்று கேட்டால் மேலே சொல்ல வேண்டிய விஷயம் இதுதான்;

சந்திரசேகரன் ஒரு ஆரம்ப எழுத்தாளன்; அந்த ஆரம்ப நிலையின் சேஷ்டைகளும், வக்கிரங்களும் அவனிடம் சற்று அளவுக்கு மிஞ்சியே நின்றன. அது காரியத்திலும் ஓரளவு புகுந்திருந்தது. அவன் குடியிருந்த வீட்டின் கீழ் பாகத்திலே லலிதா என்று ஒரு பெண்ணிருந்தாள். அவளுடைய தந்தை வயதான ஒரு குமாஸ்தா. அவருடைய வருமானம் குடும்பத்திற்குப்போதுமானது என்று சொல்ல முடியாது. ஆனுல் போதாததாகச் செய்து வந்தவள் லலிதா தான். அந்த லலிதாவின் செய்கை தான் சேகரனைக் காரியப் பிரவேசத்திலிழுத்து விட்டிருந்தது.

அவள் தன் மாநிறத்தைச் செந்நிறமாக்கிக் காட்ட எடுத்துக் கொண்ட பிரயாசையில், பதினைந்து நாட்களுக்கு மூன்று சோப்புக் கட்டிகளும், இரண்டு முகப் பவுடர் டப்பாக்களும், குங்குமம் நிலைத்திருக்கப் பூசும் வாசனையில்லா மெழுகுடின் ஒன்றும் போன இடம் தெரியாமல் போய்க் கொண்டிருந்தன. அவை அவளுக்கு கூட தெரிவிக்காமல் தாமாகவே சேகரனை மயக்கும் காரியத்தைச் செய்து விட்டன. இயற்கையிலேயே அவள் கொஞ்சம் அழகிதான்; ஆயினும் சேகரன் வர்ணிப்பது போல ரம்பை போன்ற அப்ஸரஸ் என்று சொல்லிவிட முடியாது. அவள் நாசூக்காக இருக்க விரும்பினுள். அதனுல் ஆண்களைக் கண்டதும் அவளிடம் ஒரு மிரட்சி தோன்றும். அப்பொழுது உடலில் ஒரு நெளிவு கொடுக்கும். முன் பக்கத்தில் விடப்பட்டிருக்கும் தலைப் பின்னல் ஒரு தினுசான வேகத்துடன் யதாஸ்தானம் போய்ச் சேரும், நடையில் ஒரு நளினம் இயங்கும்.

இவையெல்லாம் சேகரனைக் காணும் போதும் உண்டாகாமற் போகவில்லை. அவற்றை வெறுங் கண்களால் பார்ப்பதில் திருப்தியடையாத அவன், புதிதாக ஒரு அழகிய கண்ணுடியும் வாங்கி அணிந்து கொண்டான். சுபாவத்திலேயே தன் ரூபலாவண்யத்தில் ஒரு பெருமையும் மகிழ்வும் கொண்டிருந்த அவன், அவள் இரண்டொரு தடவை தற்செயலாக அவனைப் பார்த்து விட்டதனுல் பூரிப்பும், புதுமையும் கொண்டு விளங்கினுன். எல்லாவற்றையும்விட அன்று காலையில் நேர்ந்த ஒரு சம்பவம் அவனை ஸ்வர்க்கத்திற்கே கொண்டு சேர்த்து விட்டது போலச் செய்துவிட்டது.

"உங்களுக்கு மணியார்டர் வந்திருக்கிறது. தபாற்காரன் கூப்பிடுகிருன்" என்று சொல்லிவிட்டுத் துள்ளியோடி மறைந்தாள். லலிதா. அவனடைந்த பேரானந்தத்தில் மணியார்டர் பாரத்தில் தான் கையெழுத்திட வேண்டிய இடத்தைவிட்டு தபாலாபீஸ் கிளார்க் எழுத வேண்டிய இடத்தில் கையொப்பமிட்டு விட்டான்.

"என்னுங்கசாமி! எங்கேயோ போட்டீங்களே" என்ருன், பணம் எண்ணிக்கொண்டிருந்த தபாற்சேவகன்.

"அடேடே!" என்ருன் சேகரன்.

"போஸ்ட்மான்! ஐந்து ரூபாய்க்குச் சில்லரை இருக்கா என்று கேட்டுக்கொண்டே அங்கு வந்தாள் லலிதா.

"இல்லையே" என்ற பதில் அவனிடமிருந்து வந்தது.

"நான் தருகிறேனே" என்று அவனறியாமல் அப்பொழுது தான் வாங்கியிருந்த பணத்தில் ஐந்து ரூபாய்க்குக் கொஞ்சம் குறைவாகவே சில்லரையை எண்ணிக்கொடுத்தான் சேகரன். அதைப் பெற்றுக்கொண்ட அவள் அலக்ஷியமாய் எண்ணிப் பார்க்காமலே ஜொகுஸாகப் போய்விட்டாள்.

ஒரு விதத்தில் அவனுக்கு ஏமாற்றம். மற்ருெரு விதத்தில் அவனுக்குச் சந்தோஷந்தான். மறுபடியும் பேச ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமல்லவா!

அவன் இச்சை பூர்த்தியாகாமற் போகவில்லை. அந்த சம்பாஷணையில் தோன்றிய சந்தேகங்கள் தாம் அவனுடைய அந்தரங்க நண்பன் ராமச்சந்திரன் வந்து பேச உட்கார்ந்த போது மேற் கூறிய விதத்தில் கேள்விகளாக உதிர்ந்தன.

ராமச்சந்திரன் விளையாட்டாக விஷயம் புரியாமல் பதில் சொன்னதில் சேகரனுடைய கண்ணுடிக் கண்களின் வழியே கோபக் கனல் வீசிற்று. ராமச்சந்திரன் உண்மையிலேயே உபகார சிந்தையுள்ளவன். அதுவும் சிநேகித விஷயமென்ருல் கழுத்தையும் கொடுப்பான். அவசியமாயின் தலையையும் கொடுப்பான்.

"என்னடா சொன்னுள்?" என்று ஆவலாய்க் கேட்டான் அவன்.

"என்னத்தைச் சொன்னுள் 'உங்க ஊரில் ஐந்து ரூபாய்க்கு நாலு ரூபாய் பதிமூன்றணுதான் சில்லரை கொடுக்கும் வழக்கமோ' என்று கேட்டாள். நான் சில்லரை கொடுத்தால் வட்டம் கொடுக்க வேண்டாமா என்று கேட்டேன்........."

"அவ்வளவு அற்பமாகவா கேட்டாய்?"

"சீ! நடந்ததைக் கேளுடா. நான் கேட்டதும் அவள் முழித்தாள். பிறகு கலகலவென்று சிரித்து விட்டு, 'அப்படியானுல் சரி' என்ருள். நான் மணி பர்ஸிலிருந்து நாலணுவை எடுத்துக் கம்பீரமாகக் கொடுத்தேன். உடனே அவள் 'மூன்றணுத்தானே, நாலணு கொடுக்கிறீர்களே, சில்லரையாக இல்லையா' என்று கேட்டாள்."

"அதற்கென்ன! அப்புறம் வாங்கிக்கொள்கிறேன்" என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறேன் என்ருன்.

ராமச்சந்திரனுக்கு இதெல்லாம் வேடிக்கையாகவே இருந்தது. சேகரன் இருக்கும் நிலைமையைப் பார்த்தால் அவனுக்குப் பயமுமுண்டாயிற்று.

ஒரு மாதம், இரண்டு மாதங்கள், அதற்குமேல் ஒரு வாரமும் ஆயிற்று. சித்திரை மாதம் வந்தது. நல்ல படபடைக்கும் வெயில். நிழலிலேயே வெப்பத்தைத் தாங்கமுடியாது. அந்த வெயில் நாளில் நல்ல உச்சி நேரத்தில் எங்கிருந்தோ நடந்து வந்தான் சேகரன். செருப்புமில்லை: குடையுமில்லை. வீட்டிற்குப் பத்தடி தூரமிருக்குமிடத்திலேயே அவன் கால்கள் கொப்பளித்துவிட்டன.

வாசலில் பனநொங்கு பேரம் நடத்திக்கொண்டிருந்தாள் லலிதா. பையன் சுருண்டு விழுபவன் போல் தவிப்பதைப் பார்த்ததும் அவள் கண்களில் ஜலம் வந்து விடும் போலிருந்தது. தன்னையும் மீறி 'ஐயோ! செருப்பைப் போட்டுக்கொண்டு போகக் கூடாதா?" என்று கேட்டுக்கொண்டாள். அந்த வார்த்தைகள் அவன் காதில் பட்டுவிட்டது. அவள் கனிவுடன் தன்னைப் பார்ப்பதையும் பார்த்துவிட்டான். அவனுக்குத் தோன்றிய வெயிலின் கடுமை உடனே குற்ருல அருவியாக மாறிவிட்டது.

இவ்விதம் ஒரு மனிதனுக்கு மேலும் மேலும் நம்பிக்கை தரும் சுப சூசகங்கள் தோன்றிக் கொண்டிருந்தால் கேவலம் ஒரு சாமானிய மனிதன், பிரும்மசாரி—அதுவும் வாலிபன் எப்படி தாங்க முடியும்? அவளை அந்தச் சித்திரையிலேயே தனக்கு விவாஹம் செய்து விட மாட்டாரா அவள் தகப்பனுர். அவளுக்கு இன்னும் கலியாண வயசாக வில்லையா? ஏன் இவ்வளவு மந்தமாய் இருக்கிருர் அவர்? ஒருகால் கையில் பணம், கிணம் இல்லாமிருக்குமோ? ஏன் அப்படியிருக்கக் கூடாது?

இந்த எண்ணங்களெல்லாம் அவன் மனதைக் கலக்கிக் கொண்டிருந்தன. அதனுலேயே மெதுவாக அவள் தந்தையுடன் பேசப் பழக்கிக் கொண்டிருந்தான். அவர் இப்பொழுது தான் கொஞ்சம் சௌஜன்யமாய்ப்

ரா

த **சு**

மித்திரன் ஆசிரியர்

ஸ்ரீ. ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்

எழுதிய

பன்னிரு பெரியார்களின் அரிய சொற் சித்திரங்கள் கொண்டது.

ஸ்ரீ. "வ. ரா" முன்னுரையுடனும், படங்களுடனும் கூடியது.

விலை ரூ. 1. தபாற் செலவு அணு. 6.

எல்லா மித்திரன் ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

மானேஜர், "சுதேசமித்திரன்" புத்தகசாலை, மவுண்ட் ரோடு, சென்னை.

பழகுகிருர். முதன் முதலில் அவர்கள் சந்தித்தால், ஒருவரை ஒருவர் பார்த்ததும் புன் சிரிப்புக் கொள்வதுடன் நின்றிருந்தார்கள். பிறகு ஏதாவது ஒரு வார்த்தை—ஒரு பதில். அதன் பின் அவராவது அல்லது அவனாவது வலுவில் பேச்ப் பேசி விட்டு வருவது. இப்பொழுது வழக்கமாகவே வைத்துக் கொண்டார்கள், மாலை நேரங்களில் மாடியில் உட்கார்ந்துபேசுவதை.

அவர் ஒரு குமாஸ்தா. வருமானம் சொல்பம். குடும்பம் சற்றுப் பெரிது. இதை நடத்தும் தன் நிர்வாகத்திறமையும், அதையும் மீறி சில கஷ்டங்கள் தோன்றிவிடுவதையும் தன் விதியையும் அவனிடம் சொல்லிக் குறைந்து கொள்வார். அவர் கண்களுக்கு அவன் ஒரு கவலையற்ற புருஷனுகவும், கொஞ்சம் பசையுள்ளவனுகவும் தன் வரையில் ரொம்ப சாமர்த்தியமுள்ளவனுகவும் காணப்பட்டான். இவ்வளவு பேசினுலும் அந்தக் கிழவருடன் அவனுக்குப் பேச நேரமோ, விருப்பமோ இருக்கவில்லைதான். ஆனுல் அவர் வாயினின்றும் தவறியாவது கலியாண விஷயத்தை எடுப்பாரோ என்று பார்த்தான்.

அவர் வாயினின்றும் வரும்படி பையன் செய்து விட்டான்.

"ஊரிலிருந்து கடிதம் வந்திருக்கு-கலியாண விஷயமாய்" என்ருன்.

"ஓகோ, அப்படியா சந்தோஷம். அதது காலா காலத்தில் நடக்க வேண்டியது தானே. எங்காத்து லலிதாவுக்கும் பதினாறு வயசாயிட்டது. பணமிருக்குமிடம் தெரியலே. வரும்படி சாப்பாட்டுக்கே சரியாய்ப்போகிறது. இந்தக் காலத்துப் பையன்களோ—நீ கோபித்துக்கொள்ளாதே—அதைக் கொண்டுவா இதைச் செய்யனும், பாடத் தெரியுமா, டான்ஸ் தெரியாதா, லோலக் போட்டுக்கொள்ளும் வழக்கமே கிடையாது போல இருக்கிறதே—கோணல் வகிட்டில் கர்லிங் விழவில்லையே என்கிருர்கள். என்னத்தைச் சொல்ல! பெரிய வெட்கக்கேடாக விருக்கிறது. நானுந்தான் பாட்டுச் சொல்லி வைத்திருக்கிறேன். படித்திருக்கிருள் என்னமோ அவள் தலையெழுத்து. நாமென்ன செய்யக் கிடக்கிறது. நினைக்கையில் பகீரெங்கிறது." என்று ஏக்கமும் துக்கமும் தோன்றும் குரலில் வருத்தப்பட்டுக் கொண்டார்.

"கவலைப்படாதீங்கோ. எல்லாம் சரியாகப் போயிடும்" என்ருன் சேகரன்.

"எனக்கு ஒன்றும் புரியவில்லை" என்றதும் அவருடைய கண்களிலிருந்து ஜலம் துளித்தது.

"நீங்க என்ன சிறு குழந்தை போல இதற்கெல்லாம் கவலைப்படறேளே. நானிருக்கிற வரையில் உங்களைக் கவலைப்படும்படியாய் விட்டு விடுவேனு?—" என்ருன் சேகரன்.

அவர் எழுந்திருந்து கீழே சென்ருர்.

* * * * *

மறுதினம் சேகரனுக்கு ஒரு தந்தி வந்தது. அதைப் பிரித்துப் படித்து விட்டு கீழே கிழவரிடம் ஓடி வந்தான் கலக்கத்துடன். சேகரனை உடனே புறப்படும்படிக்கும், விவாஹம் நிச்சயம் செய்யப்போவதால் சம்மதம் கேட்கும் முறையிலும் தந்தி வந்திருந்தது. அவர் படித்து விட்டு ஒன்றும் சொல்லாமல் நின்ருர்.

"ஏழையாக இருந்தாலும், எனக்குப் பிடித்து விட்டால் நானுக பணம் போட்டுக் கலியாணம் பண்ணிக்கொண்டாலும் கொள்வேனே யல்லாது—ஊஹூம்—இப்படி யொரு நாளும் செய்துகொள்ள முடியாது" என்று சொல்லிவிட்டு அவ்விடத்தைவிட்டுச் சென்ருன் சேகரன்.

சற்று நேரத்தில் ராமச்சந்திரன் ஊரிலிருந்து வரும் தோரணையில் பெட்டி படுக்கையுடன் வந்து சேர்ந்தான். யாதொரு பீடிகையுமின்றியே, என்ன ஸார் உங்காத்துப் பெண்ணிருக்காளே, அவமாதிரியே இருக்கணும் என்ருல் எங்கே ஸார் கிடைக்கும்? எதை நிச்சயம் செய்தாலும் முடியாது என்கிருன் ஸார். கொஞ்சம்கூட கண் மூக்குத் தெரியாமல் பேசுகிருன். அவனுடைய தாயார் வருத்தப்படுகிருள். சீக்கிரத்தில் இந்த மாசத்திலேயே கலியாணத்தைப்பண்ணி கண்ணாலே பார்த்துவிட்டு காசிக்குப் போகவேணுமென்கிருள்" என்ருன்,

அவர் ஒன்றும் பேசவில்லை. அவனுடைய பேச்சுக்கு அர்த்தமில்லாமலேயே தலையை அசைத்துக் கொண்டிருந்தார்.

"இன்னென்றும் சொல்கிறேன். பணம் கிடக்கிறது, செலவழிக்கட்டுமே! நீங்க உடன் சம்மதிக்கறதா இருந்தால் இந்தமாதக் கடைசியிலேயே காரியத்தை முடித்து விடுகிறேன், உங்களுக்கு அப்படியொன்றும் ஆக்ஷேபம் இருக்காதென்று நினைக்கிறேன். யோஜனை பண்ணுங்கோ. எல்லாவற்றிற்கும் உங்கள் பெண்ணையும் ஒரு வார்த்தை கேட்டு விடுங்கோ" என்று அவர் பதில் அபிப்பிராயம் ஒன்றையும் கேட்காமலே போய் விட்டான்.

"டேய்! சேகரா, காரியம் பழம். ஆனுல் கொஞ்சம் காய் வெட்டு. அவசரப்பட்டால் ருசிக்காது" என்று எச்சரித்தான்.

அன்று சாயங்காலம் சேகரனுக்குத்தாகம் தாங்க முடியவில்லை. அன்று வீட்டில் ஒருவரும்இல்லை என்று தெரிந்ததனுல் தான் தாகமெடுத்ததோ என்னவோ தெரியவில்லை.

"ஒரு டம்ளர் ஜலம் வேணும்" என்று கதவைப் பார்த்துக் கொண்டு கேட்டான்.

"எவ்வளவு டம்ளர்? முதலிலேயே சொல்லிவிடணும்" என்று லலிதாவின் பதில் கிடைத்தது.

அவனுக்கு அந்தப் பதில் ஆச்சரியமாகவும், திகைப்பாகவும் இருந்தது.

"என்ன அப்படிக் கேட்கிறீர்கள்?"

"இப்பொழுது உங்களுக்கு இருக்கும் தாகம் ஒரு டம்ளர் ஜலத்தில் சரியாகிவிடுமோ என்று சந்தேகமாக இருக்கிறது. நிஜதாகமாயிருந்தால் ஒரு டம்ளர் போதும். சும்மா என்னை அலக்கழிக்க இன்னமொரு டம்ளர், கடைசியாக ஒரே ஒரு டம்ளர் என்று ஆரம்பித்தால்."—

சம்பாஷணைக் கட்டம் மிகவும் ருசிகரமாயிருந்தது. மேலே பேச அவளுக்குத் தெரியவில்லை, பிறகு.

"உங்களுக்குக் கலியாணமாமே? நாங்களெல்லாம்..."

"சரியாய் போச்சு. யார் அப்படிச்சொன்னது? இருக்கிற நிலைமையைப் பார்த்தால் சந்நியாசம் வாங்கிக்கொண்டு பரதேசம் போய்விடலாம் போல இருக்கு."

அவன் தன் பேச்சை முடிக்கவில்லை. அதற்குள் லலிதா, "அப்புறம் என் தகப்பனுர் நீங்க பரதேசம் போறபோது, உங்கள் கையிலிருக்கும் விசிறி, குடை எல்லாவற்றையும் பிடுங்கிக் கொண்டு 'நீங்க இந்த வயசில் காசிக்குப் போகக் கூடாது. கலியாணம் பண்ணி வைக்கிறேன், எங்கிட்ட 'பெண்ணிருக்கு என்று உங்களை......"

இருவரும் கொல்லென்று சிரித்தார்கள்.

"லலிதா நீ ரொம்ப பொல்லாதவள். பெரிய போக்கிரியாக இருக்கிருயே?"

"நீங்க மட்டும்? என்னை ஏகவசனத்தில் பேச ஆரம்பித்து விட்டீர்களே. அப்படி யெல்லாம் கூப்பிடக்கூடாது. வாங்கோ, போங்கோ என்று முதலில் கூப்பிட்ட மாதிரியே அழைக்கணும் தெரியுமோல்லியோ?"

"உத்திரவுக்குக் காத்திண்டிருக்கேன் நீங்க சொல்றதைக் கேட்காமே வேறு யார் சொல்றதைக் கேட்கப் போறேன்"

"ஏன்? தனக்குக் கலியாணம் என்று வேறு ஊருக்குப் போய் தந்தி கொடுத்துவிட்டு வரச் சொல்லி பணம் எண்ணிக் கொடுத்தேளே உங்க 'சிநேகிதரிடம், அவர் சொல்றதைக் கூடவா கேட்க மாட்டீர்கள்? எனக்குத் தெரியாதா, உங்கள் சூழ்ச்சி யெல்லாம்!" என்ருள்.

இப்பொழுது அவர்களிருவருடைய பார்வையில் மகிழ்ச்சியும் குளிர்ச்சியும் பொருந்தி நின்றன.

சேகரன் சூழ்ச்சி வெளிப்பட்ட போதிலும் காரியம் வெற்றியாகி விட்டது. ராமச்சந்திரனுக்கு அவன் கடமைப் பட்டவன் தான்.

அரிய யோசனை

அவசியம் படிக்கவேண்டும்.

—வாலிபர், வயோதிகர், பணக்காரர், ஏழை, முதலிய உங்கள் நண்பர்கள், சினேகிதர்கள், அனைவருக்கும் இந்த விளம்பரத்தைக் காட்டி இதைப் பிரபலப்படுத்த உதவும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். அம்மாதிரி செய்தால் தாய்நாட்டிற்கு சிறந்த சேவை செய்தவர்களாவார்கள்.

நான் செல்வ நிறைந்த குடும்பத்தில் பிறந்தவன். பால்யத்தில் செய்த தவறுதலால் பல வியாதிகளுக்கு இலக்கானேன். பல பத்திரிகைகளிலும் வெளியான பல மருந்துகளையும் ரகசியமாய் வரவழைத்து உபயோகித்தேன். பலனில்லை நம்பிக்கையிழந்து இறக்கத் துணிந்தேன். எதேச்சையாக அதிர்ஷ்டம் ஏற்பட்டது வியாபார சம்பந்தமாக காஷ்மீரம் சென்றிருந்தேன். ஒருநாள் மாலை காற்று வாங்கச் சென்றிருக்கையில் ஸ்ரீநகரிலிருந்து இரண்டு மைல் தூரத்திலுள்ள மலையடிக்குச் சென்றேன. திடீரென ஒரு மகாத்மா என்னிடம் வந்தார். குளிரினுல் நடுங்கிகொண்டிருந்த என்னுடைய நிலைமையைக் கண்டு என் வியாதியைப்பற்றி பரிவுடன் விசாரித்தார். அவரிடம் உண்மையைக் கூறினேன். மகாத்மா அவரது குடிசைக்கு அழைத்துச் சென்று மருந்தைச் சொன்னுர்.

கடவுள் சாக்ஷியாக: ஒன்று டானிக் மாத்திரைகளையும் மற்ருென்று பூச்சுத் தைலமாகவும் தயாரித்தேன். ஒரு வாரத்தில் குணமேற்பட்டது. இதனுல் அனுகூலம் ஏற்பட்டும் மகாத்மா 15 தினங்களுக்கும் பரீக்ஷிக்கும்படி கூறியது போல் உபயோகித்ததில் புதிய யௌவனம், ஜீவசக்தி ஏற்பட்டது. மருந்து தயாரிக்கும் விதத்தை மகரிஷிக்குமுன், சமூக நன்மைக்காகவே பாடுபடுவேன் என பிரமாணம் கூறும்படி கேட்டார். அந்த பிரமாணப்படி இந்த மருந்தை இந்தியா பூராவும் விளம்பரம் செய்கின்றேன். ஜீவசக்தி குறைவு, பலஹீனம், நீரழிவு, நரம்பு பலஹீனம் போன்ற சகல வியாதிகளையும் இம்மருந்து குணப்படுத்தும் உண்மையான, வன்மை, வீர்யத்தை அளிக்கும். வயதான காலத்திலும் வாலிப வீர்யத்துடனிருக்க விரும்பினுல் இந்த மருந்தை பரீக்ஷிக்கவேண்டும் எக்காலத்திலும் இதை சாப்பிடலாம் தீங்கானதோ அல்லது மயக்கம் தரக்கூடிய சத்துக்கள் கிடையாது

15 நாட்களுக்கான மருந்தின் விலை:
காஷ்மீரி மாத்திரைகள் ரூ 5-0-0
காஷ்மீரி பூச்சு எண்ணெய் ரூ. 3-0-0

இரண்டு மருந்துகளையும் சேர்ந்தாற் போல் வாங்குவோருக்கு தபால் & பாக்கிங் சார்ஜ் இலவசம்.

நான் டாக்டர் அல்லது வைத்யனல்ல. இது என் தொழிலல்ல. இந்த மருந்து என்னை மரணத்திலிருந்து காப்பாற்றியிருக்கிறது. மகாத்மாவின் ஆக்ஞைப்படி இந்த மருந்து மூலம் லாபம் சம்பாதிப்பது பாபமாகும்.

விலாசம்:

B. MULKRAJ ANAND,
Post Box 165, (S. M. M.)
LAHORE (INDIA).

(EAB)

"ஞானோதயம்"

பாத்திரங்கள்:

★

கபிலவஸ்து யுவராஜன்
ஆஸ்தான கவி.
அச்வசாலே ரக்ஷகன்.
சென்னன்.

அன்று ராஜ்ய வியவஹாரங்களில் தன்னையும் அறியாமல் வெறுப்பேற்படவே எங்காகிலும் வெளியில் செல்ல வேண்டுமென்று யுவராஜனுக்குத் தோன்றிற்று. நந்தவனத்திற்கு சென்றார். அங்கு இயற்கையன்னையின் இன்ப வடிவம் இவரை வசீகரிக்கவில்லை. கால் கொண்ட வழி பரத்தியானமாய் நடந்து கொண்டு சென்றார். எங்கோ ஹிருதயத்தை துளைத்துக் கொண்டு பாடும் ஏழ்மைப் பாடல். ஹிருதயத்தை அதன் கருணை யொலியுடன் இழுத்து சென்றது. அசைவற்று பாடலைக் கேட்டார்.

"காலையிலிருந்து
மாலை வரையில்,
வீடு வீடாய்
ஏறி இறங்குவோம்,
சாகும் வரையில்
பிச்சையை வேண்டி,
சாம்ப சிவம் ஹா
சாம்ப சிவா!
விதி மாதாவின்
மக்களே நாங்கள்,
சீமான்களின் செல்வம்
எங்களுக்கேனோ?
பிறவிக் குருடனுக்கேனோ
"தினகரன்?" "சாம்ப!"
தானம் கொடுக்காம
லிருந்தாலும்மே.
குடிப்பதற்காவது
நீர் ஒன்று போதும்.
நிழல் தரும் மரமே
மனையாய் இருந்தால்.
"சாம்ப!"
சாதம் கொடுப்பார்.
பாயஸம் கொடுப்பார்.
கஞ்சியும் ஊற்றுவர்
கறியும் கொடுப்பார்,
ஒன்றாய் கலந்து இன்பமாய்
உண்போம். "சாம்ப!"
வேண்டுவதொன்றே
'பிக்ஷு'வின் தர்மம்.
கொடுப்பதொன்றே
'தாதா'வின் கர்மம்.
இல்லை என்பது
'இறைவனின்' மர்மம்.
"சாம்ப!"
ஜீவித பீதி நமக்கெங்குண்டு?
சுதந்திரக் கோலே
ஊன்றி நடப்போம்,
நாடு நாடாய்
நடந்து கொண்டிருப்போம்,
"சாம்ப!"
எங்கள் தீன ஒலியே
எங்கள் 'சக்தி'
சங்கடத்தில் காப்பது
'சிவ பக்தி'
"ஏழ்மை என்பது
ஏழையின் 'முக்தி'
"சாம்ப!"
'அரசன்' அரசாய்
இருப்பானின்று.
அவன் நாளை செல்லும்
இடம் எங்கு?

நாடகம்

★

எம். எஸ். கமலா
எழுதியது

மரத்தால் செய்த விமானம்

★

துருப்புகளை ஏற்றிச் செல்வதற்காக மரத்தைக்கொண்டே அமெரிக்காவில் விமானம் கட்டுகிறார்களாம். இதன் சிறகுகள் 108 அடி நீளமிருக்குமாம். விமானம் 68 அடி நீளம். 1,200 குதிரை வேகமுள்ள இரண்டு என்ஜின்கள் இதற்கு விசையாக அமைக்கப்பட்டிருக்கின்றன. மரத்தாலேயே விமானம் செய்வதென்பது இதுவே முதற் தடவை எனப்படுகிறது.

இறக்கும் காலத்தில்
எல்லோரும் ஒன்று.
சாம்ப சிவோம்
ஹர சிவா!

அவர் கண்களில் நீர் தளும்பி மின்னிற்று. சாந்தியைத் தேடி வந்த இடத்தில் வேதனை ஒலி. திரும்பவும் அரண்மனையை நோக்கி சென்றார். வழியில் பிணம். மின்னிக் கொண்டு கண்களில் தேங்கிய நீர் இத்திருச்யத்தைக் கண்டதும் உடைந்து கீழ் விழுந்தது. உள்ளத்தில் துடிப்பு. பரபரவென்று அரண்மனை வாயிற்படியணுகினார். அங்கு துறவி. அவர் மனம் கலங்கிவிட்டது.

இரவு. அன்று நகரத்தில் வியாதி. இறப்பு, துறவி, முதலியவைகளைப் பார்த்து வந்த யுவராஜன் இரவு தன் உப்பரிகையில் ஒருவனாய் வீற்று மனதை வேதனைக்குள்ளாழ்த்தும் திருச்யங்களை ஒவ்வொன்றாய் நினைத்துக்கொண்டு கவலையிலாழ்ந்தான்.

அக்ஞானம்:—"அட பைத்தியக்காரனே! ஏன் கவலைப்படுகிறாய்? எதற்காக உன்னை நீயே வெறுத்துக்கொள்கிறாய்? இக்கன்னிகைகளை, இந்த ராஜ்ஜியத்தை பணியாட்களை—அதனால் ஏற்படும் சுக சௌகரியங்களை ஏன் நீயே வெறுக்கிறாய்? இவைதானே மனிதனின் உயர்விற்கு முக்கியமான சாதனங்கள்?"

ஞானம்:—எதற்கா. சரீரத்தில் சக்தியுள்ளமட்டும் அவைகளெல்லாம் வேண்டியவைகளே! அதற்குப்பின்......" காலத்தை பெருமையுடன் ஆள்கிறாய். அதற்குப்பின், உன் வாலிபத்தை இழந்தபின், நீ அடையும் சக்தி...நீயே உன் யௌவனத்தை வெறுக்கிறாய். கடைசியில் உன் வாழ்க்கையையே வெறுக்கிறாய், துறக்கிறாய். இவைகளை நம்பி கிணற்றில் இறங்குகிறேன் என்கிறாய். இப்பொழுது இன்பத்தையளிக்கும் இச்சரீரத்தையே பிறகு நீ துக்ககூண்டாய் நினைத்து துன்புறுகிறாய். அப்பொழுது... நீ விரும்பும்...

அக்ஞானம்:-"மாரமாட்டாய் யுவராஜா! வாலிப வேதாந்தியே! எப்பொழுதும் மாரமாட்டாய், நீயே ஏதோ பைத்தியக்கார ஆசையில் வீழ்ந்து மோசம் போகிறாய். இந்த சாம்ராஜ்ஜியம், தந்தை, உன் பிரஜைகள், உன் மனைவி உன், ஏவலாளர்கள், உன்னை விரும்பும்...இந்த வாழ்க்கையே அவ்வளவு அருவருக்கக்கூடியதாயிருந்தால் எதற்காக எல்லோரும் இதை உயர்வாய் நேசிக்கிறார்கள்? அன்பாய் பார்க்கிறார்கள்? ஓ அரசனே! அவர்களெல்லாம் மூடர்களா? பைத்தியக்காரர்களா?"

ஞானம்:-உண்மையாய் பைத்தியக்காரர்கள் தாம், இவ்வளவு சொகுசாய் நேர்த்தியாய் வளர்த்த சரீரம் சில நாட்களில் கிழமாய் க்ஷீணித்து உருவமில்லாமல் மண்ணாய்ப் போகிறது. அதற்காக ஆசைப்பட்டு அந்தகராவதேன்? பத்திரமாய் காப்பாற்றும் இச்சடலத்திற்கு கிழத்தன்ம் வராமல் பார்த்துக்கொள்வீர்களா? மிருத்யுவிற்கு இரையாகாமல் தடுத்துக்கொள்வீர்களா? குருட்டுத்தனம். பிரஜைகளெல்லாம் மூடர்கள்தாம்.

அக்ஞானம்:—"இல்லை. அவர்கள் பைத்தியக்காரத்தனமாய் செல்லாமல் ஜீவிதத்தை பயன்படுத்திக்கொள்கிறார்கள். ஏதோ எப்பொழுதோ வரப் போவதை நம்பி, போகத்தை விட்டு தியாகி பரித்தியாகியாகிறேனென்கிறாய். ஏ! பைத்தியக்கார அரசனே! இவைகள் மாத்திரம் மறுபடியும் வரக்கூடியவைகளா? காணக் கிடைப்பதா? நடு வயதில் இருக்கும் 'யசோதரை' அழகை கக்கும் மின்னொளி மாதர்கள். அந்தப்புர போகங்கள். இந்த ராஜ்ஜியத்திற்குள்ளிருக்கும்......"

ஞானம்:-"ராஜ்ஜியம். ராஜ்...ஜி...யம். வாயில்லா ஜந்துக்களை பலியிடும் ராஜ்ஜியம். மூட ஜனங்கள். யௌவனத்தை ஆராதிக்கும் யுவதிகள்! பிக்ஷு பிக்ஷாடனமேன் செய்கிறான்? அவன் செய்வது மூடத்தனமா? அப்படி சர்வ சங்க பரித்தியாகம் செய்ய அவன் பைத்தியக்காரனா?

அக்ஞானம்:—அனுபவிக்க இருந்தும் மூடனாய் எல்லாவற்றையும் துறந்து ஏதோ பெரிய மோக்ஷத்தை அடைவோமென்ற ஆசையுடன் இரண்டும் கெட்டானாய் திரிந்து காலத்தை கடத்துகிறான்.

ஞானம்:—"இல்லை. அவசரப்படுகிறாய். அசாச்வதமான மேகாரத்தை சாச்வதமென்று நம்பி அவைகள் மேல் வெறுப்பேற்பட்டு ஞானத்தை சம்பாதித்து அதனால் உலகை நல்லொளிப்படுத்த முயல்கிறாய். நான் கூட ஓர் பிக்ஷுவாய் அக்ஞான மேகத்தை போக்கடிக்கிறேன். பரித்தியாகம் செய்து அதை சாதிக்கிறேன்."

அக்ஞானம்:--"இளவரசனே! கெட்டுப்போகாதே, இந்த சிங்காதனம். இந்த மனைவி...இந்த யௌவனம்......"

ஒரே வாழை! ஆனால் 7 குலைகள்!!

★

இயற்கையின் விசித்திரத்தில் இதுவும் ஒன்று: அய்யம்பேட்டைக்கருகேயுள்ள வழுத்தூரில் 3 அடி உயரமே உள்ள ஒரு வாழை 6 தார்கள் போட்டிருக்கிறது. இன்னொரு குலைவிட ஒரு பூவும் விட்டிருக்கிறது.

—ஜி.ஆர்.கே.

அண்ணாமலை சர்வ கலாசாலை பட்டமளிப்புவிழா

அண்ணாமலை சர்வ கலாசாலை பட்டமளிப்பு விழா சமீபத்தில் நடைபெற்றது. திருவாங்கூர் மகாராஜா பட்டமளிப்புப் பிரசங்கம் செய்தார். சென்னைக் கவர்னர் தலைமை வகித்தார்.
பி. பி. பி.

ஞானம்:—"ஜெயிக்கிறேன். எல்லாவற்றையும் ஜெயிக்கிறேன். கடைசியில் இறப்பை கூட ஜெயிக்கிறேன்."

அக்ஞானம்:—ஊ ஹூம். ஜெயிக்கமாட்டாய். தவறான வழியில் செல்லாதே. கண்டிப்பாய்...செ...ல்...லா...தே.

"ஞானோதயம்" ஆகும் வரையில் எல்லாவற்றையும் தியஜிக்கிறேன்.

அக்ஞானம்:—"மோசம் போகாதே. ஏதையும் அடையமாட்டாய். அதி மேதை என்று நினைத்து மூடனாய்ப் போய் மோசமடையப் போகிறாய். ஜெயிப்பதற்கென்ன இருக்கிறது?"

ஸித்தார்த்தன்:—"ஒன்றுமில்லை. மோசம் போகிறேனா? ஜெயிக்கமாட்டேனா? அதையடையமாட்டேனா?" "ஞானோதயமா" காதா?...பாடகரே! கவீ!

"ஏன் பிரபு?"

"மனதை மயக்கும் வசீகரிக்கும் கவிதை ஒன்றை சொல்லுங்கள்.

"வண்டினங்களே வாரீர்.
வெண்ணிலவு விரிந்திருக்கிற
தைப் பாரீர்,
விவிதமலர்கள் மலரும்
மணத்தில்,
மதுவின் இனிப்பே
மனதை மயக்க
மயங்கி தூங்குதேனோ?"

"இது வேண்டாம்"

"ஏன் அரசே?"

"வேதாந்த கீதம். விரக்தி கீதம். பாடுங்கள்."

"மனமே துள்ளி விளையா
டாதே!
யௌவனம் சிரஞ்சீவி
என்று"
மகிழ்ந்து விளையாடாதே.
மண்ணுடன் சேரும் மாய
தேகத்தைக் கண்டு மனம்
மகிழாதே
மமதை கொள்ளாதே!

"ஆம் கவீ! வாழ்க்கை நசிக்காமல் வளருகிறதா? உண்மையில் இதெல்லாம் மாயைதானே! இங்கு வாழ்வது மூடத்தனம் தானே!"

"யுவராஜா! நீங்கள் சரிவர அறியவில்லை."

"இல்லை. கவீ! இல்லை."

"இளவரசே! உண்மை வேறு விதமாயிருக்கிறது. காலத்தை கஷ்டத்துடன் கடத்துவதென்பது. காலத்துடன் போராடுவதென்பது......?"

'நாக்டோவிஸர்' ஆச்சர்யமான கருவி

★

யுத்தகாலத்தில் ஏற்பட்ட அதிசயங்களில் 'நாக்டோவிஸர்' என்ற கருவியும் ஒன்றாகும். இரவில் குண்டு வீச வரும் விமானங்களை இவ்வியந்திரத்திலிருந்து வீசும் ஒளியைக்கொண்டு சுலபமாகக் கண்டுபிடிக்கலாம். இதைக் கண்டு பிடித்தவரின் பெயர் ஜாகி லாகி பயர்டு. பிரிட்டன் கடலோரப் பகுதிகளில் இக்கருவியை அமைக்கலாம். இரவில் செல்லும் சண்டை விமானங்களிலும் யுத்தக்கப்பல்களிலும் அதைப்பொருத்தலாம். இருட்டு, பனி, புகை எதுவானாலும் சரிதான். எதிரியிருக்கும் இடத்தை இக்கருவியின் உதவி கொண்டு கண்டறியலாமென்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

"நீ தவறான வழியில் செல்கிறாய்"

கவி:—இந்த அரசு பிரஜைகள் நகரம் கடைசியில் ராணி... பரிசாரிகை பிரவேசித்து தேவியார் தூங்குகிறார்கள். தங்களுக்கு...

சித்தார்த்தன்:—கவீ! சொல்லும் தேவி...தே...வி தூங்குகிறாள்.

கவி:—புன்னகை பூவிதழ்
பூர்க்க முகத்தில்.
காதல் கிரணங்கள்
காந்தியாய் வீச,
உணர்ச்சி வெள்ளம்
உள்ளத்தில் ஓட
சேராய் என்னை செவ்வித
மாளே
அன்னங்கள் அம்பு
எடுக்கும் முன்பே,
அயர்வு சோர்வு
உதிக்கும் முன்பே,
ஆனந்த ஜோதி
ஆடி அசைய
காவாய் என்னை கண்மணியே!
சேராய் என்னை
சேர்ந்தணைக்க,
கூறாய் உந்தன்
குறைகளை,
வாராய் என்னை
வகையுடன் சேர
பாராய் என்னை பைங்கிளி
யாளே!

முகத்தில் முத்து முத்தாய் வியர்வை துளிக்க கவீ! எழுந்து செல்லும் செல்லும் தேவி தூங்குகிறாளா? கடைசீமுறை... அந்தப்புறத்திற்குள் சித்தார்த்தன்.

"காரிருளில் லயித்து எவ்வளவு சுகமாய் தூங்குகிறீர்களோ! தூங்குங்கள். யசோதரா சுகமாயிரு. யுவராஜா! வரப்போகும்...அடுத்த கபிலவஸ்து மஹாராஜனே! சுகமாயிரு. விடிவதற்கு முன் செல்லவேண்டும்... இன்றைய இரவே செல்ல வேண்டும்"

அச்வசாலே.

"சென்னா! சென்னா! எழுந்திரு."

"என்ன! யு...வ...ராஜ...ரா பாதி ரத்திரி வேளையில்...

சித்தார்த்தன்:—"ஆச்சரியமேன்? அச்வத்தை சித்தப்படுத்து...

"அப்படியே' அதோ ஆரோஹணியுங்கள். எவ்விடத்திற்கு தேவா!

"கண்காணாத பரந்த உலகிற்குள்:.."

அவசரத்தில் உங்...க...ளை... ம...றந்து"

"இல்லை சென்னா"

"நான் கூட உங்களுடன்—

"வேண்டாம் எனக்குத் தெரியாத இடத்தை நோக்கி நான் செல்கிறேன். ராஜ்ஜியத்தில் சுகம், அனுபவம், ஆனந்தம் எல்லாவற்றையும் அனுபவி சென்னா!"

"தாங்கள் மறுபடியும் திரும்புவது...?

வரமாட்டேன் இந்த மூட தேசத்திற்கு திரும்பிவர மாட்டேன். இந்த ராஜ்ஜியத்திற்கு நான் வரமாட்டேன். என் ஆசை...

"தேவா! உங்களை உயிர்நிலையாய் நினைக்கும் தந்தையை... ஹிருதய தேவனாய்க் கருதும் தேவியாரை அன்புடன் அழைக்கும் அருமை மைந்தனை...இவர்களெல்லோரையும் விட்டு......

"ஒருவரென்ன? எல்லோரையும் த்யஜித்தேன். என் ஜீவித பரமாவதிக்காக...மிருத்யுவை ஜெயிப்பதற்காக. "ஞானோதய"த்திற்காக" தேவா! என்...ன?"

"ஆம்...பைத்தியக்காரத்தனம் பிரமை...சென்னா! அதிக தூரம் வந்தாய். இதோ என் உடைகள். எடுத்துக் கொண்டு போ!"

யு..."வ—ரா...ஜா!"

யுவராஜனல்ல. இப்பொழுது ஓர் பிக்ஷு.

"தேவா! அவசரப்படுகிறீர்கள்,"

"இல்லை. நீ வீட்டிற்கு சென்று சுகமாயிரு."

"உங்களை விட்டு செல்...ல... மாட்டேன்,"

"போடா! அசடே! போ. உன் மனைவி மக்கள் உனக்காக எவ்வளவோ வேதனைப்படுவார்கள். போ! தூரப்போ..."

"சுவாமி! தேவியாருக்கு சங்கதி...செய்தி."

தீக்ஷை வளர்க்கத் தீர்மானம்!

★

இந்த யுத்தத்தால் உலகத்தில் ஏற்படப்போகும் மாறுதல்கள் பல. இந்தியாவில் என்னென்ன மாறுதல்கள் ஏற்படப்போகிறதோ யார் கண்டார்கள்! ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாகத் தோன்றுகிறது. இங்கு பல இளைஞர்கள் முனிவர்களைப் போலகாட்சியளிப்பார்கள்! க்ஷவர பிளேடுகள் கிடைப்பதில்லை. அப்படியே கிடைத்தாலும் அதற்குக் கொடுக்கும் விலையை நினைத்தால் திக்பிரமை அடையும்படியிருக்கிறது. இதை சமாளிப்பதெப்படி? யுத்தம் முடியும்வரை 'க்ஷவரம் வேண்டாம்' என்று முடிவு செய்யத்தான் தோன்றும்.

சிகந்திராபாத்திலும் ஹைதராபாத்திலும், காலேஜ் மாணவர்களும், வாலிபர்களும் அங்ஙனமே முடிவுசெய்து விட்டார்களாம்!

★

"சங்கதியா? செய்தியா?"

"ஆம். கடைசீச் செய்தி."

"நான் யாரென்றறியாக் குருடன். இப்பொழுது அனந்த விச்வத்தில்...ஞானோதயத்திற்காக காலத்துடன் போராடும் ஓர் பிக்ஷு." அந்தகாரத்தைப் பிளந்து கொண்டு அச்வம் ஓடும் போது அண்ட சராசரங்கள் அரசகுமாரனை...'ஞானோதயத்'திற்காக செல்லும் யுவராஜனுக்கு உடல் குலுங்கத் தலை வணங்கி தன்யவாதம் செய்தன.

நரையை ஒழியுங்கள்.
தலைமயிர் நரைத்திருக்கும்பொழுது டாக்டர் அம்ருடைய கரை பிடிக்காததும் இயற்கையானதுமான தந்தக் கறுப்பு (IVORY BLACK) சிறந்தது. ரிஜிஸ்டர் நெ. 1998. எங்கும் விற்பனை செய்யப்படுகிறது.
APPAH & CO., Madras.
N. PASAI GOUNDER,
Coimbatore.

ஜோதிர்மண்டலம்

★

சித்ரபானுஸூ மார்கழிமீ

★

விசாகம்

இந்தப் பக்கத்திலுள்ள படம் சென்னையில் இராக் காலத்தில் முன்னிரவில் நமக்குத் தெரியும் நக்ஷத்திரக் கூட்டங்களைக் காட்டுகின்றது. படத்திலுள்ளபடியே முதல் தேதி இரவு 11-30 மணிக்கும், 15-ம் தேதியன்று 10-30 மணிக்கும் 30-ம் தேதியன்று 9-30 மணிக்கும் இக்கூட்டங்கள் அமைந்திருக்கும் படத்தை உபயோகிக்க நாம் எத்திசையை நோக்கி நிற்கிறோமோ அத்திசை அடிப்பாகமாக வரும்படி படத்தை திருப்பி வைத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுது நமக்கு எதிரில் அடிவானம் முதல் உச்சியிலுள்ள கூட்டங்கள், படத்தில் அடிப்பாகம் முதல் நடுவரையில் காணப்படும். இப்படத்தை சென்னை தவிர மற்ற ஊர்களுக்கும் உபயோகப்படுத்தலாம்.

மேஷ ராசி மண்டலம்

மேஷ ராசிக்கூட்டம் இம்மாதம் சுமார் 9-மணிக்கு உச்சிக்கு வருகிறது. இது ஒரு சிறிய கூட்டம். அதிக அழகுடன் விளங்குகிறது. ஆகாயத்தில் இதன் முக்கிய நக்ஷத்திரங்கள் ஒரு "டோலாக்கு" மாதிரியான தோற்றத்தைச் சித்தரிக்கின்றன. ராசி மண்டலத்தில் இருப்பதாலும், இதன் அழகிய தோற்றத்தாலும், மேஷக்கூட்டம், வான சாஸ்திரத்திலும், ஜோதிட சாஸ்திரத்திலும், முதல் ஸ்தானத்தை அடைந்திருக்கின்றது.

இதைக் குறித்து கிரேக்க கதை பின்வருமாறு:—தெஸ்ஸாலிதேச அரசனுக்கு ஒரு மகனும், ஒரு மகளும் இருந்தார்கள். அவர்களை அவர்கள் தாயார் மிகவும் கொடுமையாய் நடத்தியதைப் பொறுக்கமாட்டாமல் அவர்களை விடுவிக்கும் பொருட்டு மர்குறி எனும் கடவுள் ஒரு செம்மறி ஆட்டை அனுப்பினர். அந்த ஆட்டின் முதுகின் மேல் அண்ணனும் தங்கையும் ஏறி உட்கார்ந்ததும் அது வெகுவேகமாக ஆகாயத்தில் பறந்து சென்றது. ஆனல் போகும் வழியில் சமுத்திரங்களைக் கடக்க நேர்ந்தது. அப்பொழுது அந்த ராஜகுமாரி ஆட்டின் முதுகிலிருந்து தவறி கீழே சமுத்திரத்தில் விழுந்து இறந்தாள். அரசகுமாரன் மட்டும் ஓர் ஊர் போய்ச்சேர்ந்து தன் நன்றியறிதலைக் கடவுளுக்குச் செலுத்துவதற்காக அந்த அழகிய ஆட்டையே பலியிட்டான்.

ஜுபிடர் என்னும் கிரேக்கக் கடவுள் அந்த ஆட்டை ஆகாயத்தில் ஒரு நக்ஷத்திர மண்டலமாக்கி என்றும் விளங்கச் செய்ததாக கிரேக்கர் கதை.

இம்மாதத்திய இராசி சக்கரம்.

ஜோதிடத்தில் பிரியமுள்ளவர்கள் பொருட்டு கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. மார்கழிமீ 1வ

		சனி	
கேது	7வ—மிதுன-குரு 15வ—மகர-புதன் 20வ—மகர-சுக்கிரன்		குரு
			ராகு
சூரியன் புதன் சுக்கிரன்	குஜன்		

ராசி மண்டலத்தில் முதல் மண்டலம் மேஷம். இப்பூவுலகமே, சூரியன் இம் மண்டலத்திலிருக்கும்பொழுது தான் உண்டானதாகக் கொள்கை. இந்த மண்டலத்தை சூரியன் பண்டைக் காலத்தில் மார்ச் மாதம் 20-ம் தேதியன்று அடைந்துவந்தது. ஆனல் இப்பொழுது ஏப்ரல் 12, 13 தேதிக்கப்புறம் தான் வருஷா வருஷம் அடைகிறது. இதற்கு "அயன கதி"யே காரணம். நம் பூமி நேர்மையான உருண்டை வடிவம் கொண்ட கோளம் அல்லம், நடுப்பாகத்தில் பெருத்து உள்ளது. சூரியன், சந்திரன், கிரஹங்கள் இவைகளின் ஆகர்ஷண சக்தியால் பூமியின் துருவம் மாறிக் கொண்டே வருகிறது. இதனல் தான் சூரியன் இப்பொழுது மேஷ ராசியை முன் காலங்களில் போல்மார்ச் மாதம் அடையாமல் ஏப்ரலில் அடைகிறது.

அச்வனியும், பரணியும் மேஷத்திலிருக்கின்றன. அச்வனியை முக்கிய மூன்று நக்ஷத்திரங்கள் குறிக்கின்றது. இந்தப் படங்களில் குதிரை முகமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. பரணி அதற்குக் கிழக்கே காணப்படுகின்றது.

இதன் முக்கிய நக்ஷத்திரம் இரண்டாம் தர ஒளி பொருந்தியது. சுமார் 74 ஒளி வருஷங்களுக்கப்பாலிருக்கிறது. இரண்டாவது நக்ஷத்திரமும் இரண்டாம் தர நக்ஷத்திரம் தான். ஆனல் 34 ஒளி வருஷங்களுக்கப்பாலிருக்கிறது. முக்கியமாக ராசி மண்டலங்களில் சிறியதானலும், மேஷம் அழகான தோற்றத்துடன் விளங்கும் கூட்டம்.

கிரஹ நிலை.

புதன்:—இம்மாத முதலில் தனுசுக் கூட்டத்திலிருக்கிறது. இம்மாத ஆரம்பத்தில் சூரியனுடனேயே சுமாராக உதயமாகி அஸ்தமிக்கிறது. ஆனல் நாள் செல்லச் செல்ல, புதன் சூரியனுக்கு அப்புறமே மறைகிறது. மாதக் கடைசியில் புதனை மேல் வானில் காண முடியலாம். 25-ந்தேதியன்று (8-1-1943) புதன் சூரியனை விட்டு வெகு தூரத்தில் இருக்கிறது. மாத நடுவில் மகரக் கூட்டத்தை அடைகிறது.

சுக்கிரன்:—மேல் வானின் முக்கிய காக்ஷி சுக்கிரன் நாள் செல்லச் செல்ல சூரியன் அஸ்தமித்ததும் மேல் வானில், மேன்மேலும் உயரத்தில் காணப்படும்-அதன் ஒளி மற்ற எல்லா கிரஹங்களையும் விட அதிகமானது. தனுசுக் கூட்டத்தில் மாத முதலில் சஞ்சரித்து வருகிறது. மாதம் 3-ம வாரத்தில் மகரத்தை அடைகிறது.

குஜன்:—குஜன் துலாக் கூட்டத்திலேயே காணப்படும். விடியற் காலையில் உயரத்தில் அழகுடன் கீழ்வானில் உயரத்தில் பிரகாசிப்பதை காணலாம்.

குரு:—இம்மாதமும் மிதுனத்திலேயே கழிக்கிறது. மாதக் கடைசியில் 28-ம் தேதியன்று (11-1-43) குரு சூரியன் மறையும் பொழுது கிழக்கே உதயமாகிறது. மொத்தத்தில் இரா முழுவதும் அழகுடன் குரு இம் மாதம் விளங்கும்.

சனி:—குருவிற்கு முன்பே உதயமாகி விடுகிறது. ரிஷபக் கூட்டத்தில் அழகுடன் பிரகாசிக்கிறது.

உரானஸூம், நெப்டியூனும் முறையே ரிஷபத்திலும், கன்னியிலும் ஊர்ந்து வருகின்றன. இவை நமக்குப் புலப்படாது.



த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

நௌகா சரித்திரம் — **21-வது கீர்த்தனை**

I

பல்லவி

மாகு லமுன இஹ பரமொஸகின
நீகு மங்களம் சுப மங்களம்
மா குலமு ப்ரோசின மதன ஜனக நீகு
மங்களம் சுப மங்களம்

சரணம்

1. மத கஜக மன மானித ஸத்குண நீகு
மங்களம் சுப மங்களம்
மத மோஹர ஹித மஞ்ஜுளரூப மறி நீகு
மங்களம் சுப மங்களம்

2. மனஸிஜவைரி மானஸ ஸதன நீகு
மங்களம் சுப மங்களம்
மனவினி வினி மம்மேலு கொன்ன நீகு
மங்களம் சுப மங்களம்

3. மா மனஸுன நெலகொன்ன க்ருஷ்ண நீகு
மங்களம் சுப மங்களம்
மா மனோ ரத பாலித் த்யாகராஜ
மங்களம் சுப மங்களம்.

II

மாகுலமுனகு—எங்கள் குலத்திற்கு
இஹபரமு ஒஸகின—இஹபர சௌக்யத்தை அளித்த
நீகு—ஏ கண்ணு! உனக்கு
மங்களம்—மங்களம் உண்டாகுக!
மா குலமு ப்ரோசின—எங்கள் குலத்தைக் காப்பாற்றின
மதன ஜனக! நீகு—மன்மதனின் தந்தையான உனக்கு
மங்களம்—மங்களம் உண்டாகுக!
மத கஜகமன!—மத்தகஜம் போன்ற நடையை உடையவனே!
மானித ஸத்குண! நீகு—போற்றத்தகுந்த நற்குணங்கள் உள்ள கண்ணு! உனக்கு
மங்களம்—மங்களம் உண்டாகுக
மத மோஹ ரஹித!—காமக்ரோதாதிகள் அற்றவனே!
மஞ்ஜுள ரூப!—அழகான வடிவம் உள்ளவனே'
மறி நீகு மங்களம்—மேன்மேலும் உனக்கு மங்களம் உண்டாகுக!
மனஸிஜ வைரி—மன்மதனின் பரம சத்ருவான பரமசிவனின்
மானஸ ஸதன—மனதில் வசிப்பவனே!
நீகு மங்களம்—உனக்கு மங்களம் உண்டாகுக!
மனவினிவினி—எங்கள் முறையீட்டைக் கேட்டு
மம்மு ஏலு கொன்ன—எங்களை ஏற்று ரக்ஷித்தருளின
நீகு மங்களம்—உனக்கு மங்களம் உண்டாகுக!
மா மனஸுன—எங்கள் மனதில்
நெல கொன்ன க்ருஷ்ண—வாசம் செய்யும் கண்ணு!
நீகு மங்களம்—உனக்கு மங்களம் உண்டாகுக!
மா மனோரத—எங்கள் மனோ பீஷ்டத்தை நிறைவேற்றி வைத்தவனே
பாலித த்யாகராஜ!—த்யாகராஜனை ரக்ஷித்த கண்ணு!
நீகு மங்களம்—உனக்கு மங்களம் உண்டாகுக!

III

மாகு லமுன:—இது நௌகா சரித்திரத்தின் மங்கள் கீர்த்தனம், கோபியர்கள் அனைவரும் கண்ணனுக்கு திருஷ்டி கழிக்க மங்கள ஆரத்தி எடுத்ததை இக்கீர்த்தனம் விவரிக்கிறது.

இத்துடன் நௌகா சரித்திரம் முடிவடைகிறது. நௌகா சரித்திரத்தை படிப்பவர்களும், கீர்த்தனங்களைப் பாடி ஆனந்திப்பவர்களும்

"தரலோ ஹரிக்ருத நௌகா சரிதம்புனு
வின்னவாரு சன்மார்க்க முசே
சிரஜீவுலை செலங்குச் வரசுத தனமுலனு
படசி வர்தில்லுதிரே."

என்று சொல்லப்பட்டபடி "தீர்க்காயுள், செல்வம், புத்திரசந்தானம் முதலானவைகளும் குறைவறப் பெற்று இன்புருவர்" என்று கூறப்பட்டுள்ளது.

"த்யாகராஜக்ருதாம் புண்யாம் கதாம்
ஸாது மனோஹராம் |
யே ச்ருண் வந்தி நரா லோகே
தேஷாம் கிருஷ்ண: ப்ரஸீததி||

என்ற ஸ்லோகத்தில் "தியாகராஜ ஸ்வாமிகளால் இயற்றப்பட்ட இந்த நௌகா சரித்திரத்தை கேட்பவர்கள் கண்ணன் அருள் பெற்று இஹபர சுகமுறுவர்" என்று கூறப்பட்டுள்ளது.

இந்தச் சுலோகம் நௌகா சரித்திரத்தின் பல ச்ருதிதியாகக் காணப்படுகிறது.

IV

ராகம் ஸுரடி — மிச்ர சாபு

(28-வது மேள ஜன்யம். ஆ. ஸரிமபநிதநிஸ். அவ. ஸ்நிதபமகபமரிஸ.

பல்லவி

ப ஸ்ா	நி த பா	ப ப நி	நி ம பா	பூ ப ஸ்	நி த பா	ப பா	நி ம பா
மா .	கு . ல	மு ன .	கி . ஹ	ப ல .	மொ . ஸ	கி ன	நீ . கு
ப ப ஸ்	நி த பா	; ;	ம ப நீ த	மா ,	ம க ப ம	க ரீ	ரி ம ரி ஸ
மங் . .	க . ளம்		ஜ . ய .	மங்	க . ளம்	. .	. . . .
; ரி	மா பா	ப ரீ	ஸ்ா ரி ம்	ரி ஸ்ா	நீ தா	ப பா	ரீ மா
மா	குல	ப்ரோ .	சின .	ம த	ன ஜ	ன க	நீ கு
ப ஸ்ா	நி த பா	; ;	ம ப நி த	மா ,	ம க ப ம	க ரீ	ரி ம ரி ஸ
மங் .	க . ளம்		ஜ . ய .	ம ங்	க . ளம்	. .	. . . . .

(சரணங்களை இது போன்றே பாடவும்.)

சிறுவர் கதை

தங்கக் கிளி

★

டி. பி. கிருஷ்ணமாச்சாரி, பி. ஏ.

முன் காலத்தில் விநோதபுரியில் ராஜசேகரன் என்ற ஒரு அரசன் இருந்தான். அவனுக்கு இரு மனைவிகள். மூத்தாளுக்கு தனசேகரன், ஜயசேகரன் என்று இரண்டு பிள்ளைகள். இளையாளுக்கு குலசேகரன் என்று ஒரு பிள்ளை.

அரசனுக்கு அதிசய வஸ்துக்களைச் சேர்ப்பதில் மிகுந்த பிரியம்.

ஏதோ ஒரு இடத்தில் ஒரு தங்கக் கிளி இருப்பதாகவும் அது மிகவும் அழகாகப் பேசுகிறதென்றும் அரசன் கேள்வியுற்றான். உடனே தன் பிள்ளைகளையழைத்து அந்த தங்க கிளியை யார் கொண்டு வருகிறானோ அவனுக்குப் பாதி ராஜ்யம் பரிசளிப்பதாகத் தெரிவித்தான்.

மூத்தாள் பிள்ளைகளான தனசேகரனும் ஜயசேகரனும் எப்பொழுதும் சேர்ந்தே விளையாடுவார்கள். ஆனால் குலசேகரனை மட்டும் சேர்த்துக்கொள்வதில்லை. அப்படி அவனே வலுவில் வந்து விளையாடினாலும் பொறாமைப் படுவார்கள்.

தனசேகரனும், ஜயசேகரனும் நிறைய பணத்தை எடுத்துக்கொண்டு இரண்டு நல்ல குதிரைகளையும் தயார் செய்துகொண்டு தங்கக் கிளியை கொண்டு வரப் பிரயாணமாயினர். வழியே சில திருடர்கள் அவர்களைப் பார்த்தார்கள். நய வஞ்சகமாக அவர்களுடைய பணத்தை கொள்ளை கொள்ள எண்ணி இரண்டு மூன்று பேர் சாதாரண உடையுடன் ராஜகுமாரர்களை யணுகி சிநேகிதர்போலப் பழகினார்கள்.

பக்கத்து ஊரில் ஒரு சாப்பாடு போடும் விடுதியில் ராஜகுமாரர்களும் அவர்களுடன் கூட வந்தவர்களும் தங்கினார்கள். அங்கே ஒரு பெரிய அறைதான் காலியாக இருந்தபடியால் அன்றிரவு எல்லோரும் ஒரே அறையில் தூங்க வேண்டியிருந்தது.

இரவில் திருடர்கள் பணத்தைக் கொள்ளை கொண்டு போயினர். தம்மை ஏமாற்ற அரசகுமாரர்கள் எண்ணுவதாக நினைத்த வீட்டுக்காரர் அவர்களை அடிமையாக்கினான். முதுகில் சூடும் போட்டான்

“உங்கள் தந்திரம் என்னிடம் பலிக்காது. நீங்கள் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுத்துவிட்டு பிறகு வெளியே செல்லுங்கள்” என்று போஜன விடுதிக்காரன் கோபமாகச் சொன்னான்.

தங்கள் விதியை நொந்த வண்ணம் தனசேகரனும் ஜயசேகரனும் அவ்விடுதியில் மாதக் கணக்காக அடிமை வேலைகள் செய்து வந்தனர்.

தங்கக்கிளியை கொண்டு வரச் சென்ற புதல்வர்கள் வீடு திரும்பாதது கண்டு அரசன் மிகவும் மனம் வருந்தி குலசேகரனையழைத்து அவர்கள் சென்ற வழியே சென்று பார்த்து வரும்படி அனுப்பினான்.

குலசேகரன் பல திசைகளிலும் சென்று பார்த்தான். எங்கும் தன் சகோதரர்களைப்பற்றி அறிய முடியவில்லை. ஒரு நாள் ஒரு காட்டின் வழியே செல்லும் போது ஒரு பர்ண சாலையையடைந்தான். தாகமிகுதியால் அங்கேயிருந்த முனிவரிடம் சென்று கொஞ்சம் தண்ணீர் கேட்டான். முனிவரும் மனமிரங்கி தன் கமண்டலத்திலிருந்த தண்ணீரை வார்த்து சற்று இளைப்பாறி விட்டு போகச் சொன்னார். தன் விருத்தாந்தங்களைச் சொல்லிவிட்டு தங்கக் கிளியைப் பெற வழியென்னவென்பதை முனிவரிடம் கேட்டு தெரிந்து கொண்டான் குலசேகரன்.

“அது தேவலோகத்திலன்றோ இருக்கிறது? அங்கு செல்வது மிகவும் கஷ்டம். அப்படி சென்றாலும் தேவர்கள் கண்களில் பட்டால் போவோரை உடனே எரித்துவிடுவார்கள். ஒரு உபாயம் சொல்கிறேன். தைரியமிருந்தால் அதன்படி செய்” என்று முனிவர் பதிலளித்தார்.

“இன்று மத்தியானம் உச்சிப்பொழுதில் பக்கத்திலுள்ள தடாகக் கரையில் நீ ஒளிந்திரு. அநேகம் தேவ கன்னிகைகள் ஆகாய மார்க்கமாய் பறந்து வந்து தங்கள் சிறகுகளை கழற்றி கரையில் வைத்துவிட்டு தடாகத்தில் குளித்து விளையாடுவார்கள். நீ அவர்கள் கண்ணில் படாமல் ஒரு சிறகை எடுத்துக்கொண்டு பக்கத்தில் ஒரு புதரில் ஒளிந்துகொண்டிரு. அவர்கள் திரும்பி தேவலோகம் பறந்து செல்லும்போது நீயும் சற்று தூரத்தில் அவர்கள் பின்னால் போனால் தேவ லோகமடையலாம். அங்கே தேவேந்திரனின் உத்யான வனத்தில் ஒரு கூண்டில் தங்கக் கிளியிருக்கும். நீ சமயம் பார்த்து அதை தூக்கிக்கொண்டு நாளை இங்கே வரும் தேவ கன்னிகைகளுடன் வந்துவிடு” என்று முனிவர் சொன்னார். குலசேகரனும் அப்படியே தடாகக் கரையில் ஒளிந்திருந்து முனிவர் சொன்னபடியே செய்து தங்கக்கிளியைக் கொண்டு வந்தான்.

தன் சிறகுகளை இழந்த தேவ கன்னிகை முனிவரையடைந்தாள். தன் வரலாற்றை உரைத்தாள். முனிவரும் அவளைத் தேற்றி “பெண்ணே, இன்று இருட்டி விட்டபடியால் நாளை தேடுவோம். என் சிஷ்யன் குலசேகரனும் இங்கே வந்துவிடுவான். அவன் ஒரு நொடியில் தேடிக் கொடுப்பான். ஒரு வேளை நீ அதை ஏதாவது மரப் பொந்தில் வைத்து விட்டாயோ என்னவோ” வென்று சமாதானம் கூறினார். மறு நாள் குலசேகரன் வரும் சமயத்தில் தேவகன்னிகையை பர்ணசாலையிலிருக்கச் செய்துவிட்டு தடாகக் கரை பக்கம் முனிவர் வந்துசேர்ந்தார். குலசேகரன் மெதுவாக பறந்து வந்து முனிவரை வணங்கினான்.

“குலசேகரா உன் சிறகை ஒரு மரப்பொந்தில் வைத்துவிட்டு கிளியையும் ஒரு மறைவிடத்தில் வைத்து விட்டு வேறு வழியாக பர்ணசாலை வா. நான் அங்கிருக்கிறேன்” என்று யுக்தி சொல்லிவிட்டு பர்ணசாலை வந்தடைந்தார். குலசேகரனும் சற்று நேரங் கழித்து வந்து சேர்ந்தான். உடனே மூவருமாக சிறகைத் தேட ஆரம்பித்து கடைசியில் குலசேகரன் அதை ஒரு மரப்பொந்திலிருந்து கண்டெடுத்தான். மிகுந்த சந்தோஷத்துடன் சிறகையணிந்துகொண்டு “குலசேகரா உனக்கு என்னால் என்ன வேண்டும் கேள் தருகிறேன்” என்றாள் தேவகன்னிகை.

“நீ தான் எனக்கு வேண்டும். என் மனம் உன்னிடம் அடிமையாகி விட்டது.” என்று குலசேகரன்பதிலுரைத்தான். தேவகன்னிகைக்கு வியப்புண்டாயிற்று.

“குலசேகரா நான் உன்னுடன் எப்பொழுதும் கூடியிருக்க முடியாது. இரவு நேரங்களில் கட்டாயம் நான் வந்து விடுகிறேன். ஆனால் பகல் நேரங்களில் என்னைப் பார்க்க வேண்டுமென்றால் இந்த மோதிரத்தை உன் விரலால் தடவு” என்று சொல்லி ஒரு நவரத்ன மோதிரத்தை அவன் கையிலணிவித்து தேவலோகம் சென்றாள்.

குலசேகரன் மிகுந்த சந்தோஷத்தோடு முனிவருடைய ஆசீர்வாதம்பெற்று ஊர் நோக்கித்திரும்பினான். வரும் வழியில் தன் சகோதரர் அடிமை வேலை செய்து கொண்டிருந்த விடுதியில்வந்திறங்கினான். வீட்டுக்காரிடம் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுத்து சகோதரர்களை அடிமை வாழ்விலிருந்து விடுவித்தான். எல்லோரும் ஊருக்குப் புறப்பட்டனர். தங்கக் கிளியைப் பிடித்த வரலாற்றை

(அடுத்த பக்கம் பார்க்க)

பாரதியாரைப்பற்றி நினைவுகள்

★

தங்கம்மாள் எழுதியது

★

கவி அரசர் பாரதியாரின் புதல்வி ஸ்ரீமதி தங்கம்மாளை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தவேண்டிய அவசியமில்லை. தமது தந்தையிடம் நேரிடக் கவனித்த அநேக ரஸமான சம்பவங்களை அவர் “மித்திரன் வாரப் பதிப்பு”க்கு எழுதி வர முன் வந்திருக்கிறார்.

நமது இடைக்காலத்தில், அதாவது பாரதியார் காலத்திற்கு சிறிது முன்பாகவுள்ள காலத்தில்—ஜாதிப் பொய்களும், சமயவாதங்களும் வீண் பெருமைகளும், அதிகரித்திருந்தன. மடத்தனமான விஷயத்தை மகிமை பொருந்தியதென்று மாந்தர் கருதிய காலம். எதற்கெடுத்தாலும், ஒரு சின்ன விஷயத்திற்குக்கூட போன ஜன்ம புண்ய, கர்ம, பலங்களைக் கூறி சமாதானம் படும் நாள். முயற்சியின்றி, சோம்பல் மிகுந்து தொழில்கள் சிதைந்து கலைகள் மங்கி அந்நிய மோஹம் தலைவிரித்தாடிய சமயம். வழக்கம் என்பதற்காக மனதறிந்து இழிந்த காரியங்களை செய்கின்ற சமயம். பாரதியார் இதையெல்லாம் அழிப்பதற்காகப் பிறந்தவர்-இந்த மாசுகளைத் தொலைத்து வேதகாலத்து வாழ்க்கையை உலகத்திற்களிக்க ஆவல்கொண்டார். (அவர் அமரன்) அமரன் ஆனாலல்லது கேவலம் கற்பனை செய்த மாத்திரத்திலேயே அமர வாழ்வெய்த முடியாதென்று ரிஷிகள் வாழ்ந்த காலத்திலுள்ள நூல்களை ஆராய்ந்தார். அந்த ஆராய்ச்சிக்கு அருந்துணையாக அரவிந்தர் கிடைத்தார். பின்பு அறிவில்லாத-நமது ஹிந்து சமுதாயத்திற்கு ரிஷிகளும். அவர்கள் பரிசுத்த வாழ்வுமே காரணமென்றுணர்ந்து அவர்கள் சொற்களாகிய மந்திரங்களைப் படித்து அறிந்து இயற்றிய பாடல் “எங்கள் வேள்வி”. அந்தப் பாடல் பார்வைக்கு, அதாவது மேலுக்கு அஸுர-தேவ (ரிஷிகள்) சம்பாஷணையை ஒத்திருக்கிறது. வாழ்க்கைக்கு இன்றியமையாதது.நல்ல குணங்கள்—வாழ்நாளை நரகமாக்குவது பொறாமை—பகை அச்சம். ஆதலால் எப்போதும் இரண்டு குணங்களும் யுத்தமிடும் நம்மனதை அறுக்கும், மாசுறுத்தும் கெட்ட செய்கைகளை அஸுரர்களாக வைத்து நல்ல எண்ணங்களையும் செய்கைகளையும் தேவர்களாகப் பாவித்துப்பாடியது. முதலில் தன் மனப்பகையைக் கொன்று, தமோ குணத்தைவென்றுவிட்டால் மனிதன் அமரன் ஆவான் என்ற உண்மையை தானனுபவித்துணர்ந்த உண்மையை உலகத்தினருக்குப் பறை சாற்றினார். கல்விக் கடலில் ஞானமுதம் கடைந்தெடுத்து அதை உண்ண வொட்டாது தடுக்கும் பகை அக்ஞானத்தை மண்டையிலடித்துக் கொன்று விட்டு, அன்பெனும் அமுதத்தை யுண்டால் மானிடன் புத்துயிர் பெற்று பொலிவான் என்று கூறுவார்.

ரிஷிகள் எங்கள் வேள்விக்
கூட மீதில்
ஏறுதே தீ! தீ!
இந்நேரம்
பங்க முற்ற
பேய்களோட
பாயுதே தீ! தீ!
இந்நேரம்
அஸுரர் தோழரே
நம் ஆவிலே
சூழுதே தீ! தீ!
ஐயோ நாம்
வாழ வந்த
காடுவேக
வந்ததே தீ! தீ!
அம்மாவோ

எங்கள் தந்தை மெய் மறந்து பாடும்போது நான் குழந்தையான படியால், நிஜமாகவே ஒரு திருட்டுக் கூட்டத்தார் தீயினால் சூழப்பட்டு வாடுவது போன்ற உணர்ச்சி ஏற்படும். இதை யுணர்ந்த எங்கள் அப்பா வேடிக்கையாக “அச்சம் தவிர்” என்பார். பின்பு தான் வெறும் பாட்டு என்ற உணர்ச்சி ஏற்படும்.

நம் வாழ்க்கையில், மனதில் எத்தனையோ ஆசைகளும், ஆவல்களும் ஆனந்தங்களும், விருப்பங்களும், தாகமும், வெறுப்பும் ஈடேறா எண்ணங்களும் உதிக்கின்றன. சில சமயம் நடக்காதென்று நிச்சயமாகத் தெரிந்த விஷயத்தில் கூட நமக்கு ஓர் ஆசை இருந்து கொண்டிருக்கிறது. அதையே நப்பாசை என்கிறோம். சிறுவர்களுக்குத் தின்பண்டங்களிலிருக்கும் நப்பாசை, பெரியவர்களாகிய நமக்கும் எத்தனையோ விஷயங்களில் ஏற்படுகின்றன. எனக்கும் அதுபோல ஓர் விருப்பம் மனதில் இருக்கிறது. அதாவது சீதைக்கு மறுபடியும் அயோத்திக்கு வந்த பின் கானகத்திற்குச் சென்று ரிஷி பத்தினிகளோடு சம்பாஷிக்கவும், காட்டுப் பறவைகளுடனும், விலங்குகளோடு விளையாடி இன்புற வேண்டுமென்று தோன்றிற்றும். அதைப் போல “இன்னும் ஒரு நாள் புதுவையில் அப்பா, ஐயர், அரவிந்தர், ஸ்ரீநிவாஸாசாரி, எல்லோரும் கூடி சம்பாஷிக்கும் சமயம் ஏற்பட்டு அதைக் கேட்க வேண்டும்.!” இது நடக்கும் காரியமா?!

ஆகா! மனிதனுக்கு குழந்தைப் பருவத்தில் தான் சகல சுகமும், திருப்தியும், மனம் நிறைய அநுபவிக்கும் காலம், அந்தக் குழந்தைப் பருவத்தில் நான் அந்த மஹான்களோடு கூடி ஸம்பாஷிக்கும் பாக்கியம் பெற்றேன். இன்று அதை நினைக்கும் பொழுது “காதில் தேன் பாயுது” ஓர் நாள் தேவாரம்,திருவாசகம், ஓர் நாள் பாஞ்சாலி சபதம், ஓர் நாள் திருக்குறள், ஓர் நாள் ரிக்வேதம், ஓர் நாள் பகவத்கீதை- இப்படியே தினம் நூலாராய்ச்சி நடைபெறும். அறிவிலும், ஞானத்திலுமுதிர்ந்த பெரியோர்கள் பேச்சில் தேனும் பாலும் கசியும்.

(தொடரும்)

சிறுவர் கதை

(முன் பக்கத் தொடர்ச்சி)

யும் அவர்களுக்குத் தெரிவித்தான். இதைக்கேட்ட இருவரும் குலசேகரன் மீது பொறாமை கொண்டு எப்படியாவது அவனை கொன்றுவிடுவதென்று தீர்மானித்தார்கள்.

ஒரு நாள் தனசேகரன் ஒரு கிணற்றண்டை போய் நின்றுகொண்டு “குலசேகரா என்ன அழகிய மீன் பார்த்தாயா?” என்று அவனைக் கூப்பிட்டான். குலசேகரன் அவசரமாக வந்து கிணற்றை எட்டிப் பார்த்தான். உடனே மூத்தவன் சைகை காட்ட ஜயசேகரன் சட்டென்று குலசேகரனை கிணற்றில் தள்ளி விட்டான். குலசேகரன் தான் தவறி விழுந்து விட்டதாக நினைத்து ‘அண்ணா, அண்ணா’ வென்று பல முறை கூப்பிட்டான். அவர்களிருவரும் அவனை திரும்பிக்கூட பார்க்காமல் விநோதபுரியை நோக்கி தங்கக் கிளியுடன் நடந்து விட்டார்கள்.

நல்ல காலம்! கிணற்றில் மாரளவே தண்ணீரிருந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் மோதிரத்தினால் தேவகன்னிகையை வரவழைத்து கரை சேர்ந்தான். பிறகு அவளுடன் கூட ஆகாய மார்க்கத்தில் சென்று விநோத புரி அடைந்தான். அப்பொழுது தான் தனசேகரனும், ஜயசேகரனும் தன் தகப்பனுக்கு குலசேகரனிறந்து விட்டதாகவும் தாங்கள் தேவலோகம் சென்றுகிளியைக்கொண்டு வந்ததாகவும் பொய் கதை சொல்லிக் கொண்டிருந்தனர். குலசேகரன் தொப்பென்று ஆகாயத்திலிருந்து அவர்கள் முன் குதித்தான். எல்லோரும் அது அவனுடைய பேயென்று கூக்குரலிட்டனர். உடனே குலசேகரன் தன் தந்தையை வணங்கி நடந்த விவரத்தை உரைத்தான்.

உண்மையை அறிந்த அரசன் உடனே காவலாளிகளைக் கூப்பிட்டு மூத்தாள் பிள்ளைகளிருவரையும் சுண்ணாம்பு காள்வாயில் போட்டுவிட உத்தரவிட்டான். உடனே குலசேகரன் குறுக்கிட்டு தன் சகோதரர்களை மன்னிக்க வேண்டினான். சகோதரர்களும் தவறை உணர்ந்தனர்.

அன்று முதல் குலசேகரன் விநோதபுரிக்கு அரசனானான். தேவகன்னிகைக்கு ஒரு அழகான மாளிகை கட்டுவித்து அதில் அவளுடன் சுகித்திருந்தான்.

டோங்ரே
பாலாமிருதம்
பலஹீனமான குழந்தைகளுக்கு
விசேஷ பலத்தைக் கொடுத்து உதவக்கூடிய
சிறந்த மருந்துகள் இருக்கின்றன.

பயமுறுத்தல் நாடகம்

சிறு கதை

★

"நியாயவாதி" எழுதியது

1

சிறைக்கோட்டத்தை விட்டு வெளியே வந்தான் துரையப்பன். இருட்டையே தஞ்சமாகக்கொண்டிருந்த அவனது கண்களுக்கு வெளியுலகத்தின் ஒளி கூச்சத்தையளித்தது. சிக்ஷைக்கு பின் அவன் பெற்ற சுதந்திரம் ஒரு பயங்கரமான பரிகாசம் போல் அவனுக்குத் தோன்றியது.

ஐந்து வருட கடுங்காவல்! அடிமையிலும் கேவலமான மானங்கெட்ட வாழ்க்கை! கௌரவம், கண்ணியம், யோக்கியதை எல்லாவற்றையும் நாசமாக்கிய சிறைவாஸம்! சமூகத்தில் தலைதூக்க முடியாது செய்த சிக்ஷை.

தனக்கு நேரிட்ட அவக்கேட்டின் மூலகாரணம் மோகனாவே என்பதை அவன் எப்படி மறப்பான். மேலும் அவள் அவனது காதலி! அவள் பொருட்டு அவன் குற்றஞ் செய்யத் துணிந்தானே அவளே அவனைக் காட்டிக்கொடுத்து விட்டாள் என்றால் அவனால் அதை சகிக்க இயலுமோ?

குழந்தைப்பருவத்திலிருந்து துரையப்பனும் மோகனாவும் பழகினவர்கள். ஒரே கலாசாலையில் இருவரும் படித்தபடியால் அவர்களது நட்பு வளர்ந்தது. அதன் பயனாக ஒருவர் மற்றவர் மீது பிரேமை கொண்டது இயல்பேயன்றி வேறில்லை.

கலாசாலையை விட்டு வந்தபின் துரையப்பனுக்கு ஒரு பாங்கியில் உத்தியோகம் கிடைத்தது. மோகனா தன் பெற்றோர்களுடன் இருந்தாள். இருவரும் தம்பதிகளாய் வாழ்க்கை நடத்துவதற்கு ஒரு தடைதான் இருந்தது. அது என்னவெனில் துரையப்பனின் ஏழ்மை ஸ்திதியே.

சொற்ப சம்பளத்திலுள்ள தனக்கு மோகனாவை அவளது பெற்றோர் விவாகம் செய்து கொடுக்க இசையார் என்பது அவனுக்கு நன்கு தெரியும். தன்னிடம் பெருத்த தொகை இருக்குமாயின் தனது காதல் கைகூடும் என்ற எண்ணமே அவனை குற்றத்தில் இறக்கியது.

பாங்கியில் ரொக்கக் கணக்கு நிர்ணயமும் இரும்புப்பெட்டியிலுள்ள ரொக்கம் சரியாய் உள்ளதா என்பதை கவனிக்கும் பொறுப்பும் அவனிடம் இருந்தன. அப்பெட்டியில் கட்டு கட்டுகளாய் தூங்கிக்கொண்டிருந்த ஆயிரம் ரூபாய் நோட்டுகளில் ஒரு கட்டை கைப்பற்றி விட்டால் தனது தரித்திரம் ஹதமாய் விடும் என்று அவன் எண்ணினான். மோகனாவுடன் தூர தேசஞ்சென்று மாறு பெயருடன் வாழ்க்கையைத் தொடங்கலாம் என்று அவன் மனப்பால் குடித்தான்.

இரண்டொரு தடவைகளில் அவள் அவனுக்கு எழுதியுள்ள கடிதங்களில் அவள் அவன் மீது கொண்ட பிரேமை பிரதிபலித்தது. அதனால் தைரியமும் துணிவும் பெற்ற அவளது காதலன் தான்குற்றம் செய்யினும் தன்னை அவள் கைவிடாள் என்று நம்பியிருந்தான். பாங்கி பணத்தைக் கைப்பற்றியபின் அவன் அச்செய்தியை அவளுக்கு அறிவித்து தன்னுடன் தூர தேசம் செல்ல தயாராக இருக்கும்படி இரகசியமாய் எழுதியிருந்தான்.

பாங்கி பணத்தை தனது காதலன் களவாடியதை உணர்ந்த மோகனா அவனது தீச் செயலுக்காக மிகவும் வருந்தினாள். உத்தமன் என்று அவனை அதுவரையில் தான் பாராட்டியது தவறு என்பதைக் கண்டபின் அவள் அடைந்த ஏமாற்றமும் மனக்கசப்பும் விவரிக்கக்கூடுமானவையன்று. அவன் எழுதிய கடிதத்தை அவள் தனது தந்தையிடம் கொடுத்தாள். அதைப் படித்தவுடனேயே அவர் அதை போலீஸ் அதிகாரியிடம் அனுப்பினார். கலியாணத்துக்குத்தயார் செய்துகொண்டிருந்த துரையப்பனுக்கு காராகிரக வாஸம் வாய்த்தது. பாங்கி பணத்தை களவாடியதற்காக அவன் 5 வருட கடுங்காவல் தண்டனை விதிக்கப்பெற்றான்.

2

விடுதலை பெற்றபின் தனது வாழ்வைக் கெடுத்த மோகனாவை சும்மா விடக்கூடாது என்று துரையப்பன் தனக்குள்ளே தீர்மானித்திருந்தான். நஷ்ட ஈடு அவளிடமிருந்து வசூலிக்க வேண்டும் என்பது அவனது உத்தேசம். அவள் மீது கொண்டிருந்த காதலை அவன் தனது உள்ளத்திலிருந்து களைந்துவிட்டான். குரோதமும் வஞ்சமுமே அவன் மனத்தில் வியாபித்திருந்தன.

கண்ணியமாய் உத்தியோகம் வகித்த காலத்தில் அவன் மோகனாவிடமிருந்து பெற்ற இரு கடிதங்கள் அவனிடம் இருந்தன. அவை காதற் கடிதங்கள். தன்னால் துவக்கப்படும் போரில் அவையே வெற்றியளிக்கவல்ல அஸ்திரங்கள் என்பது அவனது நம்பிக்கை. சிறைக்குப் போகுமுன் அவன் தன்னுடைய இதர சாமான்களுடன் பத்திரமான இடத்தில் வைத்திருந்தான். விடுதலைக்குப்பின் அவற்றை எப்படி உபயோகிப்பது என்பதை எண்ணுங்கால் அவனது இருண்ட முகத்தில் குரூரமான சிரிப்பு தென்படும். 'மதி கெட்ட மோகனா! உன்னை என்ன பாடு படுத்துவேன் என்பது இப்பொழுது உனக்கு எப்படித் தெரியும்?'' என்று அவன் சொல்லிக் கொண்டே நகைப்பான்.

சுதந்திரத்தைப் பெற்று தனது சொற்ப பணத்தையும் விலைமதிக்கொணாத கடிதங்களையும் எடுத்துக்கொண்ட துரையப்பனின் முதல் காரியம் மோகனாவைக் கண்டுபிடிப்பதுதான். அவள் இருந்த வீட்டுக்குச் சென்று விசாரித்தான். மூன்று வருடங்களுக்குமுன் அவள் பெற்றோர் இறந்து விட்டதாகவும் அதன் பின் அவள் எங்கேயோ போய்விட்டாள் என்பதும் தெரிய வந்தன. அவள் எங்கு சென்றாள் என்பது அக்கம்பக்கத்தாரால் கூற இயலாததாய் இருந்தது.

ஆனால் துரையப்பன் ஊக்கம் தளரவில்லை. விடா முயற்சி தனக்கு வெற்றியளிக்கும் என்பது அவனது நம்பிக்கை. நகரம் முற்றும் அவன் சுற்றினான். தெருக்களில் அலைந்தான். நுட்பமாய் விசாரணைகள் செய்தான். ஆனால் யாதொரு பயனும் இல்லை. மோகனா எங்கேயோ மாயமாய் மறைந்துவிட்டாள்.

3

எதிர்பாராத விதமாய் அவனுக்கு புலன்கிடைத்தது. சோர்வுடன் அவன் ஒருநாள் ஒரு வாசகச்சாலையுள் நுழைந்தான். மேஜைமீதுள்ள ஒரு கனமான புஸ்தகத்தின்மீது அவன் கண் விழுந்தது. அது சர்வகலாசாலை பட்டதாரிகளின் ஜாபிதா.

மறுவினாடி அவன் அப்புஸ்தகத்தின் ஏடுகளை பரபரப்புடன் புரட்டி பக்கம் பக்கமாகத் தள்ளினான். பி. ஏ. பட்டதாரியான மோகனாவின் விலாஸம் அதில் இருக்கக்கூடுமல்லவா?

அவன் எதிர்பார்த்தபடியே அவளது விலாஸம் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதை தனது குறிப்புப் புஸ்தகத்தில் எழுதிக்கொண்டு தனது வாசஸ்தலத்துக்குத் திரும்பினான்.

அன்று அவன் மோகனாவுக்குக் கடிதம் எழுதினான். மறுநாள் சாயந்திரம் அவள் தன்னை நகரத்திலுள்ள நந்தவனத்தில் சந்திக்க வேண்டும் என்றும் அப்படிசெய்யத் தவறினால் அதற்காக அவள் வருந்தும்படி நேரிடும் என்றும் அதில் குறிப்பிட்டிருந்தான்.

* * * *

"மோகனா! என் கடிதத்தில் நான் விரும்பியபடி நீ வந்ததைப்பற்றி ரொம்ப சந்தோஷம். சௌக்கியமா? உன் பெற்றோர் இறந்துவிட்டார்களாமே! என்று வினவினான் அவளது மாஜி காதலன்.

"நீர் என்னை அழைத்ததின் கருத்து என்ன?" என்று வினவினாள் மோகனா.

"என் வாழ்வை நீ கெடுத்துவிட்டாயே! அதற்கு என்ன ஈடு செய்யப்போகிறாய்?" என்று ஆத்திரத்துடன் துரையப்பன் கேட்டான்.

"நீரே உமது வாழ்வைக் கெடுத்துக்கொண்டீரே யன்றி வேறல்ல. நீர் என்மீது பழி சுமத்துவது அடாது."

"மோகனா! நீ எழுதிய காதற் கடிதங்கள் இரண்டும் என்னிடம் இருக்கின்றன. அவற்றிலிருந்து எனது வீழ்ச்சிக்குக் காரணம் நீயே யென்பது விளங்கும். உனக்கு விவாகமாய் விட்டதா? சொல்லமாட்டாயா? நல்லது உனக்கு கணவன் இருக்கும் பக்ஷத்தில் அவன் இவற்றைப் படித்தால் உன்னை லேசில் விடுவானா?" என்று மிரட்டினான் துரையப்பன்.

மோகனா, "அதெல்லாம் இருக்கட்டும். உமக்கு வேண்டியது என்ன?" என்று வினவினாள்.

"எனக்கு பதினாயிரம் ரூபாய் தேவை. என் ஜீவனத்தைப் பாழாக்கிய நீ நஷ்ட ஈடாக அத்தொகையைக் கொடுக்க கடமைப்பட்டிருக்கிறாய்?" என்று நிறுத்தினான் துரையப்பன்.

மோகனா! அவ்வளவு பெரிய தொகைக்கு நான் எங்கே போவது? ஏதேனும் ஒரு பாங்கியின் இரும்புப் பெட்டிச் சாவி என்னிடமிருக்கிறது என்று நினைத்தீரா?" என்று அவன் முகத்தை நோக்கினாள். "மோகனா! கேலி செய்வதற்கு இதுவா சமயம்? பதினாயிரம் இல்லாவிட்டால் ஐயாயிரமாவது நீ கொடுத்தே தீர வேண்டும்!" என்றான் துரையப்பன்.

சற்று நேரம் மௌனமாயிருந்து விட்டு மோகனா 'நல்லது, நீர் நாளைக்கு இரவு பத்து மணிக்கு என் வீட்டுக்கு வாரும், பணத்துடன் நான் தயாராய் இருக்கிறேன் என் கடிதங்கள் இரண்டையும்—"

"உன்னிடம் திருப்பிக் கொடுத்து விட வேண்டியது தானே! அப்படியே ஆகட்டும்"

4.

மேலே குறிப்பிட்ட சம்பாஷணை நடைபெற்ற மறுநாள் இரவு பத்து மணி சுமாருக்கு துரையப்பன் மோகனாவின் வீட்டு வாசலில் நின்றான். உள்ளேயிருந்த ஒரு வேலைக்காரி அவனை அழைத்து முன் கட்டில் உள்ள விசாலமான அறையில் உட்காரும்படி கூறிவிட்டு, "எஜமான் பின்புறம் இருக்கிறார். சீக்கிரம் வருவதாகச் சொன்னார்" என்று கூறிவிட்டு அப்பால் சென்றாள்.

ஐந்து நிமிடங்கள் கழிந்தன. சுவரில் மாட்டப்பட்ட பெரிய கெடியாரத்தை நோக்கிய வண்ணமே உட்கார்ந்திருந்த துரையப்பன் தன் எதிரே திடும் பிரவேசமாய் நின்ற மனிதனை முதலில் கவனிக்கவில்லை. அம் மனிதன் துப்பாக்கியை நீட்டிய வண்ணம், "அடே அயோக்கிய நாயே! எழுந்திரு! உன் கைகளை தூக்கு! இல்லாவிட்டால் தாக்ஷண்யமின்றி சுட்டுவிடுவேன்" என்று மிரட்டிய பின்னர் தான் தனது அபாயத்தை உணர்ந்தான். அவன் உடல் நடுங்கியது. கண்கள் மருண்டன. மறு வார்த்தை பேசாமல் எழுந்து நின்றான்.

"அடே! நீ தானே அந்த துரையப்பன் என்ற அயோக்கியன்! பாங்கி பணத்தை திருடிவிட்டு ஐந்து வருஷம் ஜயிலுக்கு போய் வந்தவன். மோகனா—என் மனைவி—உன்னைப்பற்றிச் சொல்லியிருக்கிறாள்! அடே படுபாவி உன்னை போலீஸாரிடம் திரும்பியும் ஒப்படைக்க வேண்டுமா? ஜெயில் உணவு சாப்பிடவேண்டியது இன்னும் உனக்கு பாக்கியிருக்கிறதா?" என்று கடுமையான குரலில் அதட்டிய மனிதனைப் பார்த்து பயமுற்ற துரையப்பன் உளறிய குரலில்—" இல்லை—நான்—ஏதோ சொல்ல வாயெடுத்தான். அவனை தடுத்த மோகனாவின் கணவன், "சீ அற்பப் பதரே! பேசாதே! எங்கே அந்த இரண்டு கடிதங்களும்—" என்றான்.

"என் சட்டை பையில் வலது பக்கத்து ஜேபியில் இருக்கின்றன" என்ற பதில் வந்தது.

"நல்லது உன் கையை எடுக்காதே! அப்படியே இரு. நானே அந்த கடிதங்களை எடுத்துக் கொள்கிறேன்" என்று கூறிய வண்ணம் அம்மனிதன் துரையப்பனது சட்டைப்பையிலிருந்த இரு கடிதங்களையும் கைப்பற்றினான். அவற்றை கண்ணுற்றபின் திருப்தியுடன் அவன் துரையப்பனை நோக்கி "அடே! ஓசைப்படாமல் நீ வெளியே நட. இந்தப்பக்கம் நீ இனி தலை காட்டினால் உனக்கு சவுக்கடி கிடைக்கும் ஜாக்கிரதை" என்று எச்சரிக்கை செய்தான்.

தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று எண்ணிய மாஜி கைதி அவ்வீட்டை விட்டு விரைவாக வெளியேறினான்.

5

துரையப்பன் தன்னிருப்பிடத்துக்குத் திரும்பி வரவில்லை. வெகு தூரம் சென்றான். மோகனா வீட்டில் தான் அபஜயமடைந்தது அவனுக்குச் சகிக்கொணாத துக்கத்தைக் கொடுத்தது. மோகனாவுக்கு விவாகம் ஆயிருக்கும் என்பதையும் அவளது கணவன் தன்னை மிரட்டி தன்னிடமிருந்த கடிதங்களை பிடுங்குவான் என்பதையும் அவன் எதிர்பார்க்கவேயில்லை. ஏமாற்றத்தாலும் தோல்வியாலும் சஞ்சலமடைந்த அவனது மனம் வீட்டுக்குத் திரும்ப அவன் இஷ்டப்படவில்லை.

அந்த இரவில் பைத்தியக்காரனைப் போல் இங்குமங்கும் சென்ற அவன் ஒரு பேசும் படச்சாலையின் வாசலில் நின்றான். ஒரு பெரிய சித்திரப்பலகையில் "பயமுறுத்தல் நாடகம்" என்ற எழுத்துகள் காணப்பட்டன மனக்கசப்புடன் நகைத்த அவன் "நான் ஒரு பயமுறுத்தல் நாடகம் ஆடி தோற்று விட்டேன். இங்கே என்ன பயமுறுத்தல் நாடகமோ! பார்ப்போம்" என்று சொல்லிக்கொண்டே ஒரு டிக்கெட்டை வாங்கிக் கொண்டு உள்ளே சென்றான்.

அச்சமயம் திரையில் படத்தின் முக்கால் பாகத்துக்கு மேல் காட்டியாய்விட்டது. அதைப் பற்றி அவனுக்கு கவலையில்லை. தன்னை மறந்து சற்று நேரம் அங்கு கழிக்கவேண்டும் என்பதே அவன் எண்ணம், அவன் திரையை நோக்கிய பொழுது அதில் தென்பட்ட காக்ஷி இது தான்.

ஒரு அலங்காரமான அறை. அதில் ஒரு மனிதன் உட்கார்ந்து கொண்டிருந்தான் அவள் எப்பொழுது வருவாளோ என்று அம்மனிதன் முணுமுணுத்துக் கொண்டிருந்தான்.

மறு நிமிஷம் உட்புறத்து கதவு திறக்கப்பட்டது. ஒரு மனிதன் துப்பாக்கியை நீட்டியவண்ணம் பிரவேசமானான், ஸ்திரியை எதிர்பார்த்துக் கொண்டிருந்த மனிதனின் மார்புக்கெதிரே துப்பாக்கியை நீட்டிய அவன் "அடே அயோக்கிய நாயே! எழுந்திரு உன் கைகளை தூக்கு இல்லாவிட்டால் தாக்ஷண்யமின்றி உன்னைச் சுட்டு விடுவேன்" என்று மிரட்டினான்.

துரையப்பன் தனது கண்களை நம்பவில்லை. சற்று நேரத்துக்கு முன் மோகனாவின் வீட்டில் நடைபெற்ற காட்சி திரையில் சலனமாயிற்று. துப்பாக்கியை நீட்டிய மனிதன் தனது மனைவியைப் பயமுறுத்த வந்த மனிதனை பயமுறுத்தி அவன் கொண்டு வந்த கடிதங்களை பிடிங்கிக் கொண்டு அவனை துரத்திவிடுகிறான். அதை இமை கொட்டாமலும் தனது கண்களையும் காதுகளையும் நம்பாமலும் பிரமையுடன் துரையப்பன் கவனித்ததில் அதிசயம் என்ன இருக்கிறது?

பயமுறுத்தவந்தவன் தோல்வியுடன் வெளியேறியபின் கடிதங்களைக் கைப்பற்றிய மனிதன் தனது அங்கியை களைந்தான்! பொய் மீசைகளை எடுத்தான், என்ன ஆச்சர்யம்! அது ஆணல்ல! பெண்! கலகல வென்று இன்பகரமாய் நகைத்த வண்ணம் அவன் வெளியே நோக்கி "முட்டாளே ஏமாந்தாயா?" என்று சொல்லிக் கொண்டே உள்ளே சென்றான் இத்துடன் திரையில் அக் காக்ஷி முடிவடைந்தது.

அப்போது பார்க்க வேண்டுமே துரையப்பனின் முகத்தை. அவனுக்கு எல்லாம் விளங்கிவிட்டது. ஆம்! மோகனா தன்னை ஏமாற்றி விட்டாள். ஆண் வேடம் பூண்டு அவள் தன்னை பயமுறுத்த வந்தவனையே பதிலுக்கு பயமுறுத்தினாள். அப்பயமுறுத்தல் நாடகத்தில் இறுதி வெற்றி அவளுடையதே.

அப்பொழுது பின் பக்கம் இருந்த இருவரது பேச்சு அவன் காதில் விழுந்தது.

"இந்த படத்தின் கதையை எழுதினது யாரோ?"

"கதை, வசனம் இரண்டையும் எழுதினது மோகனா என்ற இளம் ஆசிரியை. அவளது நாவல்களும் சிறு கதைகளும் அபாரமான 'மதிப்பு' பெற்று விட்டன"

"அவளுக்கு விவாகமாய் விட்டதா?"

"இல்லை. அடுத்த மாதம் அவர் இந்த படத்தை "டைரக்ட்" செய்த தயாரிப்பாளரை மணக்கப் போகிறாளாம்"

"ஹி—ஹி—ஹி—" என்று துரையப்பன் நகைத்துக்கொண்டே வெளியே சென்றதைக் கண்டவர்கள் அவனைப் பைத்தியக்காரன் என்று கருதியிருப்பார்கள். உண்மையை அவர்கள் எப்படி அறியக்கூடும்?

FREE

EARN Rs. TEN PER DAY. You can easily earn Rs. 10 - per day without any investment in your spare time. No labour. No secrecy. Thousands have been benefitted. Ask for samples. Full particulars sent FREE.

LONDON C. COMPANY.
P. B. 165 S M M LAHORE

(EAB)

நரஸஉஸ் காபியைப் போன்ற புத்துயிரளிக்கும் பானம் வேறொன்றுமில்லை

கடுமையான வேலைக்கோ, விளையாட்டுக்கோ பிறகு உங்கள் களைப்பைப்போக்கி ஊக்கமளிக்கும் பானம்.

எந்தத் தரத்திலும் எவ்வளவு வேண்டுமானாலும் இந்தியாவில் எந்த பாகத்திற்கும் அனுப்பப்படும்: மற்ற விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—

நரஸஉஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி
ஹெட் ஆபீஸ்:
சேலம்.

MNCK-11-TM

ரூ. 10,000 மதிப்புள்ள கடியாரங்கள் இலவசம்

எமது உண்மையான மருந்து "ஜோஹர் - இ-ஹுசன்" அனாவசியமான ரோமத்தை விலக்கிவிடும். அதன் உபயோகத்தால் ஆயுள் பூராவும் ரோமம் வளராது. சருமம் மிருதுவாகவும், அழகாகவும், பட்டுப் போன்றும் இருக்கும். விலை பாட்டில் ரூ. 1/15. மூன்று பாட்டில் ரூ. 5/-

இந்த ஆயிலை பிரபலப்படுத்துவதற்கு அழகிய மியூட் கைகடியாரம், ஒரு தோலா லண்டன் நியூ கோல்ட், ஒவ்வொரு புட்டியுடன் இலவசமாகக் கொடுக்கப்படும். 3 பாட்டில்கள் சேர்ந்தாற்போல் வாங்கினால் நான்கு கைகடியாரம், 4 தோலா லண்டன் நியூ கோல்ட் தபால் சார்ஜ் இலவசமாகவும் கொடுக்கப்படும். கடியாரம் அழுத்தமாகவும், அழகாகவுமிருக்கும். 10 வருஷ உத்திரவாதம் அளிக்கப்படும்.

குறிப்பு:—சாமான் திருப்தியில்லாவிடில் பூரா விலை வாபஸ்.

LONDON COMMERCIAL Co.,
P. B. 165, (S. M. M.) LAHORE (India)
(EAB)

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

நௌகா சரிதம்—8-பாட்டு

I

கண்ணிகள் (ஓடப்பாட்டு)

1. ஏனோமு நோசிதிமோ-செலுல-ஏதானமொஸகிதிமோ
ஸ்ரீ நாது கொலுவமரெ செக்கிள்ளு நொத்து சுனு
மானகமோ வானுசு சந்த்ரானனு ஹ்ருதயானனுஞ்ச
2. ஸ்த்ரீ ரத்னமுலு மனமு-செலுலு-ஸ்ரீமிஞ்சு யௌவனமு
வாரிஜ லோசனுடுமாபாலாயே கதவம்மா
கோரிகலீடே ரெனு யது வீருனி கனுலார ஜூட
3. பங்காரு ஸொம்முலனு-செலுலு-பாகுக பெட்டு கொனி
ச்ருங்காராம்பரமுலனு செலுவொந்த கட்டு கொனி
ஸங்கதி கானங்கமுலு சுபாங்குனிகி ஒஸங்கக மனமு
4. பொங்காரு யீ நதிலோ-செலுலு-பொந்துகா குமி கூடி
மங்களாகாருனிதோ மனஸார கூடி திமி
ரங்கபதியுப் பொங்குசு மன செங்கடனு ஜெலங்கக மனமு
5. வாகீ சாத்ய மருலகு-செலுலு-வர்ணிம்ப தர மௌன
த்யாகராஜாப்துனிதோ போகமு லந்துசுனு
பாகுக தமிரேகனு நய ராக முலீலாகு பாட

II

செலுல!—ஸஹோதரிகளே
ஸ்ரீ நாதி—லக்ஷ்மீபதியான ஸ்ரீ க்ருஷ்ணபரமாத்மா
செக்கிள்ளு நொந்துசுனு—நமது கன்னங்களைக்கிள்ளி விளையாடிக்கொண்டு
கொலுவு அமரெ—நம் ஸமீபத்தில் கொலு வீற்றிருக்கவும்
மானக மோவானுசு—எப்பொழுதும் கிடைக்கத்தகாததென்று
சந்த்ரானனு—பூர்ண சந்திரன் போன்ற முகத்தையுடைய அந்தக் கண்ணனை
ஹ்ருதயனனுஞ்ச—நம்மனதில் வைத்து பூஜை செய்யவும்
ஏனோமு நோசிதிமோ—நாம் எவ்வித நோன்பு நூற்றேமோ
ஏதானமொஸகிதிமோ—எவ்வித தானதர்மங்கள் செய்திருக்கிறேமோ தெரியவில்லை.
செலுலு மனமு—சகோதரிகளாகிய நாம்
ஸ்ரீமூஞ்சு—லக்ஷ்மீகரம் பொருந்திய அழகுடனும்
யௌவனமு—யுவதிகளாகவும்
ஸ்த்ரீ ரத்னமுலு—உயர்ந்த நாரீமணிகளாகவும் (விளங்குகிறேம்)
வாரிஜலோசனுடு—தாமரை கண்ணனுகிய ஸ்ரீ கிருஷ்ணன்
மா பாலாயே கதவம்மா—நம் வசமாய் விட்டான் அல்லவா சகோதரிகளே
யது வீருனி கனுலார ஜூட—யாதவகுல வீரனய் அவதரித்த கண்ணனை கண்ணுரக் கண்டு மகிழ
கோரிகலு ஈடேரெனு—நம்முடைய இஷ்டங்கள் நிறைவேறிற்று
செலுலு—சகோதரிகளாகிய நாம்
பங்காரு ஸொம்முலனு—தங்க நகைகளை
பாகுக பெட்டுகொனி—நன்றாக அணிந்துகொண்டு
ச்ருங்காராம்பரமுலனு—விதவிதமான அழகிய ஆடைகளை
செலுவொந்த கட்டுகொனி—நன்கு உடுத்திக்கொண்டு
மனமு—நாம்
ஸங்கதி கான் அங்கமுலு—அழகிய நமது மேனியை
சுபாங்குனிகி—மங்களகரமான திருமேனிகொண்டு விளங்கும்
ஒஸங்கக—அர்ப்பணம் செய்ய (ஏனோமு) [கண்ணனுக்கு
செலுலு—சகோதரிகளாகிய நாம்
பொங்காரு யீ நதிலோ—மிகுந்த அழகுடன் விளங்கும் இந்த யமுனை நதியில்
பொந்துகா குமி கூடி—நாம் ஒன்று கூடி
மங்களா காருனிதோ—திவ்ய மங்கள ஸ்வரூபியான கண்ணனுடன்
மனஸார கூடி திமி—மனமார ஒன்று கூடி அவனுடன் புறப்பட்டு இவ்வோடத்தில் ஏறினேம்.
ரங்கபதி யுப்பொங்குசு—ரங்கபதியான ஸ்ரீகிருஷ்ணன் மிகுந்த
மன செங்கடனு—நம் சமீபத்தில் [களிகொண்டு
ஜெலங்கக—விளங்க
மனமு—நாம் (ஏனோமு)
செலுலு—சகோதரிகளாகிய நாம்
த்யாகராஜாப்துனிதோ—த்யாகராஜன் நண்பனை கண்ணனுடன்
போகமுலு அந்துசுனு—சகல இன்பங்களையும் அனுபவித்துக்கொண்டு
பாகுக—நன்றாய்
தமிரேகனு—போகங்களையும்
நயராகமுலு ஈலாகு பாட—இன்பமான ராகங்களையும் இவ்விதம் பாடிக்கொண்டு ஆனந்தத்தில் மூழ்க
ஏனோமு நோசிதிமோ—நாம் எவ்வித நோன்பு நூற்றேமோ!
ஏதான மொஸகிதிமோ—எவ்வித தான தர்மங்கள் செய்திருக்கிறேமோ தெரியவில்லை (இவ்வித பாக்யம்)
வாகீசாதி அமருலகு—ப்ரஹ்மாதி தேவர்களுக்கும்
வர்ணிம்ப தரமௌனே—வர்ணிக்க இயலாததாகும்

III

முன் கதைச் சுருக்கம்:—கண்ணன் வேணுகானத்தைக் கேட்டு பரவசமடைந்த கோபியர்கள் அவனுடன் யமுனா தீரம் சென்றனர். அங்கு யமுனையில் காணப்பட்ட ஓர் ஓடத்திலேறி குதூகலமாக பொழுது போக்க எண்ணங்கொண்ட கோபியர்கள், கண்ணனைத் தங்களுடன் அழைத்துச் சென்றால் ஏது நேருமோ என கவலை மிகுந்தவர்களானார்கள், அப்பொழுது ஸ்ரீ க்ருஷ்ணன் தனது உண்மை ஸ்வரூபத்தை விளக்கி அவர்களுக்கு சமாதானம் கூறினர். அதனுல் தைரியமடைந்த கோபியர்கள் மிகுந்த சந்தோஷத்துடன் கண்ணனுடன் ஓடத்திலேறினர்கள். பக்தைகளான கோபிகைகளுக்கு இன்பமூட்ட எண்ணி பகவான் ஒவ்வொரு கோபிகைக்கு ஒவ்வொரு கண்ணனுகக் காக்ஷியளித்து அருள் புரிந்தார். அப்பொழுது கோபியர்கள் பரவசமடைந்தவர்களாய் ஓடத்தை நடத்த ஆயத்தமானுர்கள்.

ஏனோமு:—இது நௌகா சரித்திரத்தில் 8-வது கீர்த்தனம். கண்ணனுடன் ஓடத்திலேறிய கோபிகைகள் யமுனா நதியில் ஓடத்தை மிதக்க விட்டு, துடுப்புகளின் உதவியால் ஓடத்தை நடத்தி ஆனந்தமாக ஓடப்பாட்டு பாடுகிறுர்கள்.

இக்கீர்த்தனத்தை ஓடப் பாட்டு என்றும் கூறுவதுண்டு. ஓடப் பாட்டின் வர்ணமெட்டு புன்னுகவராளி ராகத்தில் ஒருவிதமாக அமைக்கப்பட்டு நமது முன்னேர்களால் தொன்று தொட்டு வழக்கமாய் பாடப்பட்டு வருகிறது. அதற்கு பல்லவி, அநுபல்லவி, சரணங்கள் கிடையாது. கண்ணிகள் போன்று வர்ணமெட்டில் ரூபக தாளத்தில் அமைக்கப்பட்ட ஓர் இசை. ஆனுல் வழக்கமாக நமது நாட்டில் பாடப்படும் ஓடப் பாட்டுக்கு முதலில் நான்கு வரியிலுள்ள பாட்டு ஒரு விதமாகவும், மற்றவை வேறு விதமாகவும், கடைசியில் முடிவு ஒரு விதமாகவும் அமைக்கப்பட்டுள்ளது. ஆனுல் இங்கு 3 வரிகளே காண்கின்றன. ஆகையால் 3-விதங்களையும் அவைகளில் அமைத்துப் பெரியோர்கள் பாடி வந்துள்ளார். இந்தக் கீர்த்தனத்தில் கோபியர்கள் கண்ணனுடன் ஓடத்திலேறி மகிழும் பாக்கியம் தங்களுக்குக் கிடைத்ததால் களிகொண்டு தங்கள் தவப் பயனை எண்ணி பரவசமடைகின்றனர்.

* * * * * *

ராகம் புன்னுகவராளி — ரூபக தாளம்

8-வது மேள ஜன்யம்—ஆ. நிஸரிகமபதநி. அவ. நிதபமகரிஸநி.

(சதுஸ்ருதிரிஷபமும் சில ஸஞ்சாரங்களில் ஒலிக்கும்.)

1-வது சரணம்

ஸா ;	பா மா பா ;	தநி தப	பமகா ரிஸ நீ
ஏ .	நோ . மு	. . . . .	. . . .
; ஸரி	காரீ மாபம கரி	ஸா ;	ஸா ஸா ஸா ;
நோ .	சிதி மோ	.	செ லு ல
; ஸரி	காரீ ரிரி ஸா	நீ ;	; ; ; ;
மே .	தா . ன . .	. .	.
; ஸரி	காரீ மாபம கா	ரீ ;	ஸா ; ; ;
மொஸ	கிதி மோ . . .	.	.
ரீ க்ர	ரீ ஸஸ ஸ்ரி ஸா	நீ நீ	நீ ஸா கரிகா
ஸ்ரீ நா	து கொலு வம ரெ	செக் கிள்	ளு நொத்து சுனு
ஸா ப்ப	பா பா பப தப	பம பப்	தபமா கரிஸஸ
மா னக	மோ வானுசு சந்த்	ரா . னனு	ஹ்ருத யா னனுஞ்ச

(ஏ நோமு)

(மற்ற சரணங்களையும் இது போன்றே பாடவும்)

நோயற்ற வாழ்வு

ஸ்வரபேதம் என்னும் தொண்டை நோய்

★

வைத்யரத்ன பண்டித எம். துரைசாமி ஐயங்கார்

நாம் பேசும் பொழுதும் பாடும் பொழுதும் ஏற்படும் சப்தம் உண்டாவதற்கு நமது தொண்டைக்குள் சில சதைகளாலாகிய பெட்டி போன்ற ஓர் அவயவம் உண்டு. அதற்கு ஸம்ஸ்கிருதத்தில் ஸ்வரயந்திரம் (ஆங்கிலத்தில் லேரிங்ஸ்) என்று பெயர். இக்கட்டுரையுடன் அச்சிட்டுள்ள இரண்டு படங்களிலும் கவனித்தால் அந்த ஸ்வரயந்திரம் அமைந்திருக்கும் இடமும் வகையும் தெரியவரும். இது ச்வாஸநாளத்தின் மேல் பாகத்தில், கழுத்தின் முன்புறத்தில் கெட்டியாகவும் மேடாகவும் வெளியில் உணரப்படும் அவடு என்கிற அவயத்திற்கு அடிப்புறமாய் தொண்டையில் அமைந்துளது. இதன் மேற்புறமாக அதிஜிஹ்வா என்ற உள் நாக்கு இதை மூடினுற்போல் இருந்து வருகிறது. இந்த அவயவத்தைப்பற்றிய மற்ற விசேஷ விவரணங்கள் சரீரதத்துவத்திற் பயிற்சியில்லாத வாசக நேயர்களுக்கு அவ்வளவு அவசியமானவையல்லவெனக் கருதி அவற்றை இங்கு விஸ்தரித்துக் கூறவில்லை.

ஸ்வரபங்கம்

ஸ்வரயந்திரம் வீக்கங்கொண்டு (உண்மையில் இது வீக்கமல்ல—ஸ்வரயந்திர பாகம் எனக் கூறவேண்டும்.) குரலோசை மழுங்கி அழிந்துவிடும் வியாதியை ஸ்வரபங்கம் என்போம். ஸங்கீதம்பற்றியும், ஸபைகளில் பேசுவதைப்பற்றியும் பிரபலமான இயக்கங்கள் நடந்து வரும் இந்நாளில், இவ்விரு கலைகளும் செவ்வனே பெருமையடைவதற்கு மூலக் கருவியான ஒரு சிறு தொண்டைக்குள் அதினும் சிறியதாய், சப்தப் பிரஹ்மத்திற்கு ஆதாரமான ஆசயமாய் அமைந்துள்ள இவ்வரிய அவயவம் கோளாறடைவதையும், அதனுலாகும் துன்பங்களையும், அவற்றிற்குப் பரிஹார முறைகளையும் பொதுவாக அறிந்திருத்தல் அவசியமன்றே? ஸ்வரபங்கம் என்பது அவ்வயவத்தைப்பற்றிய முக்கிய வியாதியாகையால், அவ்விஷயம் இங்கு விவரிக்கப்படுகின்றது.

ஸ்வரயந்திரத்திற்குள் சிலேஷ்மகலை யென்ற வழ வழப்பான ஒரு வகை ஜவ்வுத்தோல் அவ்வவயவத்தைச் சுற்றிலும் பரவியுள்ளது. ஸ்வரயந்திரம் பாகம் (அழற்சியுடன் கூடிய வீக்கம்) அடைவதென்றால், முக்கியமாய் இந்த சிலேஷ்ம கலையே அக்கோளாறைப் பெறுகிறது. தருணாஸ்த்தி யென்னும் முருந்துச்சதையினுலான ஸ்வரயந்திரக் குழலின் உட்புறத்திற் சூழ்ந்துள்ள ஜவ்வும் ஸ்வரயந்திரத்தின் மேற்பகுதியில் மூடிபோல் அமைந்துள்ள அதிஜிஹ்வா என்ற உள்நாக்கும் பாகம் என்கிற அழற்சியைப் பெறுவதால் இவ்வியாதி ஏற்படுகிறது. முக்கியமாய் இதற்கு நான்கு காரணங்களைக் கூறலாம். (1)

ச்வாஸநாளம் தொண்டை முதலியதைப் பக்கவாட்டில் காட்டும் படம்.



1. அதி ஜிஹ்வா அல்லது உள்நாக்கு. 2. ஸ்வரயந்திரம். 3. ச்வாஸ நாவும். 4. அந்நவாஹி என்னும் உணவுக் குழல். 5. அலகு. (இது பெண்களுக்கும் ஆண்களுக்கும் ப்ருத்துக் காணும்) 6. ச்வாஸ நாளத்தின் ஒரு பாரிசக் கிளை,

ச்வாஸநாளம் தொண்டை முதலியதை நேர் முகமாகக் காட்டும் படம்.



1. ஸ்வரயந்திரம். 2. அதி ஜிஹ்வா, (உள் நாக்கு) 3. அவடு. 4. ச்வாஸ நாளம். 5. மார்புக்குள் ச்வாஸ நாளத்திலிருந்து இரண்டாகப் பிரியும் ச்வாஸ நாளக் கிளைகள்.

தொடர்ச்சியாக உரத்த குரலில் நெடுநேரம் பேசுதல் அல்லது பாடுதல். மேடைகளில் நின்று நெடுநேரம், பிரசங்கம் செய்வது, நாள்தோறும் உரத்துப் பேசி பாடம் கற்பிப்பது, அடிக்கடியும் பெரிய ஸபைகளில் உச்ச த்வனியில் ஸங்கீதப் பிரஸங்கம் செய்வது, வேதாத்யயநம் நீடித்துச் செய்துவருவது முதலியவை இவ்வகுப்பில் அடங்கும். (2) விஷகுணமுள்ள லாகிரி வஸ்துக்கள் கலந்த சுருட்டு முதலியதைக் கொண்டு தூமபானம் செய்வது, புகையிலையை அதிகமாக மெல்லுவது, அத்துடன் கொட்டைப்பாக்கு, ஜாதிக்காய் முதலியதை மென்று விழுங்குவது முதலியவை இரண்டாங் காரணத்தைச் சேர்ந்தவையாம், (3) கரிப்புகை, கனமான தும்பு தூசுகள், முக்கியமாய் கந்தகப் புகை முதலிய மருந்துச் சரக்குகளிலிருந்து கிளம்பும் தூமம் இவை தொண்டையைத் தாக்குவது, (4) பனி, குளிர்ந்த காற்று, மழைநீர்த் திவலைகள் இவைகளால் தொண்டைத்தாக்கப்படுவது, அல்லது வேறு காரணங்களால் கபம் விருத்தியாய் அவ்வவயவத்தைத் தாக்குவது.

நோயின் சின்னங்கள்

இக்கோளாறில் ஸாதாரணமாய் உண்டாகும் முக்கியக் குறி தொண்டைக் கம்மல் என்பதே: அதாவது பேசும் போது சப்தம் வெளிவராது. இருமலும் ஏற்படும்; பல முறை இருமல் உண்டாகச் சிறிது இரத்தங் கலந்த கோழை வெளியாகும். தேஹச்சோர்வும், பொதுவான அஸௌக்கிய நிலைமையும் காணும். ஆரம்பத்திலேயே ஏற்ற பரிஹாரம் செய்யாவிடில் மந்தஜ்வரம் ஏற்பட்டு, அதுவே கடுமையான ஜ்வரமாக மாறும். அப்பொழுது சில ஸந்நிபாத தோஷக் குறிகள் காணும், நாடி நடை கனத்துப் படபடத்துத் துடிக்கும். தொண்டையில் அழற்சியும் புண்ணும் உண்டாயிருப்பதாகப் பிணியாளி கூறுவான். எதையும் விழுங்குவதற்கு மிகக்கஷ்டமாயிருப்பதாகவும், சில ஸமயம் விழுங்குவதே அஸாத்யமாயிருப்பதாகவும் பிணியாளி அறிவிப்பான். அப்பொழுது தொண்டையைப் பரிசோதித்துப் பார்த்தால், அவ்வித ஸங்கடம் உண்டாயிருப்பதற்கு அவசியமான அடைப்பு முதலிய கோளாறு எதுவும் களமுகம் என்கிற தொண்டைக்குழியில் காணப்படுவதில்லை. இக்கஷ்டம் ஏற்பட்டதும் அல்லது அதற்குச் சிறிது முன்பும் சுவாஸம் விடுவதுகூட சிறிது கஷ்டமாகத் தோன்றும். மூச்சு இழுக்கும் போது சுவாஸ ரோகியை (ஆஸ்த்மா எனப்படுவது)ப் போல் ஒருவாறு நீண்டு இழுத்து அந்த உச்சுவாஸ வேலை நடைபெறும். பேசும் போது—பிணியாளி வழக்கம்போல் பேச முயன்றாலும்—உதடுகளும் நாக்கும் அசைவுமே யின்றி தொண்டையிலிருந்து தொனி வெளிவராது. கோளாறு விருத்தியான நிலைமையில் முற்கூறிய மற்றக் குறிகள் யாவும் அதிகரிக்கும். முகம் ஊதிப் பருத்தாற் போல் மாறி, பிறகு வெளுத்து அல்லது சிறிது நீலநிறமடைந்து காணும். அவனது பார்வை மிகக் கவலையுற்றதாகவும் ஏதோ பயத்தில் ஆழ்ந்தது போலவும் தோற்றும். கடைசியாகக்கூறிய குறிகளும். மூச்சுத் திணறுவது போன்ற ஸங்கட நிலைமையும் மிகக் கடுமையான ஸந்நிபாத ஸ்வரபங்க ரோகத்திலேயே அபாயாவஸ்தையை அறிவிப்பவையாகும். மிகவும் கடுமையான ஸ்வரபங்க வியாதி வெகு துரிதமாய் அதன் அபாயக்குறிகளைக் காட்டி, சிலருக்கு நான்கு அல்லது ஐந்து தினங்களுக்குள்ளேயே சுவாஸ பந்தந ரூபமான கடைசி நிலைமையை யுண்டு பண்ணி பிராணுபாயம் விளைவித்ததுண்டு. உடனே சிகிச்சை வேண்டும்.

தொண்டையினுள் ஸ்வரயந்திரம் தாபம் கொள்ளும் போது ஆரம்பத்தில் கடுமையான ஜலதோஷத்துடனே அல்லது தொண்டைப் புண்ணுடனே அது துவங்குவது வழக்கம். முற் கூறிய காரணங்களைத் தவிர சூகதோஷ மென்கிற மேஹ விஷங் காரணமாகவோ, க்ஷய தோஷங் காரணமாகவோ, இது உண்டாவதுண்டு. இவ்வாறு ஸ்வர பங்கம் என்பது ஏற்பட்ட பிறகு, சில நாள் தொண்டைக் கம்மலை யுண்டு பண்ணி விட்டு, அதன் பிறகு சுயமாகவோ சொற்ப சிகித்ஸையினுலோ தணிந்து குணமாய் விடும். க்ஷய ரோக ஸம்பந்தமானுலும், ஸந்நிபாத தோஷ ஸம்பந்தமானுலும் இருந்தால் ஸ்வரயந்திரம் முற்றிலும் செயலற்றுப் போய் தொண்டையிலிருந்து சப்தமே தோன்றுமல் நிலையான கோளாறும் ஏற்படலாம்; அல்லது ச்வாஸ பந்தநம் ஏற்பட்டு மூச்சுத் திணறி பிணியாளி உயிர்துறப்பதும் உண்டு. இம் மூன்று நிலைமைகளில் முதலிற் கூறியது தான் ஸர்வ ஸாதாரணமானது; பிந்திய இரண்டும் அபூர்வமாய் நேரிடுபவை. குழந்தைகளுக்கு இவ்வியாதி கடுமையாக ஏற்பட்டு மூச்சடைப்பால் முடிவில் மரணத்தை யுண்டு பண்ணுவதுண்டு. நீடித்த ஸ்வரபங்க ரோகம் சிலருக்கு சில வாரங்களும் இரண்டொரு மாதங்களும் தொடர்வது வழக்கம். ஸ்வரயந்திரத்தில் தாபநம் வெகு கடுமையாகவும் பலமாகவும் கண்டால் உடனே ஏற்ற சிகித்ஸை செய்யாவிடில் அது பிணியாளிக்கு அபாயம் விளைவிக்கும். மிகக் கடுமையான ஸ்வரபங்கத்தில் தொண்டையின் உட்புறம் மிகச் சிவந்து காணும்.

சிகிச்சை

ஸாதாரணமாய் தொண்டைக் கம்மலும், பேச முடியாமையும் தோன்றியவுடனே—இவ்விதம் காலை வேளையில் தான் பெரும்பாலும் தோன்றும்—குளிர்ந்த காற்று கழுத்தைத் தாக்காதபடி அதைக் கம்பளியினால் போர்த்துக்கொள்வதுடன், அதிகாலையிலும் மாலையிலும் வீட்டுக்கு வெளியில் ஸஞ்சரிக்காமலிருப்பது அவசியம். வெள்ளைக் கடுகைச் சிறிது தண்ணீர் விட்டு அரைத்துக் கொதிக்க வைத்து மேலே கழுத்தில் கனமாகச் சற்று நேரம் வைத்திருந்து எடுத்து விடலாம். தொண்டையின் மேல் சூடாக ஒற்றடம் கொடுத்து வரலாம். ஸைந்தவாதிக்வாதம், ஸ்ரம்ஸநவடி இவ்விரண்டில் எதையேனும் ஒன்றைத் தகுந்த அளவில் (மூந்தியது 3 அல்லது 4 மாத்திரை பிந்தியது நாலைந்து அவுன்ஸாக) உட்கொண்டு, மலம் தாராளமாக வெளியாகச் செய்வதும் நலம். அல்லது சிவதை வேர், ½ பலம் நிராவாரை ¼ பலம், சூரத்துக் கடுக்காய்த் தோல் ¼ பலம், சரக்கொன்னைப் புளி ½ பலம்; இவற்றை இடித்து அரைப்படி ஜலத்தில் போட்டு கொதிக்க வைத்து, நாலில் ஒரு பங்காக வற்றியதும் வடிக்கட்டி, ஒரு தேக்கரண்டி யளவு பனங்கற்கண்டு கூட்டிப் பருகினாலும் நன்கு விரேசநம் (சுகபேதி) ஆகும். இதன் பிறகு தொண்டையிலுள்ள சிலேஷ்மம் வெளிப்படவும், தொண்டை அழற்சி தணியவும் அனுகூலமான "காஸஹர ரஸாயனம்" என்னும் ஷர்பத்தை வேளைக்கு ஒன்று முதல் மூன்று தேக்கரண்டியளவாக வயதுக்கும் வியாதி நிலைமைக்கும் ஏற்றவாறு மூன்று அல்லது நான்கு மணி நேரத்திற்கு ஒரு முறை இரண்டு மூன்று நாட்கள் உட்கொண்டு வரலாம். கஸ்தூரி பைரவம் என்னும் மாத்திரை இருந்தால் அதை வேளைக்கு இரண்டு மூன்று மாத்திரை வீதம் சிறிது சுக்குக் கஷாயத்துடன் தினத்துக்கு மூன்று முறையுபயோகிக்கலாம்.

அட்டையின் மூலம் உதவி

ஆனால் வியாதி கடுமையாயிருந்தால் சிறிது பலமான சிகித்ஸையை விரைவில் செய்ய வேண்டும். தகுந்த வைத்தியனைக் கொண்டு சிகிச்சை செய்து கொள்வது அவசியம். தொண்டைக்குக் கீழே மார்பின் மேல் இரண்டு மூன்று அட்டைகளை விட்டு இரத்தம் உறியச் செய்வது நல்ல முறை. பிணியாளி குழந்தையாயிருந்தால் குளிர்ந்த காற்று மேலே வீசாதபடி படுக்கையில் விட்டுக் கதகதப்பாகப் போர்த்துப் பாதுகாக்க வேண்டும் சூடான நீராவியை அடிக்கடி உறிஞ்சச் செய்யலாம். கழுத்தின் மேலும் மார்பிலும் சுடச்சுட ஒற்றடம் கொடுத்து வரலாம். கபகேதுவடி மாத்திரையும் காஸஹர ரஸாயனமும் மூன்று மணி நேரத்திற்கு ஒரு தடவை உட்கொள்ளக் கொடுத்து வருவது அவசியம். குழந்தைகளுக்கு ஸ்ரம்ஸநவடி என்னும் மாத்திரை இக்கோளாறில் மலம் வெளியாவதற்கும் தொண்டையில் சேர்ந்துள்ள விஷநீர் குடல் மூலமாய் மலத்துடன் வெளிப்படுவதற்கும் வெகு உபயோகமான ஔஷதம்

இப்பிணியாளிகளுக்குக் கொடுக்கப்படும் உணவு சூடாகவும் திரவமாகவும் போஷணைக்கு ஏற்றதாகவும் இருத்தல் அவசியம். புழுங்கலரிசிக் கஞ்சி, சவ்வரிசி கஞ்சி, சூடான பசுவின் பால் வேறு சூடான பாண வகைகளும் அடிக்கடி உட்கொள்ளக் கொடுக்கப்பட வேண்டும்.

தொண்டையிலுள்ள அழற்சி தணிந்து, வியாதி நிவர்த்தியாகும் வரையில் பிணியாளியைப் பேசுவதற்கு தூண்டக் கூடாது. முற்றிலும் தொண்டைக் கோளாறு நீங்கிவழக்கப்படி பேசுவதற்கு அனுகூலமும் தேகபலமும் விருத்தியாகும் வரையில் ஸௌவர்ச்சலாதி க்ஷாரம் என்னும் உப்பை வெந்நீரில் கலந்து தினந்தோறும் இரண்டு தடவையாவது தொண்டையைக் கழுவி வர வேண்டும். இந்த உப்புத்திரவத்தினால், உணவு உட்கொள்ளும்போதெல்லாங்கூட தொண்டையைச் சுத்தம் செய்து கொள்வது நலம்.

சென்னைக் கார்ப்பொரேஷன் உதவி மேயர் ஸ்ரீ பார்த்தசாரதி. நாயகருக்கு வண்ணாரப்பேட்டை டிவிஷன் வாசிகள் ஓர் உபசாரம் நடத்தினர்.

'விஷம்' உண்ணும் குழந்தைகள்

★

தேயிலை, காப்பி, ஆகிய பானங்களில் 'நிகோடின்' என்ற விஷமிருக்கிறது. ஸிகரெட்டுகளிலும் இந்த விஷமுண்டு. மேனாட்டுப் பெண்கள் தினசரி 20 ஸிகரெட்டுகளுக்கதிகமாகக் குடிக்கிறார்களாம். இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளின் ரத்தத்தில் 'நிகோடின்' விஷமும் கலந்தே இருக்கிறதாம். ஆனால் அவ்விஷம் குழந்தைகளைப் பாதிப்பதில்லையென்கிறார். டாக்டர் ஹரிஸ் பெர்ல்மென் என்ற நிபுணர்.

ஸிகரெட் பழக்கமுள்ள 55 தாய்மார்களை டாக்டர். பெர்ல்மென் பரிசோதனை செய்து பார்த்தார். கடைசியாக அரை அங்குலம் இருக்கும் வரையில் ஒவ்வொரு ஸிகரட்டையும் பிடிக்குமாறு அவர்களிடம் அவர் தெரிவித்தார். 'நிகோடின்' உடலுக்குள் கலந்து கொள்வதற்காக மூக்கு வழியாகப் புகையை விடும்படி சொன்னார். குழந்தைகளை வைத்துக் கொண்டபடியே தாய்மார்கள் ஸிகரெட்டுகளைப் பிடித்தார்கள். தாய்ப்பாலில் 'நிகோடின்' கலந்திருந்தது. ஆனால் ஒவ்வொருவருடைய குழந்தையையும் அவ்விஷம் பாதிக்கவில்லை.

புதிதாகப் பிறந்த குழந்தைகள் எந்த அளவு வரை 'நிகோடின்' விஷத்தை உட்கொண்டு அதைச் சமாளிக்க முடியும் என்பது தெரியவில்லையென்று டாக்டர் தெரிவித்தார்.

ஆனால் பிறக்குமுன்னரே அக்குழந்தைகளுக்கு 'நிகோடின்' விஷத்தைச் சமாளிக்கும் சக்தி ஏற்பட்டுவிடுகிறதென்று அவர் சொன்னார்.

★

அட்டைப் படம்

★

"பாலநாகம்மா"வில் காஞ்சனமாலா.

ஆயுர்வேத ரத்ன எஸ். பி. பிள்ளை
(ஆர். ஐ. யம். பி.) அவர்களின்

நெக்டார்	5 அவ். புட்டி 1க்கு	1-4-0
கிரைப் வாட்டர்	5 ,, ,, ,,	1-4-0
ஓமவாட்டர்	24 ,, ,, ,,	1-2-0
இங்கிலீஷ் வெனிசர்	24 ,, ,, ,,	1-4-0
சர்ம வியாதி நிவாரணி	100 மாத்திரை	1-0-0
பற்பொடி	20 பொட்லம்	1-4-0
கால்ரா பவுடர்	6 வேளை மருந்து	1-0-0
சுவர்ணள் சம்மர் ஆயில்	4 அவு. பு. 1க்கு	2-0-0
பாவலூர் ரிடைனே பில்ஸ்	20க்கு	1-4-0

தபாற்செலவு வேறு. மருந்தின் பாதிக்கிரயம் முன் பணமாக அனுப்பப்படவேண்டும்.
கிடைக்குமிடம்:
ஸ்வர்ண ஸ்டோர்ஸ்,
19, மீரான் சாயுபு தெரு.
மவுண்ட் ரோடு :: சென்னை.

வைத்திய ரத்னம் பண்டித
எம். துரைஸ்வாமி ஐயங்கார், ஏ. கே. ஏ. ஸி.
ஆயுர்வேத பூஷணம், ஆயுர்வேதாசார்ய அவர்களுடைய மேற்பார்வையில் தயார் செய்யப்படும் சித்தௌஷதங்கள்.

ஸித்தயோக ரஸம்
ஸ்தூல தேஹம், பிளட் பிரெஷர் (High Blood-Pressure) என்னும் வாதரோகம், நீரிழிவு, ஆகிய ரோகங்களுக்கு 100 மாத்திரை ரூ. 11. 50 மாத்திரை ரூ. 6.

மாதுலுங்க ரஸாயனம்
பசியின்மை, அரோசகம், பித்தக் கோளாறுகள், கர்ப்பிணிகளின் பித்த விகாரங்கள், குமட்டல் முதலியதை தீர்ப்பதில் இணையற்றது. குழந்தைகளும் பசிதீபனத்திற்குக் குளிர்ச்சிக்கும் அருந்தக்கூடியது. தேன்போன்றது. 1 பவுண்ட் ரூ. 5. 6 அவுன்ஸ் ரூ. 2.

ஹரீதக்யாதி லேஹ்யம்
எவ்வித மலபந்தத்தையும் நிவ்ருத்திக்கும் ஸங்கடமுமில்லாமல் நாள் தோறும் மலத்தை வெளிப்படுத்தும். இரத்தழலம், வயிற்றில் உப்பஸம் இவற்றிலும் மிக்க உபயோகமானது. குழந்தைகர்ப்பிணி அனைவரும்உபயோகிக்கலாம். 1 பவுண்டு புட்டி ரூ. 3.

லோஹாஸவம்
இரத்த சுத்திக்கும் இரத்த விருத்திக்கும் இன்றியமையாத அயத்திராவகம். பாண்டு ரோகம், பலயீனம், சொறி, சிரங்கு முதலிய சர்மரோகங்கள் இவற்றால்வருந்துபவர் அவச்யம் உபயோகிக்கக்கூடியது. 1 பவுண்டு ரூ. 4.

இராஜாம்ருகாங்கம்
க்ஷயரோகத்தைத் தீர்ப்பதற்குச் சாஸ்திரத்திலும் அனுபவத்திலும் மிகப் பெயர்பெற்றது. பல க்ஷயரோகிகள் வேறு சிகித்ஸைகளால் குணமடையாமல் இதனால் சுகமடைந்திருக்கிறார்கள். 100-மாத்திரை ரூ. 10. 50 மாத்திரை ரூ. 5—8—0.

ஸித்த மகரத்வஜம்
தாது புஷ்டியை விருத்தி செய்ய ஆண், பெண் இருபாலரும் உபயோகிக்கக் கூடிய சாஸ்திரப் பிரஸித்தமான சித்தௌஷதம், தங்க பஸ்மம் கலந்த ஆர்யன் பார்மஸியாரின் ஸித்த மகரத்வஜமே மிகவும் நம்பிக்கையுள்ளது. 1 தோலா செந்தூரம் ரூ. 25. மாத்திரையுருவாக 100மாத்திரை ரூ. 15. 50 மாத்திரை ரூ. 8. 25மாத்திரை ரூ. 4-8-0

சர்மரோகாந்தக லேபம்
எச்சில் தழும்பு, மேகப்படைகள், சொறி, சிரங்கு முதலிய தோலைப்பற்றிய கடுமையான வியாதிகளை சீக்கிரத்தில் நிச்சயமாகவும், திருப்திகரமாகவும் தீர்க்கக்கூடியது நூற்றுக்கணக்கானபேர்சுகமடைந்திருக்கிறார்கள். பெரிய டப்பி ரூ. 1—4—0 சிறிய டப்பி அணா 12.

குறிப்பு:—எதற்கும் தபால் சார்ஜ் பாக்கிங் சார்ஜ் முதலியது வேறு..

வேறு சாஸ்த்ரீய ஔஷதங்களும் கிடைக்கும்.
(வியாபாரிகளுக்கு விசேஷ கமிஷன்)
"ஆர்யன் பார்மஸி — "ஆர்ய கிருஹம்"
11, ஆதியப்ப முதலித் தெரு :: வேப்பேரி போஸ்டு :: மதராஸ்.

மூப்பு

ஸ்ரீ "உக்ர." எழுதியது

★

1

பாலியப் பருவம் கழிந்தவுடனே கிளரொளி இளமை புன் முறுவல் பூக்கிறது. முதுமையை அடைந்தவுடனே, அது தேம்பித் தேம்பி அழுகிறது. அந்தக் "கழிப்பதி"ல் துன்பம் இல்லை; இன்பம் இருந்தது. இந்த "அடைவதி"லோ இன்பம் இல்லை; துன்பம் மட்டும் இல்லை; நரகமும் இருக்கிறது. பாலியத்தை இழத்தல்—"ஆஹா! ஆஹா!" முதுமையை அடைதல்-"ஐயோ! ஐயோ!"

* * *

பாலியப் பருவம் பதினைந்து ஆண்டுகள் கடுந்தவம் புரிந்து என்ன பயன் பெற்றது?-இளமையாகிய உருவத்தில் வீழ்ச்சி! இருபது வருஷ காலம் சில சமயம் பணத்தின் பின்னும், சில சமயம் காரிகையின் எழிலின் பின்னும், சில சமயம் புகழின் பின்னும், சில சமயம் மரியாதையின் பின்னும் ஓடியோடி அலைந்த பின்பு இளமைக்கு என்ன கிடைத்தது? மூப்பாகிய ஓலையில் வீழ்ச்சி, அப்புறம் மூப்பு மணிக்கணக்காக மூக்கைப் பிடித்துக் கொண்டு, இறைவனை இறைஞ்சி யோகம் பயின்று, பிள்ளைகளுக்கு "படாலிய"னும் பெண்களுக்கு "பாட்டரி"யும் தயார் செய்து கொடுத்து, எந்தப் பரமார்த்தத்தைச் சாதித்தது?—அதே தான்: வீழ்ச்சி. என்னைக் கேள். நான் சொல்லுகிறேன்; மார்பைத் தட்டிச் சொல்லுகிறேன்: "வாழ்வின் பொருள் வீ...ழ்...ச்..சி."

* * *

தினந்தோறும் நடக்கிறது. நீயும் பார்க்கிறாய்; நானும் பார்க்கிறேன்; உலகமும் பார்க்கிறது. காலையில் உதயமலையின் தலைமேல் விளங்கும் கதிரவன் எவ்வளவு ஆனந்தத்தோடு இருக்கிறான்! அவன் நங்கை நல்லாள் 'உஷா'வுடன் விளையாடி கங்கைக் கரையையும், அலைகளையும், மந்தமான மலய மாருதத்தையும், நீல நிற ஆகாயத்தையும், பத்துத் திசைகளையும், கிழ்த் திசையெனும் மாதின் சேலைத் தலைப்பையும் கிளரொளியினாலும் அன்பினாலும் ரோஜா வர்ண மயமாக்குகிறான். தன் முன்னால் உலகத்தின் ஆட்டத்தைக் கண்டு, மூடனை ஆதித்தனும் அதே ஆட்டத்தை ஆடுகிறான். வாழ்வின் பொருள் இன்பம் என்று கருதுகிறான். ஆனால், ஆனால்,......"

* * *

தினந்தோறும் தென்படும் காட்சி, நீயும் பார்க்கிறாய். நானும் பார்க்கிறேன்; உலகமும் பார்க்கிறது. அந்தி வேளையில் அஸ்தாசலத்தின் அடியில் வீழ்ந்த—மூர்ச்சையடைந்த அந்தத் தினமணி, அந்தோ! களிப்பொழிந்தவனாய், களையிழந்தவனாய் இருக்கிறான். ரோஜா நிறமான அந்தப் பாலியம் இல்லை; அந்தக் கிளரொளி இளமை இல்லை; தளர்ந்த, மெலிந்த அந்த மூப்பு இல்லை; ஒளி இல்லை, அழகு இல்லை, சூடு இல்லை, ஆற்றல் இல்லை. அந்தச் சமயத்தில் ஆதித்யனுக்கு. நாள் முழுதும் அவன் செய்த கடுந்தவத்துக்கு, உலகத்துக்கு ரஸம் ஈந்ததற்கு, ஒளி கொடுத்ததற்கு என்ன பயன் கிடைத்தது?—வீழ்ச்சி! அக்கரையில்—மலையடிவாரத்தில் கடல் "ஐயோ, ஐயோ!" என்று கதறி ஓலமிட. வீழ்ந்த சூரியனின் செந்நிறச் சிதை எரிகிறது. அவன் தலைமேல் அந்தி வேளையெனும் சண்டாளன் நிற்கிறான். கிழக்கு நங்கையின் தங்கை துர்பாக்கியவதியான மேற்கு மங்கை 'தீயிடு'கிறாள். திசைகள் துன்புறுகின்றன; குருதிக் கண்ணீர் சொரிகின்றன. இயற்கையில் பயங்கரமான காம்பீர்யம் நிறம்பியிருக்கிறது. வீழ்ந்த பரிதியின் சிதையின் செந்நிறம் உலகம் முழுதும் வியாபித்திருக்கிறது.

* * * *

அந்தச் சமயத்தில் பார்ப்பவர்கள் பார்க்கிறார்கள். "வாழ்வின் உண்மையான பொருள் வேறு ஒன்றும் இல்லை; வீழ்ச்சிதான்" என்னும் ஞானம் ஞானிகளுக்கு உதிக்கிறது.

2

'வாழ்க்கையின் கருத்து வீழ்ச்சி' என்று பேசுதல் எளிது. சில உதாரணங்களினால் இந்த விஷயத்தை விளக்கி நிரூபிப்பதும் பெரிதல்ல. ஆனால் வீழ்ச்சியைக் கண்ணெதிரே கண்டு, வாழ்க்கையில் மேன்மையடைதல் கஷ்டமானது மட்டுமல்ல; அது செய்ய இயலாத காரியம்.

அன்று ஒரு நாள் நான் தெருவில் போய்க்கொண்டிருக்கையில், சில துஷ்டப் பையன்கள் என்னைப் பார்த்தனர். அவர்களில் ஒருவன், "ஓடிப்போ! ஓடிப்போ! கிஷ்கிந்தையிலிருந்து இந்த வடிவம் இங்கே ஓடிவந்திருக்கிறது! என்ன அபூர்வமான உருவமடா!" என்றான்.

கிழவன் ஆகிவிடுவதனாலேயே மனிதன் குரங்காகிவிடுவானா? மூத்தோர்களுக்கு இவ்வளவு அவமரியாதையா!

வளைந்த இடுப்பை மெல்ல நிமிர்த்திக்கொண்டு, நான் அந்தப் பையன்களிடம், "பிள்ளைகளே, இன்று என் இடுப்பு வளைந்துவிட்டது. கண் பார்வை குறைந்துவிட்டது. செவிகள் தம் செயல் ஒழித்தன. இன்று, உலகத்துச் சித்திரங்கள் மறந்து போன கனவுகள்போல், என் முன்னே தோன்றித் தோன்றி மறைகின்றன. இன்று எனக்கு, உலகத்துச் சங்கீதம், இறந்த காலத்து ஒலியின் எதிரொலி போலத் தெளிவற்றுக் கேட்கிறது.

"இன்று நீங்கள் ஒன்றுமறியாத பேதைப் பாலகர்களாக இருக்கிறீர்கள். உலகம் மாறும் தன்மையது என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? ஒவ்வொரு பாலகனும்-பிழைத்திருந்தால்-இளைஞனாகவும், ஒவ்வோர் இளைஞனும்-கடிதில் மடியாவிடில்-ஒரு நாள் 'கிஷ்கிந்தைக் குரங்கா'கவும் ஆகிறான் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? பாலியமும் இளமையும் சேர்ந்து மூப்புக்குக் கொடுமை இழைப்பது போலவே, மூப்பும் அவைகளை ஹிம்சிக்கத்தொடங்கி விட்டால், கடவுளின் படைப்புத் தொழில் மூறிந்து விடும். குழந்தைகள் பிறந்தவுடனே கொல்லப்பட வேண்டும்! இளைஞர்களை, வயசு வந்தவுடனே, வயிறு வளர்ப்பதற்காக வீட்டுக்கு வெளியே துரத்திவிட வேண்டும்! உலகத்தில் பாட்டன் தேடிய பொருளை அநுபவிக்கும் வழக்கத்தை ஒழிக்க வேண்டும்!

"இன்றும்-இப்போதும்- நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது தணிகர்கள் தம் பாட்டனார்களின் அருளினாலேயே அரியணையில் அமர்ந்திருக்கிறார்கள். இன்றும்- இப்போதும்- ஆயிரத்திக்குத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது நவநாகரிக யுவகர்களுக்குப் பகட்டான உடுப்பு, சீப்பு, கண்ணாடி, 'ஒட்டோ' 'லெவண்டர்' ஸோப், பவுடர், பாலிஷ், வேசிகளுக்குத் தேவையான பொருள்கள், சாராயப் புட்டிகள்-இவைகளுக்கு வேண்டிய பணம், கிழவர்கள் சம்பாதித்துச் சேர்த்துக் கட்டி வைத்திருக்கும் பைகளிலிருந்து வெளி வருகிறது. இன்றும்—இப்பொழுதும் இரக்கம், அன்பு, கருணை, மனிதத்தன்மை என்னும் நிலங்களில் நீர் பொழிவது பலவீனமான மூப்பேயொழிய, மதியிலாத பாலியம் அல்ல; மதம் பிடித்த இளமையும் அல்ல.

"இப்படியிருக்க மூத்தோர்களுக்கு ஏன் இவ்வளவு அநாதரவு? ஏன் இத்தனை அவமானம்?" என்றேன்.

ஆனால் என் மொழிகள் அந்தச் சிறுவர்களின் காதில் விழவே இல்லை. எல்லாப் பையன்களும் "ஓடுங்கள், ஓடுங்கள்! குரங்கனார் கத்துகிறார்! நின்றால் உதை விழும்! அடி விழும்! குத்து விழும்!!" என்று கூறி ஓவென்று கூச்சலிட்டு ஓடினர்.

அந்தச் சமயத்தில் பல நாட்களுக்கு முன்பு-பல யுகங்களுக்கு முன்பு-பாலியமும் இளமையும் கூடியிருந்த தருணத்தில் நான் கண்ட இனிய கனவு என் நினைவுக்கு வந்தது. ஆ! என்னே அந்தக் கனவின் இனிமை!

"கமலம்"
மொழிபெயர்த்து

3

மூப்பு என்னும் நோய்க்கு மருந்தென்பதே இல்லை. இது ஒரு தலைநோய்; தலைபோனாலும் போகும், நோய் போகாது

* * * *

நான் பாலியமாகிய ஸ்வர்க்கத்தின் ஒப்பிலா இன்பத்தை அனுபவித்தேன். இளமையாகிய அமராவதியின் பலவிதமான போகங்களை நுகர்ந்தேன், இன்று மூப்பாகிய நரகத்தில் விழுந்து கிடக்கிறேன். அநுபவித்தே தீர வேண்டும். இந்த நரகத்திலிருந்து என்னை மீட்கக் கடவுளாலும் இயலாது என்றால், மனிதன் எம்மாத்திரம்!

மூப்பு ஒரு வீழ்ச்சி, அதன் எழுச்சி, ஒரே ஒரு சமயத்தில் தான், கொழுந்துவிட்டு எரியும் சிதையில்தான் உண்டாகிறது. இந்த நோய்க்கு ஏதாவது மருந்து உண்டென்றால். அது "கங்கை நீர்" ஒன்றே. வைத்தியன் உண்டென்றால், அவன் "நாராயணன்" ஒருவனே.

* * * *

நேரம் ஏன்? ஈசா, அருள் செய். 'ஸம்மன்' அனுப்பு. என் வாழ்க்கையைமுடித்துவிடு. இனி இந்த நரகத்தை என்னால் அநுபவிக்க முடியாது. என் வாழ்க்கை—விளக்கில் திரவம் இல்லை, திரி இல்லை, ஒளி இல்லை. அதை உடனே அழித்துவிடு.

* * * *

மறுபடியும் மறுபடியும், புதியன புதியன புதியனவாக, ஸ்ருஷ்டியும் பிறப்பும், பாலியமும் இளமையும், போகமும் சுகமும், விநோதமும் கவிதையும், அன்பும் பைத்தியமும், மானத்தில் அவமானமும், அவமானத்தில் மானமும் உண்டாகட்டும். நாங்கள் மறுபடியும் இளமையாகிய திராக்ஷை ரஸத்தைப் பருகிக் களித்துக் களித்துக் களித்து, இகலோகத்தையும் பரலோகத்தையும் பயத்தையும் சோகத்தையும், இதையும் அதையும் எல்லாவற்றையும், எங்களையும், ஈசனாகிய உன்னையும் மறப்போம்! அப்பொழுது வாழ்க்கையின் இன்பம் கிட்டும். உலகம் ஸ்வர்க்க மயமாக இருக்கும்.

* * * *

நேரம் ஏன்? ஈசா, அருள் செய். 'ஸம்மன்' அனுப்பு என் வாழ்க்கையை முடித்து விடு.

WANTED
Ladies and Gentlemen desirous of earning Rs. 100/- to Rs. 300/- P. M. in their spare time, without any investment at their place. Please write for full particulars to:
LONDON C. COMPANY, P.B. 165. S. M. LAHORE.
(EAB)